புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா

Pungudutivu Old Students' Association . Canada

22வது ஆண்டில்

# பூவரசம் பொழுது

2017



## மு.தவின் மெய்யுளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவு கிழக்கு மாவுதிடல்பதி
### அருள்மிகு
# ஸ்ரீ பெரிய காத்தவராயர் தேவஸ்தானம்



**என்னை எவன் தீவிரமாக விரும்புகிறானோ-அவன்**
**எப்போதும் எல்லா இடங்களிலும் என்னை காண்கிறான்.**

பெரிய காத்தவராயர் சுவாமி புங்குடுதீவு காத்தவராயர் ம



## ஆலய தர்மகர்த்தா இறைபணிச் செம்மல்
## திரு.நடராசா இரத்தினசிங்கம்
## ( காத்தான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவரசம் பொழுது

மு.தவின் மெய்யுள் இதழ் 2017

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் – கனடா

**METROPOLITAN CENTRE** 3340 FINCH AVE. E. SCARBOROUGH, ON M1T 3T4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெஞ்சினிக்கும் நிகழ்வுகளை
நினைவில் நிறுத்தி மகிழ்ந்திட
அழையுங்கள்
647 895 1248

Royal Creations
Creating Royal Touch Wedding & Memorable Events

- WEDDINGS
- PUBERTY CEREMONIES
- ENGAGEMENT PARTIES
- BABY & BRIDAL SHOWERS
- BIRTHDAYS & ANNIVERSARIES
- CHARITY GALAS & FUNDRAISERS
- CORPORATE MEETINGS & CONFERENCE PLANNINGS

(647) 895-1248
Royal Creations
Royalcreationscanada
royalcreationcanada@gmail.com
30 Gorevale Dr, Brampton, On L6P1N9

**THIVYAN NATHAN** **Wedding Planner | Events Coordinators**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!!
வாழ்த்துதுமே!!!

# Canada's National Anthem

O Canada
O Canada! Our home and native land!
True Patriot love in all thy songs command.
With glowing hearts we see thee rise,
The true north strong and free!
From far and wide, O Canada!
We stand on guard for thee,
God keep our land glorious and free!!
O Canada, we stand on guard for thee.
O Canada, we stand on guard for thee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு கீதம்

புங்குடுதீவெனும் பொன்னகமே
புங்குடுதீவெனும் பொன்னகமே – அலை
பொங்கும் கடலரண் சூழ்நிலமே!
தெங்க, பனை வளம் கொள்நிலமே – கமம்
செய்யம் பெருமக்கள் உய்வகமே

செல்வம கொழிக்கின்ற பெருவணிக் – கல்வித்
தேனை அளிக்கின்ற நல்லறிஞர்
வெல்லற் கரிதான நெங்சுரத்தோர் – சேர்ந்து
வாழும் தனித்துவத் தீவகமே!

தெய்வ அருட்கொடை கொண்டபதி – தொல்லை
தீங்க அனைத்தையும் வென்றபதி
உய்யவழி காட்டும் நான்மதம் – ஞானத்(து)
உண்மையில் ஒன்றெனக் கண்டபதி

கிழக்கதன் எல்லையே வல்லன் என்றால் – குறி
காட்டுவான் இறுபிட்டி மேற்கெனலாம்
செழிப்பொடு பெருங்காடு நடுவே உண்டு வீரா
மலை தெற்கே வடக்காக ஊரதீவாம்

ஏழ் சிறு தீவுகள் மத்தியிலே – நின்று
இயங்கி ஒளிகாலும் முத்தகமே1
யாழ்நகர் நெற்றியில் இட்டதொரு – விழிப்
பொட்டென நின்றொளிர் தீவகமே

கோயில், குளம், பள்ளி, கலைகளுண்டு – திசை
காட்டும் கலங்கரைத் தீபமுண்டு
வாயில் என நிற்கும் மடத்துவெளி – கற்பை
வழுத்திடும் கண்ணகித தெய்முண்டு

கரைகள் எங்கும் காவல் தெய்வமுண்டு – மணி
பல்லவத் தன்னையும் பக்கம் உண்டு
வரையில் வரலாற்றுப் பெருமையுண்டு – கண்ணன்
வாழுமோர் பிருந்தா வனமிதுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா கீதம்

புங்குடுதீவு மக்கள் நடாத்தும் விழா
பூவரசம் பொழுதல்லவா!

மாலையில் ஓர்நாள் மயங்கிடும் வேளையில்
மாண்புடன் நடத்திடும் மங்கள நிகழ்வுகள்
இதயங்கள் யாவும் இனித்திடும் இனிமையில் – என்றும்
இதை எண்ணி நெஞ்சங்கள் நிறைந்திடும் நினைவினில்
– புங்குடுதீவு

தீவகம் தன்னில் ஓர் புங்கை நகர்
தீந்தமிழ் வளர்ந்த எம் பூமியது
உலகெங்கும் உன் மக்கள் உயர்ந்திடுவார்! – அங்க
உன்பெயரை நிலை நாட்டிடுவார்!
– புங்குடுதீவு

முத்தமிழும் இங்கு ஒலிக்கின்றது
முந்தைய நினைவு தன்னை மீட்கின்றது
ஒன்று திரண்டு நாம் நடத்திடுவோம்
ஒவ்வொரு வருடமும் தொடர்ந்திடுவோம்!
– புங்குடுதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேன்மை கொள் சைவ நீதியும் தேமதுரத் தமிழும் உலகெலாம் விளங்கும் வகை செய்வோம்**

ரொறன்ரோ

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

## SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO

**புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் நடாத்தும் 22வது ஆண்டு பூவரசம் பொழுது விழா சிறப்புற ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருவருளுடன் வாழ்த்துகின்றேன்.**

கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் 22வது ஆண்டு முத்தமிழ்க் கலைவிழா. கனடா வாழ் புங்குடுதீவு மக்கள் அனைவரும் இணைந்து கொள்ளும் இனியநாள். நாம்பிறந்த மண்ணின் நினைவுகளையும், நாம் எம்மண்ணில் வாழ்ந்த பொற்காலத்தினையும், எம்மையெல்லாம் பெற்றெடுத்த பெற்றோர்கள், கல்வி கற்பித்த ஆசிரியர்கள், நல்வழிப்படுத்தி நெறிப்படுத்தியவர்கள், எம் மண்ணின் பெருமைக்குரியவர்கள் அனைவரையும் நினைவுபடுத்தி எம் உறவுகளுடன் உரையாடி மகிழ்வினைப் பகிர்ந்து கொள்கின்ற விழா. எம் ஊரின் செழிப்பினையும், வளங்களையும் நினைத்து மீண்டும் எமது ஊர் செழிப்பும், வளமும் நிறைந்த ஊராக அறிவிலும், ஆற்றலிலும், கலைகளிலும், உழைப்பிலும் உயர்வு பெறவேண்டும் எனச் சிந்தித்து அதனைச் செயற்படுத்த உறுதி பூணும் விழா. ஆம் அந்த நிகழ்வுதான் புங்குடுதீவு மக்கள் ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைந்து படைத்திடும் “பூவரசம் பொழுது”.

புலம் பெயர்ந்து வாழும் கற்றுணர்ந்த பலதுறை நிபுணர்களாக, பலதிறமைகள் கொண்ட எம்மண்ணின் மைந்தர்களின் அறிவுத்திறனையும், பொருளாதார வளத்தினையும் பயன்படுத்தி மீண்டும் எம்மண் அறிவிலும், ஆற்றலிலும், கலையுணர்விலும், தமிழ்மொழி உணர்விலும், சமயநெறி வாழ்விலும், வர்த்தகத் துறையிலும், விவசாயத்துறையிலும், சமூக நல்வாழ்விலும், வளம்நிறைந்த, பசுமைநிறைந்த ஊராகப் புங்குடுதீவு கிராமத்தை உருவாக்க ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம் எனும் குறிக்கோளுடன் எம் ஊரின் மக்கள் யாவரும் ஒன்றுகூடி விழா எடுத்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எமது ஊரை வளமான, செழிப்பான ஊராக மாற்றவேண்டும் எனும் நற்சிந்தனை அனைத்து நாடுகளிலும் வாழும் நம்ஊர் மக்களுக்கு ஏற்பட்டுள்ளமை வரவேற்கவேண்டிய விடயமாகும். எமது ஊரில் பசுமை நிறைந்த பயன்தரும் மரங்கள் வளர்க்கப்பட வேண்டும், பழைய வீதிகள், நீர்த்தேக்கங்கள் யாவும் புனரமைக்கப்பட வேண்டும், கால்நடை வளர்ப்புக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும், கல்வித்திறன் மேம்படுத்தப்பட வேண்டும், அறிவில் சிறந்த கல்விமான்கள், தமிழறிஞர்கள், சமயப்பெரியோர்கள், கலைஞர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் உருவாக வகை செய்தல் வேண்டும். அத்தோடு முக்கியமாக மதமாற்றங்கள் தடுக்கப்பட வேண்டும், கலாச்சார சீரழிவுகள், தீயபழக்கங்களுக்கு அடிமையாதலை முற்றாக ஒழிப்பதற்கான சமூக சீர்திருத்தங்கள் என பல நற்பணிகள் தற்பொழுது எமது ஊரில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றமை மகிழ்வைத் தருகின்றது. மேலும் தோட்டச்செய்கை, கால்நடைவளர்ப்பு, பாற்பண்ணை, கடற்தொழில், பெண்களுக்கான தையற்பயிற்சி, பனம்பொருள் கைத்தொழில் போன்றவையும் ஊக்கப்படுத்தப்பட வேண்டியுள்ள பணிகளாகும்.

கலைகளிலும், சமயநெறிமுறைகளிலும் முதன்மையுடன் திகழ்ந்த எமது ஊர் மீண்டும் தேமதுரத்தமிழறிவிலும், மேன்மை கொள் சைவநெறியிலும், கலைபண்பாடுகளிலும், விஞ்ஞானத்திலும், மெஞ்ஞானத்திலும் எம் எதிர்கால இளம்தலைமுறையினர் திறமைபெற வழி செய்யும் விந்தைமிகு விழாவான பூவரசம்பொழுது விழா மிகவும் சிறப்புற ஸ்ரீ வரசித்தி விநாயகரின் திருவருளுடன் வாழ்த்துகின்றேன்.



“அனைவரும் அன்பால் இணைவோம்”

“சிவாச்சார்யகலாநிதி” “சிவாச்சார்ய குலபூஷணம்”

**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள்** (ஐயாமணி சிவம்)


ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான ஸ்தாபகர், முதல்வர், பிரதமகுரு

புங்குடுதீவு 10 - கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான முதல்வர், பிரதமகுரு

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO
3025 KENNEDY RD. UNIT-10, SCARBOROUGH, ON. M1V 1S3 CANADA.
416.291.8500 www.vinaayagar.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரிடமிருந்து...

"எந்த வேர்வைக்கும் "வேர்" "வைக்கும்" என்கிற சொற்பதம் எனக்கு பிடித்தமானது. ஏன் என்றால் எமது நிர்வாக உறுப்பினர்கள் சிந்தும் வேர்வைக்கும் பலன் என் மண்ணில் கிடைக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

வறுமையில் சுழலும் மக்கள் கூட்டம் சமூக விரோத சமூகத்தை உருவாக்கும். என்பது யதார்த்தம். அந்த நிலை எமது ஊருக்கும் வந்து விட கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். எனவே ஊரில் வறுமை கோட்டிற்கு கீழ் இருக்கும் மக்களுக்கு அடிப்படை வாழ்வாதாரத்தை ஏற்படுத்தி கொடுக்க வேண்டிய தலையாய கடமை எம் கரங்களில் தங்கி உள்ளது. இதனை நாம் தவறவிட்டுவிடக் கூடாது என்பதை தங்களிடம் மன்றாட்டமாய் கேட்டுக் கொள்கிறேன்.

"பிச்சை புகினும் கற்கை நன்றே" எமது ஊரின் மாணவர்களின் பொறுபேறுகள் குறைந்து செல்லாமல் தடுத்து மாணவர்கள் கல்வித்தரத்தை மேம்படுத்த அக, புற சூழல்களை அவர்களுக்கும் சாதகமாக மாற வேண்டும். நல்ல சமூகத்தை உருவாக்கிவிட முடியும் என்பதே எமது சமூகம் தான் கை கொடுக்க முன்வரவேண்டும். வருவீர்கள் என்கிற நம்பிக்கை எனது உண்டு.

22வது ஆண்டுகளாக நடைபெறும் பூவரசம் பொழுதில் நின்று கொண்டு இருக்கிறோம். ஊருக்கான செயற்பாடுகள் பரவலாக்கப்பட்டு செயற்படுத்தப்படுகிறது. ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய ஊரில் வளர்ச்சியில் தங்கள் கரம்பற்றி செயற்பட விரும்புகிறோம். தாங்களும் ஒத்துழைப்பு தருவீர்கள் என நம்புகிறோம்.

**துரை இரவீந்திரன்**
தலைவர்
புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**PATRICK BROWN**
Ontario PC Leader

## The Leader of the Ontario Progressive Conservative Party

extends

## Congratulations

to the

## Canada Old Students Association of Pungudutivu

on hosting their

## $22^{nd}$ Annual Poovarasam Poluthu

December 10, 2017

Patrick Brown
Leader of the Ontario PC Party



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**PATRICK BROWN**
Ontario PC Leader

## Greetings from the Leader of the Ontario Progressive Conservative Party, Patrick Brown, on the 22nd Annual Poovarasam Poluthu

December 10, 2017

I am delighted to extend my warmest greetings to everyone in attendance tonight at the 22nd Annual Poovarasam Poluthu - hosted by the Canada Old Students Association of Pungudutivu.

I would like to thank the Canada Old Students Association of Pungudutivu's organizers and volunteers for their dedication and impressive achievements. I also commend all those who have continually contributed to the organization's growth over the years.

The Canada Old Students Association of Pungudutivu has done great work in the community and I commend them for their incredible contributions. Your efforts tonight helps to show that there is no shortage in the spirit of giving in our community.


On behalf of the Ontario Progressive Conservative Party, I wish the Canada Old Students Association of Pungudutivu a successful evening. I am confident the quality of leadership and commitment exhibited by the members will continue to elevate the organization to even greater heights in the future.

Kindest Regards,

Patrick Brown
Leader of the Ontario PC Party



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் உறவுகளே!

உங்களால் மண்ணின் நிறைவாய் எடுக்கும் பூவரசம் பொழுது கலை நிகழ்வில் நாம் சந்திப்பதையிட்டு அகமகிழ்வு கொள்கிறேன். ஒரு மனிதனுக்கு ஆர்வமுள்ள துறை ஒரு தவிர்க்க முடியாத போதை என்கிற அளவுக்கு அழுத்தி விடுவதுண்டு. அப்படி ஒரு நிலையே எனது இள வயதினிலே சமூக ஆர்வம் ஏற்பட என் மூதாதையர்கள் காரணமாக இருந்தனர். அதுவே எனக்குள் அழுந்திப்போனது.

சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 22 வது வருடத்தை எட்டியுள்ளோம். ஆனால் ஒரு சிலரே இந்த சங்கத்துக்கு தொடர்ந்து பங்களிப்பு செய்கிறார்கள் என்பதை சற்று வேதனையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு அவர்களை மட்டும் குறை சொல்ல வரவில்லை. எமது சங்கத்தின்பாலும் குறை உண்டு.

இந்த நிலை மாற வேண்டும். புங்குடுதீவு மக்களுக்கு கனடாவில் ஒரு சங்கம் தான் உண்டு. அது புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் மட்டுமே. இன்று செயலாளராக உங்கள் முன் நிற்கும் எனக்கு என்ன உரிமை உண்டோ அதே அளவு உரிமை எம் ஊரில் பிறந்து புலம் பெயர்ந்த அனைவருக்கும் உண்டு. இதுவரை ஊருக்கு என்ன செய்தீர்கள் என சிலர் கேட்கிறார்கள். அவர்கள் கேள்வி நியாயமானது. சிந்தனை சரியானதா? உங்களிடமே பதிலை விட்டு விடுகிறேன். .

எமது நிர்வாகம் பின்வரும் விடயங்களை முன் வைத்து உங்கள் ஆணைக்காய் காத்திருக்கிறது.

1. தாயக மாணவர்களின் கல்வியை மேற்படுத்துதல்.
2. பாடசாலைகளின் மலசலகூட வசதிகளை வசதியை மேம்படுத்தல்.
3. தண்ணீர் வசதியை ஏற்படுத்த இத்திட்டங்கள் ஒரு சில ஆயிரம் டொலர்களுடன் நிறைவேற்றக் கூடியதல்ல. பல ஆயிரம் டொலர்கள் தேவைப்படுகிறது. இதற்கு உங்கள் உதவியை நாம் நாடி நிற்கிறோம்.

“மனம் ஒரு விதை. தன் தளிரை எத்திசையை நோக்கி அது நீட்டும் என்பது முளைக்கும் வரை யாருக்கும் தெரிவதில்லை. ஆனால் நாம் விதையாகும் போதே எமது தளிர் எம்மண்ணை நோக்கியே நீளும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. காலம் கனிந்துள்ளது. காரியமாற்றும் காலமிது. உறவுகளே நீங்கள் கை தாருங்கள். நாங்கள் காரியத்தை சாதித்துக் காட்டுகிறோம்.

அறிவின் கட்டளைக்கும் மரபுகளின் விதிகளுக்கும் அடிபணியாமல் தன்னிச்சையாக பயணிப்பவர்கள் அல்ல நாம். உங்களின் அபிலாசைகளுக்கும் அர்த்தம் கொடுப்பவர்களாக செயற்பட விரும்புகிறோம். எங்களை விட எமது இளம் தலை முறையினரால் இன்னும் சிறப்பாக செய்ய முடியும் அவர்கள் முன்வர வேண்டும். அப்படி ஒரு நிலையையே நான் எதிர்பார்த்து உங்கள் முன் நிற்கிறேன்.

எதையும் எம்மவர்களால் சாதிக்க முடியும் என பெருமிதம் கூறி நிற்கிறேனோ, அதற்கு ஆதரவு தருபவர்கள் எமது விளம்பரதாரர்களே அவர்கள் வெற்றி பெற நீங்கள் உதவ வேண்டும். அவர்கள் பெருந்தன்மையுடன் எமக்கு உதவுவார்கள்.

அன்புடன்
**தி. கருணாகரன்**
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் அன்பு உறவுகளே!

இன்று 22வது அகவையில் கால் பதிக்கின்ற பூவரசம் பொழுதினையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு இவ்வளவு காலமும் தங்களது பெறுமதிமிக்க நேரத்தினையும், பணத்தினையும் உவந்தளித்த மண்ணின் மக்களுக்கும், மற்றும் விளம்பரதாரர்களுக்கும் நன்றி.

இன்று இக்கனடா நாட்டில் ஒரு நாய்குட்டி அல்லது பூனைக்குட்டி வைத்திருந்தால் அவர்கள் கொஞ்சம் பணக்காரர் என்று எண்ணுகின்றோம். அதோடு நாங்கள் கடற்கரை போய் அல்லது எங்கள் வள்ளத்தினை வேகமாக ஓட்டி மகிழ்கின்றோம். இல்லையென்றால் கூழ் காய்ச்சி எல்லோரும் குடித்து மகிழ்கின்றோம். இப்போது மண் பானையில் கறி, சோறு காய்ச்சி படம் எடுத்து Whatsupல் போட்டு மகிழ்கின்றோம்.

1950களிலோ அல்லது 1970களிலோ எமது பெற்றோர் புங்குடுதீவு மண்ணில் ஒன்றிற்கு மேற்பட்ட நாய் குட்டி, பூனை, ஆடு, மாடு, கிளி, கோழி எல்லாம் வளர்த்து மகிழ்ந்ததோடு மட்டுமல்லாமல், மண்பானையிலும், சட்டியிலும் கூழும், சோறும் ஒவ்வொரு வேளையிலும் சாப்பிட்டவர்கள். ஒன்றாறியோ நீர்வீழ்ச்சிக்கு பதிலாக இந்து சமுத்திரத்தின் கடற்கரையிலேயே தமது வாழ்நாள் முழுக்க வாழ்ந்தார்கள்.

சொல்லப் போனால் எமது புங்குதீவு மண் Hawai, Carebean நாடுகளுக்கு ஒப்பானவை. எமது பெற்றோர்கள் எல்லா வசதிகளுடன் 1950ற்கு முன்பே வாழ்ந்தவர்கள். எனவே அன்பானவர்களே எமது மண் இவ்வுலகில் ஓர் முத்து அதனை பாதுகாத்து, பராமரிக்க வேண்டியவர்களாக இன்றைய இளைஞர்கள் உள்ளனர்.

உங்கள் ஒரு துளி நேரத்தினையம் பணத்தினையும் செலவு செய்து உங்கள் மண்ணையும் அங்கு இருக்கின்ற மக்களையும் பராமரியுங்கள்.

தர்மம் தலை காக்கும்
தக்க சமயத்தில் உயிர் காக்கும்.

நாகேசு பகீரதன் (BA.dip)
பொருளாளர்
கனடா – புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் – கனடா 22 இரண்டாவது ஆண்டாக நடத்துகின்ற "பூவரசம் பொழுதுகள்" நிகழ்வில் சிறப்பு விருந்தினராக லண்டனில் இருந்து வருகை தந்து கலந்து கொள்வதனையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்.

ஒவ்வொரு வருடமும் இந்த பூவரசம் பொழுதுகள் அரங்குக்கு எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்த பெரியவர்களின் பெயரைச் சூட்டுவதும் இவ்வாண்டு அரங்குக்கு பேராசியர் அமரர் சிவசாமி அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளமையும் சாலப்பொருத்தமானது என கருதுகின்றேன்.

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற சொல்லுக்கிணங்க புங்குடுதீவின் மைந்தர்கள் பன்னெடுங்காலமாக தேடல் நோக்கிய பயணத்தினை மேற்கொண்டவண்ணமாகவே உள்ளனர்.

இன்றைக்கு பல்வேறு நாடுகளிலும் எமது ஊரினைச் சேர்ந்தவர்கள் புலம்பெயர்ந்து வந்து வாழ்ந்துவருகின்றனர். புலம்பெயர் வந்தபோதும் தமது வாழ்க்கைமுறையை செவ்வனே செய்து பல சாதனைகளை படைக்கின்றனர்.

மேலும் எமது பிள்ளைகள் உலக அரங்கில் பலதுறைகளிலும் முன்னணியில் விளங்குகின்றனர். கல்வியில் சிறந்து விளங்குவது மட்டுமல்லாது கலைகளிலும் சிறந்து விளங்குகின்றனர்.

எமது அடுத்த தலைமுறை புது வீறுகொண்ட ஆற்றல் மிக்க புதிய சமுதாயத்தினை படைக்கும் என்பதிலும் ஐயமில்லை.

எம்மண்ணுக்குச் சொந்தமானவர்கள் கனடிய மண்ணிலேயே அதிகமாக வாழுகின்றனர் என்பதுடன் மற்றைய இன மக்களுடனும் அந்நியோன்யமாக உள்ளனர். "புங்குடுதீவு மான்மியம்" என்னும் அரிய பொக்கிஷத்தினையும் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கதத்தினரே ஆக்கித் தந்தனர் என்பதனை நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.

பன்மொழிக் கலாசாரம் உடைய கனடிய மண்ணில் எமது ஊரின் பெயரோடு இலங்குகின்ற "பூவரசம் பொழுதுகள்" பல்லாண்டுகாலம் நிலைத்திருக்க லண்டன், ஈலிங் கனகதுர்கையம்மனை வேண்டுகின்றேன்.

இவ்வண்ணம்

சொக்கலிங்கம் கருணைலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்த்துச் செய்தி

அன்பார்ந்த கனடாவாழ் புங்குடுதீவு மக்கள் அனைவருக்கும் எனதுத அன்பு வணக்கங்கள்

இலங்கை மணித்தீவின் வடக்கே அமைந்துள்ள ஸப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவு புலம் பெயர் மக்களின் நற்செயல்களினால் மன நெகிழ்வு கொள்கின்றேன். என் அம்மப்பாவும், என் அப்பாவும் புங்குடுதீவைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்பதை என் குடும்பத்தினர் தெரியப்படுத்தியதன் மூலம் அறிந்து மகிவும் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் சிறுவயதில் தாயகத்தைவிட்டு புலம் பெயர்ந்ததன் காரணமாக புங்குடுதீவு மண்ணை நான் இதுவரை பார்க்கவில்லை. சந்தர்ப்பம் சரியாக அமையும் போது புங்குடுதீவு மண்ணிற்குச் செல்வதற்கு மிகவும் ஆவலாக உள்ளேன். நானும் புங்குடுதீவு அடிக்கொடியில் தோன்றியதை எண்ணி பெருமை அடைகின்றேன். "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தனவே" என்பதற்கிணங்க, பிறந்த மண்ணான புங்கையூரின் பெருமையை புலம் பெயர் மண்ணான இப்புண்ணிய பூமியிலே கனடா நாட்டிலே பூவரசம் பொழுது என்னும் இந்த நிகழ்ச்சியை வருடா வருடம் புங்குடுதீவு மக்களையும் இணைத்து புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் நடாத்துவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மனம் நிறைந்த மண்வாசனை கமழும் நேரத்தில் பூவரசம் பொழுது இப்புண்ணிய தேசத்தில் வருடா வருடம் சிறப்புற நடைபெற என்னால் ஆன உதவிகளைச் செய்வேனென உறுதிகூறி, தொடர்ந்தும் பூவரசம் பொழுது வருங்காலங்களிலும் என் போன்ற இளந்தலைமுறையினரையும் உள்வாங்கி இறையருளோடு இவ்வருடம் போல், வருங்காலங்களிலும் வெகு சிறப்பாக நடைபெற எனது மனப்பூர்வமான வாழ்த்துதக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வாழ்க புங்குடுதீவு மக்கள்
வளர்க புங்குடுதீவு மக்கள் கலை
நன்றி

Ontario PC Scarborough Centre தொகுதி வேட்பாளர்
தேனுஷா பரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலரினுள் புகுமுன்...

வளமோடும், புகழோடும் விளங்கிய எமது மண்ணின் சிறப்புக்களை புத்தக வடிவில் வருடா வருடம் எடுத்து வரவேண்டும் என்ற எண்ணக்கருவில் ஆண்டுக்கொரு முறை புலருகின்ற பூவரசம் பொழுது இங்கு வாழுகின்ற தமிழ் மக்கள் அனைவரையும் தன்பால் ஈர்த்து கலைப்பரவசத்தில் ஆழ்த்துவது யாவரும் அறிந்ததே. இந்த ஆண்டில் புலருகின்ற அதன் 22வது பொழுதில் வெளிவரும் மலர் மண்ணின் நினைவோடு எல்லையினை தமிழ் நிலத்திற்கு சுட்டிக்காட்டி எல்லையில்லாப் பெருமை கொண்ட தமிழ் மொழிக்கு இலக்கணத் தோரணம் கட்டும் இந்த மலரின் சிறப்பு ஈழத்து இலக்கிய எழுத்துலகில் முற்போக்குவாதி எம்மக்களிடையே ஒரு மகத்தான மறுமலர்ச்சி கண்டவர். இந்த யுகத்தின் சத்திய காவலர் மு. தளையசிங்கம் அவர்களின் எழுத்து, சொல், பொருள் இலக்கணமும், பண்பாட்டு கலைகளும் உயிரியல், உளவியல், வாழ்வியல், பொதுவுடமை முதலியனவும் தன்னத்தே கொண்டு விபரித்திடும் விரிவானதொரு நூல் போர்ப்பறை. அதிலிருந்தும் போர்ப்பறை நூலின் அருமை பெருமையும் ஓர் சுரைக்குடுவையில் மாம்பழச் சாற்றை நிறைத்து வைத்துவிட்டு அதன் எப்பாகத்திலும் துளையிட்டு பருகினாலும் அத்தனையும் இனிப்பது போன்றதுதான் போர்ப்பறையும் அவரது கொள்கைகளும் சர்வோதய பெருந் தத்துவமும். முன்பு தமிழ் மக்கள் கடைப்பிடித்த வாழ்க்கை முறையில் பிற்போக்கு நிழல் படிந்தது போன்ற தோற்றமும் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த நமது சமூக அமைப்பின் பண்பாட்டு அடிப்படையை அறிந்து கொள்ள பூவரசம் பொழுது பூங்காவுக்குள் நுழைய வேண்டுகின்றோம்.

புரட்டுங்கள்...

பறியுங்கள்...

பதிவு செய்யுங்கள்...

நமது அடுத்த பரம்பரைக்கும் இதன் அருமையை விளங்க வையுங்கள் இனிவரும் காலம் நமது ஊரின் முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும் இந்த மலர் சாட்சியமாய் நின்று சரித்திரம் படைக்கவேண்டும் என்பது எமது அவா.

நன்றி


பதிப்பாசிரியர் குழு

**குமாரு. மனோகரன்**

**துரை. இரவீந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Angle Light Photography

416.836.9693

# LOWFARE
TAAVELS AND TOURS INC

Lowfare
Travels and Tours

2625 EGLINTON AVE E., SCARBOROUGH, ON MIK 2S2, CANADA




PHONE: (416) 261 055
FAX: (416) 261 9984
lavan@lowfaretravels.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- CONDO
- STORES &
- HOSPITALS
- CARPET CLEANING

**MAHO** KANAGASENHIL
**647 629 4790**
**RAJ**
**647 907 7574**

**Royal**
KITCHEN





120 WHITMORE ROAD, UNIT 3&4 VAUGHAN, ON L4L 6A5

Tel: **416-728-6510** | **905-264-0090** | **905-265-1220** | Fax: **905-264-9238**

royalkitchen@bellnet.ca






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COURTYARDS DENTAL CENTER We create Smiles you'd be proud of sharing!



**OPEN**
**7 DAYS A WEEK**

(EMERGENCY,
Evenings & Weekend
Appointments Available)

*FREE Consultation

**(905) 553-5266**




**2396 Major Mackenzie Dr. W.,
Unit #6, Vaughan ON L6A 4Y1**

(Major Mackenzie & Keele,
near Canada's Wonderland)

**Dr. Annahvathany Sivakumaran**
**DMD (University of British Columbia)**
**Family Dentist Since 2002**


Special Offers for **NEW** PATIENTS & FAMILIES

*Contact for details, conditions apply.

Cell tel Mobility

**CELLTEL** MOBILITY

FOR ALL YOUR CELLPHONE AND ACCESSORY NEEDS...



WE DO ALL KIND OF REAPAIRS: UNLOCKING, BROKEN SCREENS, LIQUID DAMAGE, SOFTWARE & MORE

**iPhone, Samsund, HTC, Motorola, LG Etc.**

**Call Toll Free: 1-877-312-5123**

2637 Eglinton Ave. East
Eglinton Ave. / Midland
**416 266 6818**

5C-2950 Birchmount Rd
Birchmount Rd / Finch Ave
**416 495 7776**

45 Karachi Dr, Unit 49
Markham Rd / 14th Ave
**905 201 4859**

**Shop Online @ www.celltelmobility.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் பேராசியரியர் கலாநிதி விநாயகமூர்த்தி சிவசாமி அவர்கள்

புங்குடுதீவு கிராமம் பல்பெரும் கல்விமான்களையும் ஆன்மீகப் பெருமக்களையும் பெற்றெடுத்த கிராமம். அந்தவகையில் பேராசிரியர் கலாநிதி சிவசாமி விநாயகமூர்த்தி அவர்கள் புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தில் புகழ்பெற்ற குடும்பத்தில் பிறந்தவர். புங்குடுதீவின் கல்வி வளர்ச்சியின் ஆரம்பகாலமான திண்ணைப்பள்ளிகளை தங்கள் சொந்த முதலீட்டிலேயே ஆரம்பித்து அதன்வழி எமது கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் ஈடுபட்டு இருந்தவரும், 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் முதன் முதலாக புங்குடுதீவிலே நிறுவப்பட்ட மிசன் பாடசாலைகள் நிறுவுவதற்கு முன்னோடியாக இருந்து இருபிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலை நிறுவுவதற்கு நிலம் வழங்கியவருமான குருமூர்த்தி சாஸ்திரியார் என்ற பெரியாரின் வழித்தோன்றலாக வந்தவர்.

ஆரம்பகல்வியை இருபிட்டி அமெரிக்கமிசன் பாடசாலையில் கற்று பின் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் தனது உயர்கல்வியைத் தொடர்ந்தார். கல்லூரியில் சிறந்த விவேகமான மாணவராக விளங்கி 1951ல் இருந்து 1954வரை தமிழ் சமஸ்கிருத பாடத்திற்கான முதற் பரிசினையும், 1951ல் வரலாற்றுக்கான முதல் பரிசினையும் பெற்றுக்கொண்டார். அங்கிருந்து 1955ல் பேராதனை பல்கலைக்கழகம் சென்றார். சமஸ்கிருதம், வரலாறு, தமிழ் ஆகிய பாடங்களை கற்று பட்டதாரியாக வெறியேறினார். தான் கல்வி கற்ற கல்லூரிக்கே விரிவுரையாளராக கடமையாற்றினார். லண்டன் பல்கலைக்கழகத்திற்கு வெளிவாரி மாணவர்களுக்கான பாடநெறிகளை கற்பித்த காலகட்டத்தில் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். இக்காலகட்டத்தில் லண்டன் பல்கலைக் கழகத்து கலைமாணி சிறப்புப்பட்டத்தை பெற்றுக்கொண்டார். சமஸ்கிருத சிறப்புப்பட்டதாரித் தேர்வில் சித்தியடைந்து பேராதானை பல்கலைக்கழகத்தில் பல வருடங்கள் விரிவுரையாளராக கடமைபுரிந்தார். அத்தோடு சமஸ்கிருத முதுகலைமாணி பட்டத்தினையும் பெற்றதோடு யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து வரலாற்று விரிவுரையாளராகவும், சமஸ்கிருத விரிவுரையாளராகவும் இளைப்பாறும் வரை சேவைபுரிந்தவர். பல ஆண்டுகள் யாழ் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறை தலைவராக செயற்பட்டவர்.

1969 கொழும்பில் நடைபெற்ற அனைத்து ஆசிரிய தொல்பொருளியல் மாநாடு, 1974ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டிலும் கலந்து சிறப்பித்து எங்கள் மண்ணுக்கு பெருமை சேர்த்தவர். 1989ஆம் ஆண்டு இவர் எழுதி வெளியிட்ட 'சமஸ்கிருத இலக்கிய சிந்தனைகள்' என்ற நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலம் வழங்கும் இலக்கியத்திற் கான பரிசு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கியத்திற்கான கௌரவ கலாநிதிப்பட்டமும், வாழ்நாள் பேராசிரியர் பட்டமும் வழங்கி அவரைக் கௌரவித்திருந்தனர். ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் வெளிவரும் ஆய்வேடுகள் தமிழிலும் சமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் எழுதியதுடன் 70ற்கு மேற்பட்ட நூல்களை யும் ஆய்வுக்கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். தான் கற்ற கல்வியை சரியானமுறையில் பயன் படுத்தும் வகையில் புங்குடுதீவினதும் ஈழத்தின் பல பாகங்களிலும் ஆய்வு செய்து பண்டைய கற்கால நாகரிகம் தொட்டு மக்கள் செறிவாக வாழ்ந்த இடங்களை அவர் உறுதிசெய்ததுடன் அன்று தொடக்கம் நாகரிக வளர்ச்சி காலம் வரை அவர்கள் அந்தக் கிராமத்திலேயே வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரத்துடன் உறுதி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலுள்ள பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபைத் தலைவராகவும், தமது குலதெய்வமான இருபிட்டி மூத்தநயினார் புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைத்தலைவராகவும் இருந்து சிறந்த ஆன்மீகப் பணியாற்றியவர்.

**குமார. மனோகரன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..

கனடியத் தமிழர் சமூகத்தில் நம்பிக்கையான ஒரு முகவர்






அடமான (Mortgage) ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

**Kamal** Navaratnam
Sales Representative

Direct: **416-671-4815**
E mail:kamalhomesale@gmail.com

2015 Rookie of the Year
2015 Platinum Club Award
2016 Diamond Club Award

## Buying / Selling / Leasing

**For buyers**

- Property for lower prices
- Top Negotiation
- Knowledgeable Advice
- Help with Mortgage
- Inspection & lawyers

**For Sellers**

- Free market Evaluation
- Highest value for your property
- Competitive Commission Structure
- Full MLS Exposure
- Free Home Staging
- Free Online, News Paper and Television Advertising
- Full Social Media Exposure
- Professional Photography, Feature Sheets, Virtual Tour, Video Tour & Visual Cards

**HomeLife/Future Realty Inc.**
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated

*Trusted and reliable services*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Message from Secretary of PWA (UK) to "Poovarasam Poluthu 2017"**

It gives me great pleasure to wish the Pungudutivu Old boys Association, who hold the "Poovarasam Poluthu 2017" on 10th December 2017.

On behalf of Pungudutivu Welfare association committee members, by the grace of god the program goes well.

Also we wish to congratulate you on your journey to help our people back home in Pungudutivu. We would love to work in hand in hand to help our people.

We would like to invite you on the auspicious 21st celebration of "Kattuvalik Kiramam 2017".

About PWA (UK):

Over the last years since its inauguration in 1997 the PWA (UK) has served many of our people back home in Pungudutivu for which we are very proud of. The community has worked together on many projects and it's nice to see the saying "charity begins at home" put in action. Following are the some of the projects we are taking forward to help our youths & underprivileged people back home.

5000 Free Exercise Books, New "Pungudutivu Dairy Farm" Project, New Evening Tuition Centre for School children, 'A Disintegrating Isand' A Documentary Film launch about Pungudutivu, Annual Sports day in summer, 5K Colour Run, Help and support to develop "Ambalavaanar Arangam", Sports Day 2016 & 2017, "Kattuvali Kiramam 2016" and Funded the Pre-School Teachers.

Kind regards,
S.Yogalingam
Secretary
Pungudutivu Welfare Association
www.pungudutivu.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்யுள்

"எப்போது மனிதன் உண்மையின் – சத்தியத்தின் – அழகைத் தரிசிக்க ஆரம்பிக்கிறானோ அப்பொழுதுதான் உண்மையான கலையும் உதயமாகிறது. வாழ்க்கை எல்லாக் கலைகளிலும் உயர்ந்தது. பூரணத்துவத்திற்கு சமீபித்து விட்ட மனிதனே உயர்ந்த கலைஞன். உயர்ந்த வாழ்க்கை பற்றிய உரமான அடிப்படையுமற்ற கலை எதற்காக?"

–மகாத்மா காந்தி

"மெய்யுள்" ஒரு புதிய இலக்கிய உருவமாகும். அது பூரண உருவமாகவும் இருப்பதால் சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை என்ற பாகுபாடுகளை உடைத்தும் கடந்தும் செல்லும் ஓர் உருவமாகவும் இருக்கும். செய்யுள், உரைநடை, என்ற வித்தியாசங்களையும் அது மதிப்பதில்லை. இதுகாலவரையுள்ள இலக்கிய உருவங்கள் எல்லாம் பெரும்பாலும் கற்பனைத் தளங்களுக்குரியவையே. "மெய்யுள்" கற்பனைக் கோலங்கள் சகலவற்றையும் குலைத்துக் கொண்டு அவற்றின் தளங்களைத் தகர்த்துக் கொண்டு நித்திய சத்தியத்தை நோக்கிய நேரடி அனுபவரீதியான ஊடுருவல்களுக்குரிய கலை, இலக்கிய உருவமாகும். அதன் உள்ளும், புறமும், உருவமும் உள்ளடக்கமும், மெய்யாகவே இருக்கும். அதனால் அது இதுகாலவரையுள்ள கலை, இலக்கியங்களைஅழிக்கும் கலை, இலக்கியமாகவும் இருக்கும். அதேபோல் அது தத்துவ, சரித்திர, விஞ்ஞான உருவங்களாகவும், சமூக, பொருளாதார, அரசியல், ஆத்மீக, மெய்வாழ்க்கை அனுபவங்களாகவும் அமையும். பூரண சர்வோதயத்துக்குரிய பிரபஞ்ச யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும்.

– மு.த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரண இலக்கியமும் அதன் தேவைகளும்

இன்றைய இலக்கிய வளர்ச்சிக்கு என்னென்ன தேவைப் படுகின்றன?

அப்படி ஒரு கேள்வியை அடிப்படையாக வைத்து ஒரு கணக்கெடுப்பை நடத்தும்போது முதலில் தேவைப்படுவது, இலக்கியம் எதற்காகத் தேவைப்படுகிறது என்ற கேள்விக் குரிய பதில்தான்.

**இலக்கியம் எதற்காகத் தேவைப்படுகிறது?**

இதற்கு நாம் என்னென்ன காரணங்களைக் காட்டுகி றோமோ, அந்தந்தக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டே இலக்கிய வளர்ச்சிக்குரியதாக நாம் காட்டக்கூடிய தேவைகளும் இருக்கும். அந்தக் காரணங்களை குறுகிய எல்லைகளையுடையவைகளாய் இருந்தால் இலக்கியத் தேவைகளும் - அதாவது இலக்கிய வளர்ச்சிக்குரிய தேவைகளும் - குறுகியே இருக்கும். காரணங்கள் விரிந்து வேறு துறைகளையும் அணைக்கக் கூடியவையாக இருக்குமானால், தேவைகளும் விரிந்து வேறு துறைகளின் வளர்ச்சிக்குரிய தேவைகளாகவும் விசாலித்து நிற்கும்.

**இலக்கியம் எதற்காகத் தேவைப்படுகிறது?**

பொழுதுபோக்குக்காக என்றிருக்க முடியாது. பொழுது போக்காக இருப்பவை இலக்கியமாகவும் இருக்க முடியாது. அது மட்டுமல்ல, பொழுதுபோக்கு என்பதே - அதாவது பயனற்ற விதத்தில் நேரத்தைப் பாழடிப்பது என்பதே- இனிமேல் இருக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு வளர்ச்சிக் கட்டத்திலும் ஒரு புதுயுகப் பிரவாகத்தின் நெருக்கடிக் கட்டத்திலும் இன்று மனித சரித்திரமும் பரிணாமமும் நின்றுகொண்டிருக்கின்றன.

அப்படியானால் வாழ்க்கையின் பல்வேறு பிரச்சனைகளால் சஞ்சலப்படும் மனிதனின் மன அமைதிக்கும் ஓய்வுக்கும் ஏதாவது வேண்டாமா என்ற எதிர் கேள்வி எழுப்பலாம் சிலர். "பொழுதுபோக்கு வாதம்" ஆனால், அது பிழையானது. காரணம் அந்த எதிர்க்கேள்வியால் இலக்கியம், கலை ஆகியவற்றைப் பற்றிய அறியாமைதான் நிற்கிறது. தரமான இலக்கியங்களும் கலையும்தான், உண்மையான நிரந்தரமான அமைதிக்கும் மன ஓய்வுக்கும் பரவசத்துக்கும் வழிவகுக்கும். அவைதான் அதேசமயம் வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய சிந்தனைத் தெளிவையும் கொடுக்கும். அந்தச் சிந்தனைத் தெளிவு எதிர்காலப் பிரச்சனைகளைச் சந்திக்கக்கூடிய ஆற்றலையும் அதனால் நிரந்தர அமைதிக்குரிய வழியையும் காட்டுபவையாக இருக்கும். தரமற்ற கதைகளும் படைப்புக்களும் மனிதனைக் கனவில் ஆழ்த்தி மயக்குமேயொழிய தெளிவோடு சேர்ந்து பரவசத்தையும் அமைதியையும் கொடுத்து, வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உதவ மாட்டா. அதனால் சாதாரண மனிதனின் மன அமைதிக்கும் ஓய்வுக்கும் ஏதாவது தேவைப்படுகின்றன வென்றால் அவை தரமான இலக்கியமும் கலையுந்தான். பொழுதுபோக்கும் போலிகளும் கனவுகளுமல்ல.

ஆனால், கனவு மயக்கமும் ஓரளவுக்கு மனித வாழ்க் கைக்குத் தேவையல்லவா? சாதாரண மனிதனின் உடல் நிலையையும் மன நிலையையும் சமநிலையில் வைத்திருக்க அவையும் ஓரளவுக்குத் தேவையல்லவா? அதனால் அத்தகைய வசதிகளை நீக்குவது ஆபத்தாகாதா?

அப்படியும் கேட்கலாம். அதில் மனோவியல் - வைத்திய உண்மையும் இருக்கிறது. அந்தப் பார்வையில் மனிதன் ஒருவித நோயாளியாக இருக்கிறான் என்ற உண்மையும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தப்படுகிறது. அது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். இங்கு நோய் என்பது மனிதனின் வளர்ச்சியின்மையைக் காட்டுகிறது. அதாவது மனிதனின் வளர்ச்சி அதன் பூரணத்துவத்தை இன்னும் தொடவில்லை என்பதைக் குறிக்கிறது. அத்தகைய பூரணமின்மையே அவனது நோயாகும்.

பூரணமின்மை என்ற அந்த நோய் எப்படிப்பட்டது என்பதைப் பின்பு பார்க்கலாம். ஆனால், இப்போதைய சரித்திரக் கட்டத்தில் மனிதன் பரவலாகத் தனது நோயை உணர வந்திருக்கிறான் என்பதும், அதை மாற்றித் தனது நிலையைப் பூரணத்துவப்படுத்தப் போராடுகிறான் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. அத்தகைய போராட்டக் கட்டத்தில் நிற்கும் இன்றைய மனிதனுக்கு அவனது நோயைக் கடத்தி நீடிக்க வைக்கும் கனவுகளும் மயக்கமும் தேவையா?

இந்தக் கேள்வியை எழுப்பும்போதுதான் " பொழுது போக்கு இலக்கியம்" என்ற பெயரில் கனவுகளுக்கும் போலி மயக்கங்களுக்குமாக வாதாடுபவர்கள் இன்றைய மனிதனின் பரிணாமக்கட்டத்தையும் சரித்திர நிலையையும் உணராதவர்களாக இருக்கிறார்கள் என்பதும், தங்களைக் காலங் கடந்த ஒரு சமூக பொருளாதார அமைப்பில் நிரந்தரமாகப் பொருத்திப் பார்ப்பவர்களாக இருக்கிறார்கள் என்பதும், அந்த அமைப்பில் வசதி படைத்த எந்த வர்க்கம் இந்த மயக்கத்தையும் கனவுகளையும் தனது நன்மைக்காகப் பயன்படுத்துகிறதோ அந்த வர்க்கத்தோடு தங்களை இணைத்துக்கொள்கிறார்கள் என்பதும் தெரியவரும். அத்துடன், அந்த அமைப்பும் அதற்குரிய முக்கிய வர்க்கமுந்தான் இலக்கியத்தையும் கலையையும் மனித சரித்திரத்தில் எப்போதும் இல்லாத அளவுக்கு வெறுங்கனவாகவும் மயக்க போலியாகவும் மாற்றி வளர்த்திருக்கின்றன என்பது தெரியவரும்.

காரணம், மனிதனின் நோயைத் தீர்க்கும் – அதாவது, மனிதனின் அகத்தையும் அவன் வாழும் சமூகத்தையும் பூரணப்படுத்தும் – முக்கிய கருத்துக்களில் ஒன்றாக இந்த இலக்கியமும் கலையுந்தான் காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. கலையும், இலக்கியமும்தான் சமயத்தோடு சேர்த்துக் காலங்காலமாக வளர்க்கப்பட்டு வந்தன. இந்த முதலாளித்துவ அமைப்பினால் அவை நோயைக் கடத்தும் மயக்கப் பொருளாகவும் அளவாகவும் மாற்றப்பட்டு வெறும் வியாபாரத்துக்குரியவையாக வளர்க்கப்பட்டு வருகின்றன. "பொழுதுபோக்கு" என்பது அந்த வியாபாரத்துக்குரிய நாகரிகமான பெயர்தான்.

இருப்பினும், பொழுதுபோக்குக்காக– அதாவது வியாபாரத்துக்காக – கலையும் சினிமாவும் இலக்கியமும் இருக்க வேண்டுமென்று கூறுபவர்கள்கூடத் தங்களை அறியாமலேயே இலக்கியத்தினதும் கலையினதும் முக்கியத்துவத்தையும் பயனையும் ஓரளவுக்கு உணர்ந்துதான் சொல்கிறார்கள். ஆனால், தங்களின் அறியாமையினாலும் வியாபார நோக்கினாலும் அதன் பெயரைத்தான் மாற்றிக் கூறுகின்றனர். அதனால் இலக்கியத்தின் அர்த்தத்தையும் மாற்றிவிடுகின்றனர்.

நோய்போக்க உதவுபவைதான். இலக்கியம் எனும்போதே "நோய்போக்கு" என்பது அதில் தொக்கி நிற்கிறது எனலாம். அந்த உண்மை மறக்கப்பட்டு, அதனால் தரங்கெட்டு, உருவாக்கப்படுபவைதான் "பொழுதுபோக்கு" என்ற அடைமொழியைப் பெறுகின்றன. மனிதனின் நோயைப் போக்காமல், அவனை மயக்கியும் கனவு காணவைத்தும் நோயைக் கடத்தி வளர்த்துக் கொண்டு மனிதனின் பொழுதையும் வாழக்கையையும் போக்குபவை, பாழடிப்பவை.

இவ்வாறு நோயைப் போக்குவதற்குப் பதிலாகப் பொழுதைப் போக்குவதற்குத்தான் இலக்கியம் இருக்கிறது என்று கருதப்படுவதே ஒன்றை மற்றதுக்காக மாறாட்டஞ் செய்யும் மனநோயாளியின் குணந்தான். இடம் மாறிப் பொருத்தப்பட்ட பற்றும் பிறழ்வும் (displaced attachment) முதலாளித்துவ அமைப்பு வளர்த்துவரும் நோய்க்குணங்களில் அது முக்கியமானது. அதனால் "பொழுதுபோக்கு இலக்கியம்" என்பது இலக்கியம் எதற்காக, எப்படி இருக்கவேண்டுமோ அதற்கு எதிராக இருப்பதுதான் என்றாகியுள்ளது. இலக்கியம் எந்த நோயை நீக்க முயல்கிறதோ அந்த நோயை நீடிக்க வைப்பதுதான் பொழுதுபோக்கு இலக்கியமாக மாறியுள்ளது. அதாவது, பொழுதுபோக்கு இலக்கியம் என்பதே இலக்கியம் நீக்க வேண்டிய நோய்களில் ஒன்றாகிவிட்டது. அந்த நோயை நோயாக உணராத, அதையே நோய்தீர்க்கும் மருந்தாகக் காண்பது நோயின் முற்றிய நிலையைத்தான் குறிக்கிறது. அதை முறியடிக்கும் கட்டந்தான் இன்றைய மனிதனின் சரித்திரக் கட்டமாகும்.

பொழுதுபோக்கு இலக்கியம் என்பது இலக்கியத்தின் இலட்சியத்துக்கு எதிர்மாறான திரிபாக இருக்கும்போது, "கலை கலைக்காக" என்பதும், "கலை கட்சிக்காக" என்பதும் இலக்கியத்தின் இலட்சியத்தை உணர்ந்தும் அதன் வழியில் பூரணமாகச் செல்லாத இடைத்தரிப்புகள் தான். அழகுணர்ச்சி மட்டும்தான் அல்லது அர்த்தங்காண முடியாதவை மட்டும்தான் இலக்கியத்தை உருவாக்குபவை என்று நினைத்து, விளக்கில் விழுந்த பூச்சிகள்போல் இடையில் அழிந்தார்கள் கலை கலைக்காக என்று வாதாடியவர்களில் பெரும்பாலோர். கலை கட்சிக்காக என்பவர்கள் கலையை வெறும் சித்தாந்த அறிவு வழியில் மட்டும். அந்த அறிவும் இறுதியில் சிதைந்து திருகிச் செல்லும் வழியில் மட்டும் காட்டி, இலக்கியத்தை வெறும் யந்திரமுயற்சியாக நிறுத்திவிடுகின்றனர்.

எல்லாவற்றுக்கும் காரணம் இல்லாமலில்லை. இலக்கியம் நோய் தீர்ப்பதென்றால். அந்த நோயின் முழுமையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணராத வரைக்கும் அதைத் தீர்ப்பதற்குரிய பூரண வழியையும் உணரமுடியாதுதான். அந்தந்தக் கால கட்டத்தில், அந்தந்தச் சமூகக் கட்டத்தில் அவனவன் அந்த நோயை எவ்வாறு கண்டானோ அவ்வாறே இலக்கியமும் படைத்திருக்கிறான்.

இன்று முன்பு எப்போதும் இருந்திராத அளவுக்கு நோயையும் முழுமையாக உணரக்கூடிய கட்டம் வந்திருக்கிறது. அதனால் அதற்குரிய வழியையும் பூரணமாகக் காணக்கூடிய கட்டமும் வந்துள்ளது. இலக்கியமும் அதன் காரணமாக முழுமையடையும் கட்டம் வந்துவிட்டது. பூரணயோகம் என்றாரே அரவிந்தர், அதைப்போல பூரண இலக்கியம் உருவாகும் கட்டம் இன்று வந்துள்ளது. அதற்குரிய கோட்பாட்டையே பிரபஞ்ச யதார்த்தம் என்று நான் "போர்ப்பறை" யில் குறிப்பிட்டுள்ளேன்.

2

இலக்கியத் தேவைகள் எவை என்ற கேள்வி, எதற்காக இலக்கியம் தேவை என்ற கேள்வியாக மாறியது. அதற்குரிய பதில் நோயைத் தீர்ப்பதற்கென்றால், அந்த நோய் என்ன என்ற கேள்வி எழுகிறது. அதை முழுமையாகக் கண்டுபிடித்தால்தான் முழுமையான வாழ்க்கையும் முழுமையான இலக்கியமும் உருவாக முடியும்.

**நோய் என்ன?**

மனிதர்கள் எல்லோருமே நோயாளிகள்தான் என்கிறார் பிராய்ட். ஆனால் அவர் கண்ட நோய்க்குரிய காரணங்கள் அடிமன இயல்புகளோடேயே நின்றுவிடுகின்றன.

வர்க்க வேறுபாடுகளுக்குட்பட்ட சமூகத்தில் வாழும் மனிதனை ஒருவித நோயாளியாகவே மார்க்ஸ்ஸும் கருதுகிறார்.

சமயஞானியோ, ஞானமடையாது சம்சார வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள எல்லோரையுமே முக்குண நோய்க்குள் உள்பட்டவர்களாகவே கருதுகிறான்.

இவைதான் அவரவர் காட்டும் மனிதநோயும் அதன் காரணங்களுமென்றால், அவற்றைத் தீர்ப்பதற்கு அவர்கள் காட்டும் வழிகளும் அதே வகையில் அதே கோணங்களுக் குரியவையாக இருக்கின்றன.

அடிமன இயல்புகளைக் கண்டுபிடித்துச் சீர்படுத்துவதையே நோய்க்குரிய மருந்தாகக் காண்கிறான் பிராய்ட். முரண்பட்ட வர்க்க இயக்கங்களை அடிப்படையாக வைத்து நடத்தப்படும் போராட்டத்தையும், அது தரக்கூடிய பொதுவுடமை மலர்ச்சியையுமே மார்க்ஸ் மனிதனின் நோய் தீர்க்கும் மருந்தாகக் காண்கிறான். இவ்விரு வழிகளையும் விஞ்ஞானம் காட்டும் வழிகளுக்குரிய முக்கிய உதாரணங்களாகக் கூறலாம். அப்படிக் கூறுவது விசயத்தை மிகவும் இலகுபடுத்திக் கூறுவதாகும். இவை இரண்டுக்குமிடைப் பட்ட, இவை இரண்டுக்கும் முரண்பட்ட எத்தனையோ விஞ்ஞானப்பார்வைகள் இருப்பினும், எல்லாம் இவ்விரு எல்லைகளையும் ஏதோ ஓர் அளவுக்காவது ஏற்றுக் கொள்ளவே செய்கின்றன. அதனால் இவற்றையே விஞ்ஞானத்துக்குரிய முக்கிய உதாரணங்களாகக் கூறலாம். (இவற்றிலிருந்து வேறுபடும் நவீன விஞ்ஞானப் பார்வையைச் சமய ஞானத்துக்குரியதாகச் சேர்த்துக் கொள்ளலாம்)

ஆனால் இன்றைய சமயஞானி இவற்றோடு மட்டும் திருப்திப்பட முடியாது. இவ்வுலகத்தை மறுத்து, மறுவுலகத்தையும் முத்தியையுமே அழுத்திய பழைய முறைச் சமயப்போக்கில் விஞ்ஞானம் எவ்வாறு அதிருப்திப்பட்டதோ, அவ்வாறேதான் இன்றைய சமயஞானமும் மனிதனின் அக ஆழத்தையும் அதன் பிரபஞ்ச விரிவுகளையும் மறுக்கும் விஞ்ஞானத்தில் அதிருப்திப்படுகிறது.

அந்த அதிருப்தியையும் அதைத் தீர்க்கும் புதுத் திசையையும் காட்டுபவராக அரவிந்தர் நிற்கிறார்.

ஆனால், அரவிந்தரின் முயற்சிகள் தற்காலச் சமூக, பொருளாதார அரசியல் இயக்கங்களுக்குப் பூரணமாக வழிகாட்டும் வகையில், மார்க்சியத்தையும் விஞ்ஞானத்தின் மனிதாபிமான மக்கள் நலவாதத்தையும் வென்று செல்லும் வகையில் இன்னும் விரித்து வளர்க்கப்பட்டதுமில்லை, நடைமுறைப்படுத்தப்பட்டதுமில்லை.

எனது "போர்ப்பறை"யில் அந்த முயற்சியின் ஆரம்பம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

வர்க்க வேறுபாடுகளைத் தாண்டிய பொதுவுடைமைச் சோஸலிஸத்தை மட்டும் அடைந்தால் போதாது. அதைத்தனியாக கொண்டுவருவதும் முடியாது. பொது வுடைமைப் போராட்டத்தோடு அகத்தே காணப்படும் குணவேறுபாடுகளையும், அதே சமயம் முழுச்சமூகமும் தாண்டினால்தான் உண்மையான சோஸலிஸமும் உண்மையான ஞான எழுச்சியும் – சர்வோதயமும் – அடுத்தகட்ட மனிதப் பரிணாமமும் வரமுடியும் என்பதே எனது கருத்தின் முக்கிய அம்சமாகும். அவற்றுக்கிணங்கவே சமூகத்தின் வாழ்க்கைத் துறைகள் ஒவ்வொன்றும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்.

மனித பரிணாம வளர்ச்சியைச் சுழல்முறையில் அளவிடலாம். பழைய வேதங்கள் கூறிய யுகச்சுழல். ஒரு சுழல் நான்கு கட்டங்களை கொண்டது. கிருத, துவாபர, திரேத, கலியுகங்கள். கலியின் முடிவோடு ஒரு சுழல் முடிந்து அடுத்த சுழல் வளர்ச்சி ஆரம்பமாகிறது எனலாம். ஆனால், அடுத்து சுழல் வளர்ச்சி முந்தியதைப்போல் ஒரேதளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்காமல் வேறு ஓர் உயர்ந்த தளத்தில் அதற்குரிய தடத்தில் வளரலாம். அந்தத் தளநிலையின் வேறுபாடுக ளும் முரண்பாடுகளும் படிப்படியாய் ஒவ்வொரு யுகத்திலும் அதிகமாகி, ஈற்றில் அவற்றின் காரணமாக ஏற்படுத்துவ துடன், பழைய சுழல் வளர்ச்சிக்கு ஒரு முடிவையும் கொண்டுவந்து புதுச்சுழலை ஆரம்பித்து வைக்கலாம். பழைய வேதங்களின் யுகப்பாகுபாட்டை இவ்வாறுதான் இன்று வியாக்கியானப்படுத்த வேண்டும். அதனால் நமது பார்வை விரிவடையவே செய்கிறது. உதாரணமாக, பரிணாம மானது சடநிலையிருந்து உயிர் நிலையை இவ்வுலகத்தில் தொடும்வரையுள்ள காலத்தை ஒரு சுழலாகவும், உயிர்நிலையிலிருந்து மனநிலை உருவாகும் வரையுள்ள காலத்தை அடுத்து வளர்ச்சிச் சுழலாகவும் வசதிக்காகக் கொள்ளலாம். பரியாமத்தில் அன்னமயகோசமும் பிராணமய கோசமும் வெளிப்படுத்தப்பட்ட காலங்கள். விஞ்ஞான ரீதியாகச் சொல்லப்போனல், உலகப் பரிணாமத்தின் அன்னமயகோசத்தை (சடநிலையும் அதன் வலையமும்) "Geosphere" என்றும் சொல்லலாம். இன்று அவற்றுக் குரிய குணங்களாக முக்குணங்களில் தாமத குணத்தையும் (அன்னமயகோசம்), ரஜதகுணத்தையும் (பிராணமயகோசம்) குறிப்பிடலாம். மனிதனிலும் இயற்கைச் செயல் பாட்டிலும் இவ்வலையங்கள் மட்டுமல்ல இவற்றுக்குரிய குணங்களும் இருக்கின்றன.

இன்றைய வளர்ச்சிச் சுழல். மனதிலிருந்து பேர்மனதுக்குத் தாவும் நிலையில், அந்தச் சுழலின் முடிவான கலியுகத்தில் நிற்கிறது. மனோமயகோசத்துக்குரிய (Nooshere) சுழல், அதற்குரிய குணமாகச் சாத்வீக குணத்தைக் குறிப்பிடலாம். இனி வருபவை சமய ஞானம் குறிப்பிடும் விஞ்ஞான ஆனந்தமய கோசங்களுக்குரிய சுழல்களாக இருக்கும். விஞ்ஞானம் இனித்தான் அந்த திசையில் கவனஞ் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால், நவீன விஞ்ஞானம் ஏற்கனவே அதை உணரத்தொடங்கிவிட்டது என்பதை மறுக்க முடியாது. மனோவலையத்துக்கு மிக அழகாக Noospere என்று பெயர் சூட்டிய ரேஹாடி சாடின் (Teilhard de Chardin) சமய ஞானம் ஏற்கனவே கண்டு அனுபவித் துவிட்ட விஞ்ஞானமயகோசத்துக்கும் ஆனந்தமயகோசத் துக்கும், எதிர்காலத்தில் எல்லோருக்குமுரிய அனுபவமாக இருக்கப்போகும் வளர்ச்சி முயற்சிக்கும் "Chritogenesis" என் என்று பெயர் சூட்டியுள்ளார். கிறிஸ்துவின் பேரறிவான நிலை, அரவிந்தர் கூறிய பேர்மனித நிலை அதை நோக்கித்தான் இன்றைய பரிணாமமும் சரித்திர வளர்ச்சியும் முழுமையடைய முயன்றுகொண்டிருக்கின்றன. அந்த முழுமையில்தான் இன்றைய வளர்ச்சிச்சுழல் முடிவடைந்து அடுத்த சுழல் ஆரம்பமாக வேண்டியிருக்கிறது.

இத்தகைய சுழல் எல்லைக்குள் நடைபெறும் ஒவ்வொரு கட்ட வளர்ச்சிப் போராட்டத்தையும் மார்க்சியப் பார்வையில் வர்க்கப் போராட்டமாகக் கொள்ளலாம். ஆனால் உண்மையில் அது பழைய இதிகாசங்கள் குறிப்பிட்ட தேவ- அசுர, ஞான- அஞ்ஞானப் போராட்டமேதான். அதேபோல் அந்தப் போராட்டத்தையும் அதன் மூலம் பெறப்படும் வளர்ச்சியையும் எகலிய மும்முனை இயக்கமாகவும் கொள்ளலாம். எனவே, மார்க்ஸோடும் எகலோடும் நின்றுவிடாமல், அவர்களது பார்வையை அரவிந்தர் புதுப்பித்த பழைய சமயஞானப் பார்வையோடும், இன்றைய விஞ்ஞானிக ளான ஜூலியன் ஹக்ஸ்லி, ரேஹா ஆகியோரது கருத்துக்களோடும் இணைத்து புது அடிவானங்களைத் தொடும் வகையில் விரித்து வளர்ப்பதே இன்றைய சரித்திர, பரிணாம வளர்ச்சிச் சுழலை அதன் முடிவுக்கும் அடுத்த சுழல் தளத்துக்கும் கொண்டு வரக்கூடிய முழுமையான பூரண தத்துவமாகவும் பூரண வாழ்க்கை முறையாகவும் இருக்கும். அதையே "போர்ப்பறை" மூலம் நான் தெரிவிக்க முயன்றேன். அதையே சர்வோதயப் பொதுவுடைமை என்றும் அழைக்கின்றேன்.

இன்றைய மனித பரிணாமநிலையில், மனிதனின் நோய்க்கு -அவனது பூரணமின்மைக்கு- விஞ்ஞான ரீதியான விளக்கங்களும் அதைத் தீர்ப்பதற்குரிய விஞ்ஞான ரீதியான வழிகளும் இவ்விதச் சர்வோதயப் பொதுவுடைமை வழியிலேயே பெறப்பட வேண்டியிருக்கின்றன. இவற்றை ஏற்றுக்கொள்ள முடியுமானால், இன்றைய இலக்கியம் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதையும், அதன் வளர்ச் சிக்கு எவையெவை தேவைப்படுகின்றன என்பவற்றை கணக்கெடுப்பது கஷ்டமாக இருக்காது.

3

முன்பு குறிப்பிட்டவற்றை கொண்டு பார்க்கும்போது இலக்கியத்தைப் பற்றியும் ஒவ்வொருவனுக்கும் இருக்க வேண்டிய சீரான பார்வைதான் இன்றைய இலக்கிய வளர்ச்சிக்குரிய முக்கியத் தேவையாக இருக்கிறது. இலக்கியத்தின் நோய் தீர்க்கும் இலட்சியத்தைப் பற்றிய உணர்வு.

ஆனால், அது மட்டும் போதாது. இலக்கியம் மட்டுந்தான் (கலை மட்டுந்தான்) சமய முயற்சியாக, பரவசத்தையும், மன அமைதியையும் தெளிவையும் நிறைவையும் தந்து நோயைப் போக்கும் மருந்தாக இனி இருக்கப்போவதில்லை இனிமேல் எல்லாத் தொழில்களுமே கலையாக, யோகமாக, தொழுகையாக இருக்கப்போகின்றன: இருக்கச் செய்ய வேண்டும்.

பிராய்ட் கூறிய மனச்சிக்கல்களும், மார்க்ஸ் கூறிய மனப்பிறழ்வும் நீங்கிய முழுமையை மனிதன் செய்யும் சகல தொழில்களாலும் பெறக்கூடிய காலக்கட்டத்தையும், சமூக பொருளாதாரக் கட்டத்தையும் நோக்கி இன்றைய சரித்திரம் வளர்ந்துகொண்டிருக்கிறது. மார்க்ஸ் குறிப்பிடும் பொதுவுடமையமைப்பில் தன்னிலிருந்து தன்னைப் பிரித்துக்காணும் பிறழ்வும் (alienation) அதற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமான வர்க்க வேறுபாடுகளையுடைய சமூக, பொருளாதாரச் சூழலும் இருக்கமுடியாதபடியால் அந்தப் பொதுவுடைமையமைப்பில் கலை இலக்கியம் மட்டுமல்ல, எல்லாத் தொழில்களுமே பரவசத்தையும், மன அமைதியையும் நிறைவையும் தரும் தொழில்களாக மாறிவிடும். எல்லாத் தொழில்களுமே ஆத்மீகத் தன்மை பெற்றவையாய் மாறிவிடும். அப்படித்தான் மார்க்ஸ் கருதுகிறார்.

சமயஞானியும் அதைத்தான் வேறு ஆழமான கோணத்தி லிருந்து சொல்கிறான். அதனால் அவன்தான் மார்க்ஸ் குறிப்பிடும் அந்த நோய் தீர்ந்த மனிதனின் முழுமை நிலையின் பூரணத்துவத்தைக் காட்டுகிறான். அத்துடன் அவனைப் பொறுத்தவரையில் அந்தப் பூரண நிலையைத் தனிப்பட்ட ஒருவன்- சமூகமல்ல- எந்தக் காலக்கட்டத் திலும், எந்தச் சமூக, பொருளாதாரக் கட்டத்திலும் அடையக் கூடியவனாய் இருக்கிறான். எல்லாத் தொழில்களையும் ஒருவன் விரும்பினால் எந்தக் காலக்கட்டத்திலும் சரி, எந்தச் சமூகக் கட்டத்திலும் சரி பரவசத்தைத் தரும் கலையாக, நோய் தீர்க்கும் வழியாக, கர்மயோகமாக மாற்றலாம் என்று கூறுகிறான் சமயஞானி.

அதே சமயஞானி, இன்று அந்தக் கர்மயோக வாழ்க்கை தனிப்பட்ட சிலருக்குரியதாக மட்டும் இருக்காமல் முழுச் சமூகத்துக்கும் அதன் சகல துறைகளின் செயல்களுக்கும் உரியதாக மாறும் காலகட்டம் வந்துவிட்டது என்று கூறுகின்றான். அதையே "பூரண சர்வோதயம்" என நான் கூறுகிறேன்.

எனவே, வாழ்க்கையின் சகல துறைகளுக்குரிய தொழில்களும் கலையாகவும் நோய் தீர்க்கும் மருந்தாகவும் மாற்றப்படலாம் என்று எல்லா மார்க்கங்களும் இன்று கருதுகின்றன. அந்த நிலையே எல்லா மக்களுக்குமுரிய வாழ்க்கை முறையாக அடுத்து வரக் காத்திருக்கிறது என்றும் அவை கூறுகின்றன. அதைக் கவனிக்கும்போது இலக்கியத்தையும் கலையையும் நோய்தீர்க்கும் சமய முயற்சியாக உயர்த்துகிறோமே என்று யாரும் ஆச்சரியப்படவும் தேவையில்லை. கேலிபண்ணவும் தேவையில்லை. ஏற்கனவே ஆங்காங்கு அடுத்த கட்டச் சமூக, பொருளாதார அமைப்புக்காகப் புரட்சிப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் கெரில்ல "துறவி" சகல துறைகளையும் சகல தொழில் களையும் சகல வழிகளையும் தனது இலட்சியத்துக்குரிய, தன்னை முழுமைப்படுத்துவதற்குரிய மார்க்கங்களாகவும் கலையாகவும் யோகமாகவும் கண்டு கொண்டிருக்கிறான். அதுபோலவே சர்வோதய எழுச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துள்ள தீவிரவாத ஜீவதானி ஒவ்வொரு கணத்துக்குரிய அலுவலையும் நோய்தீர்க்கும் மருந்தாக, யோகமாக, கலையாக மாற்றிக்கொண்டிருக்கிறான்.

எனவே, இலக்கியத்தை மட்டும் நோய்தீர்க்கும் மருந்தாக ஏற்றுக்கொண்டால் போதாது. தன்னளவில் மட்டும் அது அவ்வாறு நின்றால் போதாது. இனிமேல் தொழில்களை யுமே அது இலக்கியமாகவும் கலையாகவும் மாற்றப் போராட வேண்டும். சகல துறைகளுக்குமுரிய சகல தொழில்களும் சகல மக்களுக்கும் பூரண யோகமாக மாறவேண்டும். அத்தகைய சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார, சமய மாற்றத்துக்காக இன்றைய கலையும் இலக்கியமும் தங்களை அர்ப்பணித்தாக வேண்டும்.

அதையும் இன்றைய ஒவ்வோர் எழுத்தாளனும் உணர வேண்டும். அப்போதுதான் அவனால் பூரண இலக்கியத் தைப் படைக்க முடியும். அது இரண்டாவது தேவை.

இலக்கியத்தைப் பற்றிய இத்தகைய ஒரு பார்வை முழுவாழ்க்கையையும் பற்றி ஒரு பூரண தத்துவமாகவும், பூரண சித்தாந்தமாகவும் வளர்வது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகிறது. அல்லது வாழ்க்கையைப் பற்றிய ஒரு பூரண சித்தாந்தமேதான் இலக்கியம், கலை ஆகியவற்றைப் பற்றி இந்தளவுக்கு ஒருவனை உணர்ந்துகொள்ளத் தூண்டும். எப்படிச் சொன்னாலும் சரிதான். எனவே, அடுத்த தேவை-மூன்றாவது தேவை, அதுவே முதலாவது தேவையாகவும் இருக்கலாம்- அத்தகைய பூரண சித்தாந்தத்தின் தேவைதான். இன்றைய எழுத்தாளன், இன்றைய காலகட்டத்துக்கும் சமூக பொருளாதார, அரசியல் கட்டத்துக்குமுரிய ஒரு பூரண தத்துவத்தை, சதா தன்னைத் திருத்தி வளர்க்கும் நிரந்தரத் தத்துவதடதைக் கண்டவனா கவும் இருக்க வேண்டும். "போர்ப்பறை"யில் அதையே நான் குறிப்பிட்டுள்ளேன்.

அத்தகைய பூரண தத்துவத்துக்கேற்ப எழுதப்படும் இலக்கியம் அதே சமயம் விஞ்ஞானமாகவும் சமயமாகவும், அரசியல் பொருளாதாரக் கோட்பாடாகவும் சரித்திரமாகவும், உண்மையான கலையாகவும் அமையும். ஆனால், அதற்காகத் தனது தனித்தன்மையை இழக்காது. முழுமைக் குத் தன்னை அர்ப்பணிப்பதால் முழுமையின் பூரண விரிவுகளையெல்லாம் தன்னிலும் ஏற்றித் தனது தனித்தன்மையைப் பூரணமாக- முழுமைக்கு உதவும் வகையில்-வளர்த்துக்கொள்ளும். உதாரணமாக, ஆர்த்தர் கிளார்க்கின் விஞ்ஞானக்கதைகளே ஓரளவுக்கு வருங்காலத்தின் விஞ்ஞானக்கோட்பாடுகளாகவும் இருக்கவில்லையா? பொதுவுடைமைக்குப் பிந்திய ரஷ்யாவின் கலையும் இலக்கியமும் அதன் அரசியல் சரித்திரமாகவும்: பொருளாதார சமூக மாற்றங்களினதும், அவற்றுக்குரிய கோட்பாடுகளின் நடைமுறை இயக்கங் களினதும் பதிவுகளாகவும் இருக்கின்றன.அவற்றைப் படிக்காமல் ரஷ்ய நாட்டின் இன்றைய சரித்திரத்தையே படிக்க முடியாது: சமூக, பொருளாதாரத் திட்டங்களின் போக்கையே புரிய முடியாது. இவை எதிர்காலப் பூரண இலக்கியம் மற்ற துறைகளோடு எவ்வாறு பின்னிப் பிணைந்து முழுமைய டையும் என்பதையும் இப்போதே ஓரளவுக்காவது காட்டுகின்

றன. அத்துடன் அத்தகைய பூரண இலக்கியத்துக்காகத் தன்னை அர்ப்பணித்த ஓர் எழுத்தாளன் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலுமே அதே வேளையில் அக்கறை கொண்டவனாகவும், தன் திறமைக்கும், நேரத்துக்கும் இயன்றளவு அவற்றின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தவனாகவும் இருப்பான். அதனால் கலைஞனே இனி வரும் பூரண யோகியின் முன்னோடியாக அமையலாம். உதாரணம் அரவிந்தர்.

4

பூரண இலக்கிய வளர்ச்சி சமூகத்தின் சகல துறைகளின் வளர்ச்சியாகவும் பரிணமிக்கும். அதனால் இன்றைய எழுத்தாளன் அரசியலோடு மிக நெருக்கமான தொடர்புடையவனாக இருக்க வேண்டும். காரணம், சகல துறைகளையும் ஒன்றோடு ஒன்றாக நெருக்கமாகத் தொடர்புபடுத்தி அவற்றை முழுமையடையச் செய்வதற்கும், சகல துறைகளையும் திட்டமிட்டுச் சமவேகத்தில் முழுமையை நோக்கி வளர்ப்பதற்கும் அரசியல் அதிகாரமே நேரடியான வழியைக் காட்டுகிறது. ஆதனால் பூரண இலக்கியத்தை விரும்புபவன் பூரணமாக அரசியலில் ஈடுபாடுடையவனாகவும் அதைத்தன் பூரண வழியில் திருப்புபவனாகவும் இருக்க வேண்டும்.

இந்த வகையில் பார்க்கும்போது இன்றைய சனசாயக அமைப்பு, பூரணமாக உதவாத அரசியல் அமைப்பாகவே இருக்கிறது. சனநாயக நாடுகளில் தனித்தனியாய் விடுபட்டு இயங்கும் சமூகத்தின் சகல துறைகளின் பிரிவும், அந்தப் பிரிவையே பெரும்பாலும் சுதந்திரமாகக் கருதும் சனநாயக அமைப்பும், மனித சரித்திரம் இன்று தவிர்க்க முடியாத வகையில் கோரும் பொதுவுடைமைச் சர்வோதய பூரண வாழ்க்கைக்கும் அதன் முழுமைக்கும் வேகமாக உதவுவதாகத் தெரியவில்லை. அது மிகத் தாமதமாகவே நடைபோடுகிறது. அந்தத் தாமதம் திசைகெட்ட தடுமாற்றத்துக்கும் சிதறலுக்கும் வழிவகுக்கக்கூடியதாகவும் இருக்கிறது. மார்க்சியப் பொதுவுடைமை நாடுகளில் சமூகத்தின் சகல துறைகளும், மத்தியிலிருந்து திட்டமிடப்பட்டு ஆற்றுப்படுத்தப்படுவதால், ஒன்றோடு ஒன்று இணைந்து முழுமையை நோக்கி வளரும் அளவுக்குச் சனநாயக அமைப்பு வளர்ச்சியைக் காட்டுவதில்லை. எல்லாச் சக்திகளும் ஒன்றாகத் திரட்டப்பட்டு, திட்டவட்டமான பூரணப் பொது இலட்சியத்துக்காகத் துரிதமாக அர்ப்பணிக்கப் பட்டு ஆற்றுப்படுத்தப்படுவதே இனி மனித சமூகத்தின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் என்பதை மார்க்சிய நாடுகள் காட்டி நிற்கின்றன.

ஆனால், அதே நாடுகள் சமய ஞானத்தை மறுப்பதால் முழுமையற்ற ஒரு பார்வையைக்கொண்டே முழுமையை எட்ட முயல்கின்றன. சமயமும் சமயவாதிகளும் இதுகாலவரை பிற்போக்குவாதத்தின் தூண்களாக இருந்தார்கள் என்பதற்காகச் சமய ஞானத்தை மறுக்கத் தேவையில்லை. அதை, முற்போக்கை விரும்புபவர்கள் தங்களது இலட்சியத்துக்காகப் புரட்சிகரமாகப் பயன்படுத்தலாம். அதை மார்க்சியவாதிகள் இன்னும் உணராதவர்களாகவே இருக்கின்றனர். அதனால் பொதுவுடைமை நாடுகளில் தவிர்க்க முடியாத வகையில் ஏற்படும் அரசியல் சர்வாதிகாரம் சில சமயங்களில் தவிர்க்க முடியாத வகையில் இலட்சியத்திலிருந்து பிறழ்ந்தும் திரிந்தும் போய்விடக்கூடிய ஆபத்தைக் காட்டுகிறது. சகல துறைகளும் அவற்றின் தனித்தன்மையை நசுக்கி, சர்வாதிகாரம் செய்யும் ஆபத்தும் ஏற்படுகிறது. சமூகத்தின் சகல துறைகளும் பொது இலட்சியத்தின் முழுமையை நோக்கி இணைக்கப்பட்டு ஆற்றுப்படுத்தப்படும் அதே வேளையில், ஒவ்வொரு துறையும் அந்த முழுமையின் அடிவான எல்லைகளைப் புதுத் திசையில் விரித்து அகலமாக்கி வளர்க்கக் கூடிய வகையில் சுதந்திரம் பெற்றவையாகவும் இருக்கவேண்டும். அவற்றின் கண்டுபிடிப்புகள் முன்னிலும் புதுமையாக இருக்கும்போது அவை பொது இலட்சியத்தையே, அது வரித்துக்கொண்ட தத்துவத்தையே பூரண வழியாகத் திருப்பக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

ஆனால், மார்க்சிய நாடுகளில் மத்திய கண்காணிப்பு ஒருமைப்பாட்டை அழுத்தி வளர்க்குமளவுக்குப் பொதுவுடை மைச் சர்வோதயம் கொண்டு வரக்கூடிய சகல துறைகளின் பூரண மலர்ச்சியாகவும், முழுமையைப் பலபக்கமாக விரிக்கும் முழுமைக்கு எதிராகாத தனித்துவச் சுதந்திரமாகவும் வளர்வதாக இல்லை. அது மார்க்சியப் பொதுவுடைமை காலப்போக்கில்தான் கொண்டுவரக்கூடிய நிலையாக இருக்கும் என்று கூறுவது சரியான காரணமாகாது. அதுவரைக்கும் சர்வாதிகாரம் அவசியம் என்று கூறுவதும் உண்மையான காரணமாகாது. உண்மையான காரணம், அது வரித்துள்ள தத்துவத்தில் பூரணமின்மை இருப்பதே தான். அதனால்தான் அந்தளவுக்கு இறுக்கமான சர்வாதிகாரம் தேவைப்படுகிறது.

ஆனால், அதற்காகச் சமய ஞானத்தை ஏற்றுக்கொள்ளும் பூரணப் பொதுவுடைமைத் தத்துவத்தை ஏற்றுக்கொள்வதால் மட்டும் சர்வாதிகாரத்தின் இறுக்கம் தளர்ந்து, சுதந்திர மலர்ச்சி வந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. ஏதோ ஓரளவுக்காவது மத்தியில் அதிகாரம் திரட்டப்படாமல் முழுமைப்படுத்தும் முயற்சியை மேற்கொள்ள முடியாதுதான். ஆனால், அது தேவைக்கதிகமான சர்வாதிகாரமாக, தனிப்பட்டவர்களின் குறைகளையும் தீர்க்கதரிசனமின்மை யையும் மறைக்கும் சர்வதிகாரமாக மாறாமல் இருப்பதற்குச் சமய ஞானத்தை ஏற்றுக்கொள்ளும் பூரணத்துவம் மட்டும் உதவப் போவதில்லை. அதை நடைமுறைப்படுத்துபவர்களின் பூரண வளர்ச்சியையும் பக்குவத்தையும் பொறுத்ததாகவும் அது அதேசமயம் இருக்கும். அதனால்தான் கலைஞர் களும் எழுத்தாளர்களும், அந்த பூரண விரிவைக் காட்டக்கூடிய பக்குவத்தை வளர்க்கக் கூடியவர்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதால், அரசியலில் அதிகமாகப் பங்கு பற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

லெனினின் மேதாவிலாசமும் எழுத்துவன்மையும், ட்றொட்ஸ்கியின் கலையுணர்வும் தீர்க்கதரிசனமும் ஸ்டாலினிசத்தின் விளைவு அந்தளவு கொடூரமாக இருந்தது என்பதும் ஒரு காரணந்தான். அதை மறுக்க முடியாது. அதனால்தான் அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாக எழுத்தாளர்களும் கலைஞர்களும் இருக்காமல், அவர்களே அரசியல்வாதிகளாகவும் இருக்க வேண்டும். ஒரு நாட்டின் மந்திரிசபையில் குறைந்தது இரண்டொரு அரசியல்வாதிகளான கலைஞர்களும், எழுத்தாளர்களும் இனிமேல் இருந்தால்தான், பூரண முழுமைக்காக மத்தியில் ஒப்படைக்கப்படும் அதிகாரம் பயங்கரமான சர்வாதிகாரமாக மாறாமல் இருக்கும். கலைஞன் மட்டுமல்ல பூரண சமயஞானியே அரசியலுக்குத் தலைமை தாங்கும் இறுதிக்கட்டம் ஒரு சுழல் வட்ட முழுமையின் முடிவுக்கட்டமாக இன்று வந்துள்ளது. அதை ஒவ்வோர் எழுத்தாளனும் இனிமேல் உணரவேண்டும்.

5

சகல துறைகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து முழுமையடையும் வேளையில், நாட்டின் சகல எழுத்தாளர்களும் ஒரு பேரவையில் அங்கம் வகித்துப் படைப்பாளிகள் இயக்கத்தையே ஆரம்பிப்பது அவசியமாகும். எந்த நாட்டில் நாடு முழுவதுக்குமுரிய ஓர் எழுத்தாளர் பேரவை இல்லாதிருக்கிறதோ, அந்த நாடு இன்னும் காலத்தை உணராது பின்தங்கிக் கிடக்கிறது என்பதுதான் அர்த்தம். தனிப்பட்ட கொள்கைகள் இன, மத, மொழி வேறுபாடுகள் ஆகியவற்றைக் கடந்து, எல்லோரும் அங்கம் வகிக்கும் ஓர் எழுத்தாளர் பேரவை அவசியம். அத்துடன் எழுத்தாளர்கள் என்று கூறும்போது கவிதை, சிறுகதை, நாடகம், நாவல் எழுதுபவர்களை மட்டும் கருதக்கூடாது. அத்தகைய பார்வை முழுமையான இலக்கியம் வளர்வதற்குத் தடையாகவே இருக்கும். விஞ்ஞானம், பொருளாதாரம், கலை,கல்வி, அரசியல், இலக்கியம் போன்ற சகல துறைகளிலும் திறமையும் ஆக்க முயற்சியும் உள்ள எல்லா எழுத்தாளர்களும் பங்குபற்றும் ஒரு பேரவை இருக்க வேண்டும். அது முழு நாட்டினதும் அறிவாளி வர்க்கத்தைத் தன்னுள் அடைப்பதாக அப்போது அமையும். அதனால் ஒவ்வொரு துறையிலும் ஏற்படும் வளர்ச்சியும் கண்டுபிடிப்பும் பிற துறைகளின் வளர்ச்சியையும் கண்டுபிடிப்பையும் தூண்டுவதாகவும், எல்லாம் முழுமையை நோக்கி முற்போக்குக்கு வழிவகுப்பதாகவும் அமையும். இன, மத, மொழி வேறுபாடுகளுடன் துறை வேறுபாடுகளும் அதனால் நீங்கும். ஒவ்வொரு துறைக்குமுரிய புதிய கண்டுபிடிப்புகள் சாதாரண மக்களைத் தொடுமளவுக்குத் கருத்துப் பரிமாறல், பிரசாரம், வெளியீடு ஆகியவற்றை அது சீராகச் செய்வதற்கும் உதவும். அத்தகைய பேரவையும் அது நடத்தும் படைப்பாளிகள் இயக்கமும் பல்வேறு வழிகளிலும் பொதுமக்களோடு தொடர்புடையதாக இயங்க வேண்டும். அரசியல்வாதிகளைக் கொண்ட நாட்டின் பாராளுமன்றத் துக்குச் சமமாகப் பொறுப்பும் பங்கும் தனக்கும் உண்டு எனக் கருதிச் செயல்படும் எழுத்தாளர் பேரவையே முழுச் சமூகத்தையும் முற்போக்காக முழுமையாக நோக்கி வளர்க்க முயலும் ஓர் அரசாங்கத்தின் உண்மையான மேற்சபையாக, முதவையாக இயங்குவதாக இருக்கும்.

6

பூரண இலக்கியமும் பூரண வாழ்க்கையும் இவற்றோடு மட்டும் மலராது. ஒவ்வொருவனும் தன் அக ஆழத்தைக் கண்டுபிடிக்காத வரைக்கும் முழுமையும் பூரணத்துவமும் வரப்போவதில்லை. அதனால் சமயஞானிகளின் கண்டுபிடிப்பைப் பூரணமாகப் பயன்படுத்த இனிமேல் இந்த எழுத்தாளர்கள்தான் முன்வரவேண்டும். சமய ஸ்தாபனங்கள் மிகக் குறுகிய வட்டங்களுக்குள் நிற்கின்றன. அவற்றின் குறுகிய போக்கைத் தகர்த்தெறிந்து, சர்வ சமய ஞானப் புரட்சியையும், அது கொடுத்துதவும் பொதுவுடைமை மலர்ச்சியையும் எழுத்தாளர்களும் கலைஞர்களுமே இனிமேல் கொண்டுவர வேண்டும். பழைய சமயஞானத் திடமிருக்கும் உண்மையை சமூக வளர்ச்சிக்கு உதவும் வகையில் எல்லாத் துறைகளிலும் பிரவேசிக்கச் செய்யவேண்டும். அதற்காக முதலில் ஒவ்வொருவனும் தனது அகத்திலேயே அந்த ஞானத்தை எழுப்ப வேண்டும். வர்க்க வேறுபாடுகளும் குணவேறுபாடுகளும் அங்குதான் பொதிந்து கிடக்கின்றன. அவையே பிற்போக்குக் கோட்டைகளாகவும், பிறப்புப் பிறப்பாய் வரும் இயல்புகளின் மறைவிடங்களாகவும் இருக்கின்றன. அவற்றைக் கைப்பற்றி, அங்கு புரட்சியைக் கொண்டு சென்று முழுமையின் மலர்ச்சியை ஏற்படுத்தாத வரைக்கும் புறச்சூழலில் மட்டும் புரட்சி நடத்திப் பூரண இலக்கியத்தையும் சரி முழுமையான வாழ்க்கையையும் சரி கொண்டுவர முடியாது. எழுத்தாளர்கள் இனிமேல் அதையும் உணர வேண்டும்.

7

இவை பொதுப்படையான தேவைகள், பூரண இலக்கியம் மலர்வதற்கு எல்லா நாட்டுக்குமுரிய பொதுத் தேவைகள் இவற்றின் அடிப்படையிலேயே ஈழத்தின் தனித்தேவைகளை, முழு உலகின் முழுமை வளர்ச்சிக்கு முரணாகாமல், கண்டு பிடித்துத் தீர்க்க வேண்டும். அவற்றைப்பற்றிய கணக்கெடுப்பு இன்றைய ஈழத்து எழுத்தாளன் ஒவ்வொருவனுக்குமுரிய பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DARREN D. KIRUPA
PROFESSIONAL CORPORATION



WE SPECIALIZE IN SERIOUS PERSONAL INJURY AND INSURANCE CLAIMS.

kirupalaw.com

Darren Kirupa, J.D.
Barrister & Solicitor

416.222.0002

4789 YONGE ST, SUITE 819
TORONTO, ON. M2N 0G3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
கணபதி துணை
கணபதீஸ்வரம்
ஸ்ரீ செல்வ விநாயகர் தேவஸ்தானம்
SRI SELVAVINAYAGAR TEMPLE
416-299-9955
3411 McNicoll Avenue, Unit #1-3 Toronto, ON. M1V 4B7
facebook.com/ganapatheswaram www.ganapatheeswaram.com

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை: 8:00 மணி முதல் 1:00 வரை
மாலை 5:00 மணி முதல் 9:00 மணி வரை

பூஜை நேரம்
காலை: 8:00 மணி
காலை 10:00 மணி
மதியம் 12:00 மணி
இரவு 7:00 மணி
இரவு 9:00 மணி

ஸ்ரீ விநாயகர் மங்கள சேவை
திருமணம், திருமணப்பதிவு, மற்றும்
அனைத்து இந்துமத கிரியைகள் சேவை

"ஈசான சிவம்", "சிவாச்சார்ய சிரோன்மணி"
சிவஸ்ரீ. தியாக. முருகானந்தக் குருக்கள்
(ஆலய ஸ்தாபகர், முதல்வர், பிரதமகுரு, திருமணப்பதிவாளர்)
416-299-4957



வீடு வாங்க விற்க
அழையுங்கள்

FLEXIBLE COMMISSION PLANS | PROFESSIONAL REAL ESTATE PHOTOS
FREE VIRTUAL TOUR | EXCELLENT HOME STAGING
FULL MLS LITING | EXTENSIVE INTERNET EXPOSURE.
WEBSITE SRIGTAHOMES.COM.

HOMELIFE HIGHER STANDARDS

சிறி வில்வரட்ணம்
Sales representative
srihomelife@gmail.com



Home Life Future Realty Inc
205-7 Eastvale Dr,
Markham, On L3S4N8

Cell: 647-982-7884
www.srigtahomes.com

Not intend to solicit buyers or sellers currently under contract with a brokerage" *Some Condition may apply




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகமும்
# அதை நோக்கிய மாற்றங்களும்

தற்காலம் ஒரு புதுயுகத்தை நோக்கி மாறிக்கொண்டி ருக்கிறது. நாம் இரு உலகங்களுக்கிடையே கிடந்து போராடிக் கொண்டிருக்கிறோம். ஒன்று செத்துக்கொண் டிருக்கிறது: மற்றது பிறக்க துடிக்கிறது: பிறந்துகொண்டி ருக்கிறது.

இன்று இது பெரும்பாலாரும் ஏற்றுக்கொள்ளும் கருத்தாகும். ஆனால், பிறந்துகொண்டிருக்கும் புதுயுகத்தின் தன்மைகளை பற்றிப் புரிந்துகொண்டிருப்பவர்கள் மிகச்சிலரேதான்.

பிறந்துகொண்டிருக்கும் புதுயுகத்தைப் பொருள்முதல்வாத அடிப்படையில் பார்த்து சடம், உயிர், மனம் ஆகிய முத்தளங் களுக்குள்ளேயே முழுவதையும் காண முயல்பவர்கள்தான் பெரும்பாலான இன்றைய புரட்சிக்காரர்களாய் இருக்கின் றனர். மார்க்சியவாதிகளை இவர்களுக்கு உதாரணமாய் காட்டலாம்.

சடம், உயிர், மனம் ஆகிய தளங்களுக்கு அப்பாலும் உண்மை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்பவர்கள்கூட, புதுயுக மாற்றத்தை அந்த முத்தளங்களுக்குள்ளேயே காண முயல்கின்றனர்.பெரும்பாலான சமயவாதிகளும் காந்தீய வாதிகளும் இந்த ரகத்தினரேதான்.

பிறந்துகொண்டிருக்கும் புதுயுகம், சடம், உயிர், மனம் ஆகிய முத்தயங்களுக்கும் அவற்றிற்குரிய தாமச, ரஜச, சாத்வீக முக்குணங்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு தளத்துக்கும், குணத்துக்குமுரிய வாழ்க்கை முறையைக் கோருகிறது என்பதைப் புரிந்து கொள்பவர்கள்தான் பிறந்துகொண்டி ருக்கும் புதுயுகத்துக்கு உண்மையான உருவம் கொடுப்பவர்களாய் இருப்பர்.

மார்க்சிய சித்தாந்தம் புதுயுகத்துக்குரிய பெருந்தத்துவமல்ல, அப்படி அதை மாறாட்டஞ் செய்பவர்கள் சரித்திர வளர்ச்சியைப் பற்றியும், அது காட்டும் சான்றுகளைப் பற்றியும் சீராகத் தெரிந்துகொள்ளாதவர்களேதான்.

மார்க்சிய சித்தாந்தம் பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண் டுகளில் ஆரம்பமான விஞ்ஞான ரீதியான லோகாயத அறிவுவாதத்தின் இறுதிக்கோலமேதான். இதைப் "போர்ப்பறை"யில் "புதிய வார்ப்புகள்" என்ற கட்டுரையில் விரிவாக நான் விளக்க முயன்றுள்ளேன். அந்த வகையில் பார்க்கும்போது இன்றைய மார்க்சியவாதம் காலங்காலமாகச் சமயஞானத்துக்குப் போட்டியாக வளர்ந்து வந்துள்ள லோகாயதவாதத்தின் இன்றைய இறுதிக்கோலம் என்றுதான் சொல்ல வேண்டும் அதனால் உடல், உயிர், மனம் ஆகிய முத்தளங்களுக்கு அப்பால் செல்ல முயலும் புதுயுகத்தின் பிறப்புக்கு மார்க்சிய சித்தாந்தம் வழிவகுக்கப் போவதில்லை. இதுகாலவரை மனவளர்ச்சியடைந்துள்ள மனித இனத்தின் ஒரு பகுதியினர் முழு உண்மையாக நம்பிய லோகாயத வாழ்க்கை முறையை அதன் விஞ்ஞான ரீதியான சீரான கோணத்தில் வளர்த்துக் காட்டியுள்ள ஒரு சித்தாந்தமேதான் மார்க்சியவாதம். அந்த வகையில் புதுயுகப் பிறப்புக்குரிய சித்தாந்தமாயிருக்காமல் பழைய யுகவாழ்க் கையின், செத்துக்கொண்டிருக்கும் யுகவாழ்க்கையின் முடிவுக்குரிய இலக்கணமும் சித்தாந்தமுமாகவே மார்க்சிய வாதம் இருக்கிறது.

ஆனால், அந்த முடிவைக்கூட அதனால் தனியாகவே கொண்டுவர முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம், மனத்தளத்தில் இதுவரை ஒன்றோடொன்று போட்டியாகவும், அந்தப் போட்டி மூலமே ஒன்றுக்கொன்று உதவியும், பக்கபலமாகவும் வளர்ந்துவந்துள்ள இருபெரும் பார்வைப் போக்குகளுள் ஒன்றான லோகாயத வாதத்தின் இறுதிக்கோலமாக அது இருக்கிறதேயொழிய, மனத்த ளத்தின் அடுத்த முக்கிய பார்வைப் போக்கான சமய சித்தாந்தப் பார்வையின் முடிவாகவும் அது இல்லை.

மார்க்சிய சித்தாந்தத்துக்கு விளக்கந்தர முயல்பவர்கள் மனத்தளத்துக்குரிய இந்த இரண்டு போக்குகளான லோகாயதவாதப் பார்வையையும் (Materialist Outlook) , சமயவாதப் பார்வையையும் (Metaphysical Outlook) இன்னும் ஒன்றுக்கொன்று முரண்பட்டாதகவும் வேறுபட்ட தாகவுமே காண்கின்றனர்: விளக்குகின்றனர்.

அந்நிலையில், செத்துக்கொண்டிருக்கும் பழைய யுகவாழ்க்கை மனத்தளத்தையே அதன் இறுதி வளர்ச்சித் தளமாகக் கொண்டிருக்கும் வாழ்க்கையென்றால், அதன் சாவுக்குக்கூட மார்க்சிய சித்தாந்தத்தால் பூரணமாக இலக்கணம் வகுத்து வழிகாட்ட முடியாதிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

பழைய வாழ்க்கையின் முடிவைக் காட்டும் சித்தாந்தம். இதுவரை கண்ட பரிணாமத்தின் இறுதித்தளமாகியுள்ள மனத்தளத்தின் இருபெரும் போக்குகளான லோகாயதப் போக்கையும் சமயப்போக்கையும் ஒரேவாக்கில் இணைக்கும் சித்தாந்தமாகவே இருக்கவேண்டும்

இங்கு குறிப்பிடப்படும் யுகமாற்றம் என்பது சாதாரண சிறு காலக்கட்ட மாற்றங்களைக் குறிப்பிடவில்லை. உயிரினங் களின் பரிணாம வளர்ச்சியில் அடிப்படையான மாற்றங்களை கொண்டுவந்த பழைய யுக மாற்றங்களை ஒத்த ஒரு பெருங்காலமாற்றமே இங்கு குறிப்பிடப்படுகின்றது. சாதாரண வரலாற்று மாற்றங்களுமல்ல.

முனித பரிணாம வளர்ச்சியில் இன்று ஒரு புதுப்பரிமாணம் ஏற்படப்போகிறது.

சடவுலகம் தோன்றி உயிர் தோன்றும் வரைக்கும் ஒரு காலப்பிரிவு பல கோடி வருடங்களைக் கொண்டதாக இருந்நது. அது சடத்தளம் உருவாகிய காலம். அது முழுமையடையும் போது உயிர் இனங்களின் வளர்ச்சியோடு சடத்தளத்திலும் திரும்பவும் வளர்ச்சி ஏற்படுகிறது. எனவே ஒவ்வொரு தள வளர்ச்சியையும் ஒரு சுழல் வளர்ச்சியாகக் கொள்ள வேண்டும். சடத்தளச் சுழல் முழுமையடையும் போது உயிர்த்தளச் சுழல் தொடங்குகிறது. அந்த உயிர்த்தள வளர்ச்சி திரும்பவும் சடத்தளத்திலும் வளர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு சுழலாக இருக்கிறது. உயிர்த்தள வளர்ச்சி மனத்தள வளர்ச்சியில் முழுமையடைகிறது. ஆனால் மனத்தள வளர்ச்சி என்பது முந்திய சடத்தளத்திலும், பிந்திய உயிர்த்தளத்திலும் திரும்பவும் ஒரு புது வளர்ச்சியைப் புகுத்திய சுழல் வளர்ச்சியாகவே இருக்கிறது. மனத்தளம் வளர்ச்சியடைந்துள்ள மனிதனில், சடமும், உயிரும் ஒரு புதுப் பரிமாணங்களைக் காட்டும் பரிணாம வளர்ச்சியாக இருக்கிறது. அது மட்டுமல்ல, அப்படிப்பட்ட ஒரு புது வளர்ச்சியைக் காட்டும் மனிதன், தனது புறச்சூழலிலுள்ள சடத்தளத்தையும், உயிர்த்தளத்தையும் புதுப்போக்கில் மாற்றியுள்ளான். இன்றைய நாகரிக வளர்ச்சி, மனிதனின் மன வளர்ச்சியானது புறச்சூழலுக்குரிய சடத்தளத்திலும் உயிர் தளத்திலும் மனத்தளத்திலும் ஏற்படுத்தியுள்ள பல கோண மாற்றங்களை காட்டுகிறது.

சடத்தளத்துக்குரிய குணம். வேகமற்ற மந்த குணம்.
உயிர்த்தளத்துக்குரிய குணந்தான் ரஜத குணம் இச்சையை வெளிப்படுத்தும் குணம். வேகம் பிறக்கும் குணம். செயல் வெளிப்படையாகத் தெரியும் குணம் அதனால் வளர்ச்சி மாற்றங்களும் துரிதமாகத் தூண்டப்படும் குணம்.

மனத்தளத்துக்குரிய குணந்தான் சாத்வீக குணம். உயிரின் இச்சைகளுக்குரிய வேகம் அறிவாலும், சீரிய சிந்தையாலும் கட்டுப்படுத்தப்பட்டு அமைதி காணும் குணம். சீரிய செயலைத் தூண்டும் குணம்.

மனிதன் உடல், உயிர், மனம் ஆகிய மூன்று தளங்களுக்கு முரியவனாக இன்று இருக்கிறான். அதனால் அந்த மூன்று தளங்களுக்குரிய குணங்களும் அவனிடம் காணப் படுகின்றன.

இன்று மனத்தளம் முழுமையடைந்து மனதையும் கடந்த புதுத் தளம் மனித வளர்ச்சியில் வெளிப்படப் போகிறது. மனித இனமே உயிரினங்களின் உச்சப் பரிணாம வளர்ச்சியைக் காட்டுகிறது. அந்த இனத்திடமே அடுத்த தளம் வெளிப்படப் போகிறது.

மனதையும் கடந்த புதுத் தளம் புதிதாக உருவாக்கப்பட வேண்டிய ஒரு தளமல்ல. சடவுலகப் பார்வைக்குப் புலனாகா விட்டாலும் ஏற்கனவே அது இருக்கிறது. அதற்கும் அப்பாற்பட்ட தளங்களும் இருக்கின்றன. இனிவரும் வளர்ச்சியில்தான் சகல மக்களும் அவற்றைக் கண்டு அனுபவிக்கும் நிலை ஏற்படும்.

இனி வரும் தளம் பேரறிவுத் தளமாகும். மனத்தளத்துக்கும் அப்பாற்பட்ட விஞ்ஞானமயகோசத்துக்குரிய பேரறிவு. அது வெளிப்படும்போது அதன் மூலம் திரும்பவும் உடல், உயிர், மனம் ஆகிய தளங்கள் புது வளர்ச்சிக்குள்ளாகும் ஒரு சுழல் ஆரம்பமாகும். அந்தச் சுழல் வளர்ச்சிக்குரிய யுகத்தில் உடலுடன், உயிருடன், மனதுடன் அவற்றைத் தனது பேராட்சிக்குட் படுத்தும் பேரறிவு (விஞ்ஞானமயகோசம்) எல்லாவற்றிலும் பேராட்சி நடத்தும். அதாவது, புறச்சூழலும் அதற்கேற்றவாறு நிச்சயமாக மாற்றப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய யுகம் செத்துக்கொண்டிருக்கிறது என்பதற்கும் புதிய யுகம் பிறக்க முயன்றுகொண்டிருக்கிறது என்பதற்குமுரிய உண்மையான அர்த்தம் இதுதான்.

உடல், உயிர், மனம் ஆகிய மூன்று நிலைகளுக்கும் அவற்றுக்குரிய தாமத, ரஜத, சாத்வீக முக்குணங்களுக்கும் உரிய சுழல் முடிவடைந்து, அந்த மூன்று நிலைகளையும் முக்குணங்களையும் தனது பேராட்சிக்குட்படுத்தும் வெளிப் படையான பேரறிவின் ஆட்சிக்குரிய யுகச்சுழல் ஆரம்பித்துக் கொண்டிருக்கிறது. நான்காவது நிலைக்கும் நான்காவது குணத்துக்குமுரிய யுகச்சுழல்.

**பேரறிவுத் தளம்**

பேரறிவுக்குரிய, முக்குணங்களைக் கடந்த சக்தியகுணம்.
மனத்தளத்தின் வளர்ச்சியும் அதன் சாத்வீக குணத்தின் எழுச்சியும் ஏற்பட்ட காலத்திலிருந்தே மனிதனின் நாகரீக வளர்ச்சியும் சமயங்களின் எழுச்சியும் தோன்றின எனலாம்.
நாடோடிக் கூட்டங்களாய் வேட்டையாடித் திரிந்த பழைய கற்காலக் கட்டத்திலிருந்து நதிக்கரையில் நிலையாகக் குடியேறி விவசாயம் மேற்கொண்ட காலம் வரையுள்ள இடைப்பகுதியில்தான் மனிதன் பூரணமாகத் தன்னை வெளியுலக வாழ்க்கையில் மிருக நிலையிலிருந்து விடுவித்துக் கொண்டான். அந்த இடைப்பட்ட காலப் பகுதியில்தான் மனிதனுக்குரிய உண்மையான மனத்தளம் என்பது உருவாகிற்று. அந்தக் காலப் பகுதியில்தான் மனிதனுக்கும் அவனது மனத்தளத்துக்குமுரிய விசேஷ குணமான சாத்வீக குணமும் எழுச்சி பெற்றது.

ஆயுதங்களின் உதவியையும் பொருட்களின் பயனையும் உணர வந்த மனம், இன்றைய பொருளை அடிப்படையாகக் கொண்ட நாகரீக வளர்ச்சிக்கு வித்திட்டது. அதே மனத்தளத்தின் முதிர்ந்த குணமாக எழுச்சியுற்ற சாத்வீக குணம் சமய ஞானத்தை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை மனிதனிடம் வளர்த்தது.

அதனால் இந்த மனத்தள-சாத்வீக குண மனித நாகரிகத்தினது வாழ்க்கையினதும் பெரும் பார்வைப் போக்குகளாக இரண்டு போக்குகள் வளர்ச்சியடைந்துள்ளன.

முதலாவது, பொருள் முதல்வாதம்.
இரண்டாவது, சமயத்தை ஏற்றுக்கொள்ளும் கருத்து முதல் வாதம்.
இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று போட்டியாக வளர்ந்து வந்திருந்தாலும், ஒன்றுக்கொன்று பக்கபலமாக நின்று உதவியுந்தான் வந்துள்ளன.

இன்று செத்துக்கொண்டிருக்கும் இந்த இரண்டு சித்தாந்தப் போக்குகளும் மாற்றமுற்றுத்தான் ஆகவேண்டும் அது மட்டுமல்ல, பிறக்கவிருக்கும் பேரறிவுப் பெருந்தளத் திலிருந்தும் அதற்குரிய பெருந்தத்துவப் போக்கிலிருந்தும் பார்க்கும்போது இந்த இரண்டு சித்தாந்தப் போக்குகளும் ஒரே தளத்துக்குரிய இரு சகோதரப் போக்குகளேதான்.

இன்று இந்த இரண்டையும் ஒன்றையொன்று எதிர்த்த போக்குகளாகப் பார்ப்போர் காலத்தை உணராதவர்களாகவே இருப்பர். பிறக்கவிருக்கும் பெருந் தத்துவத்துக்கு உருவங்கொடுக்க விரும்புவோர் முதலில் இந்த இரண்டும் ஒன்றையொன்று தழுவி முழுமை அடையும் கோலத்தைக் காண வேண்டும். அந்த முழுமையிலேயே பெருந் தத்துவத்தின் பிறப்புக்கும் வித்திருப்பதையும் கண்டு, அதைப் புத்திபூர்வமாகச் சிந்தனையாலும் செயலாலும் வளர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதாபீடம்

## ஸ்ரீநிவாசகுகனேஸ்வர சர்மா

புங்குடுதீவு–5, இலங்கை

திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகளுக்கும் கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், கிரகசாந்தி போன்ற வைதீக கிரியைகளுக்கும் நாடவேண்டிய இடம், மற்றும் மண்டப ஒழுங்குகளுக்கும் அழையுங்கள்



## குகன் குருக்கள்

**416.292.6089, 416.335.5505**

HOMELIFE
HIGHER STANDARDS

Homelife Today Realty Ltd., Brokerage
Each Office Independently Owned & Operated
Off: 416.298.3200
Fax: 416.298.3440

**"உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி"**



**"Your Satisfaction OUR PLEASURE"**


**PARTHEEPAN SUBRAMANIYAM**
SALES REPRESENTATIVE
C:416.508.8497
E: ANGITHAN@GMAIL.COM

**KANDEEPAN THAMBIPILLAI**
SALES REPRESENTATIVE
C:416.970.4189
E: THAMBI01@YAHOO.CA

No[illegible]s currently listed for sale or individuals currently under contract with a Brokerage




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளையும் திருமணத்திற்கு தேவையான
அனைத்து சேவைகளையும் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**416.266.3333**

திருமண பதிவு அதிகாரி "சிவாச்சார்ய கலாநிதி"

**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள்** (ஐயாமணி சிவம்)

ரொறன்ரோ ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயஸ்தாபகர், முதல்வர், பிரதமகுரு
புங்குடுதீவு கலட்டியம்பதி ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய முதல்வர், பிரதமகுரு

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் நடாத்தும் பூவரசம் பொழுது சிறப்புற ஸ்ரீ வரசித்தி விநாயகர் பாதம்பணிந்து ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## Dr. SivaSri. Panchadchara Vijayakumara Kurukkal



Sri Gowri Mangala Services
Hindu Wedding & Religious Services
628E BIRCHMOUNT ROAD, SCARBOROUGH, ON.
M1K 1P9 CANADA. 416.266.3333
vijayankurukkal@gmail.com

Sri Varasiththi Vinaayagar
Hindu Temple of Toronto
3025 KENNEDY RD. UNIT-12, SCARBOROUGH, ON.
M1V 1S3 CANADA. 416.291.8500
www.vinaayagar.com



# Are you getting Million Dollar advice?

Life100
INSURANCE & INVESTMENTS INC.

- Life Insurance
- Critical Illness Insurance
- Non-Medical Insurance
- Disability Insurance
- Travel Insurance
  - Super Visa
- Mortgage Insurance
- Long Term Care
- RRSP, Investments
- RESP
- Group Insurance
  - Medical & Dental Plans

**Sritharan Thurairajah** CLU, CHS

Direct: **416.918.9771**

10 Millner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6
Bus: 416-321-2500
www.life100.ca, info@life100.ca

MDRT Member of Million Dollar Round Table




SIMPLE SOLUTION IN A CRITICAL SITUATION





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் பிரயாணத்தின் கூடவே
எங்களின் அனுபவம் பயணிக்கிறது...




SkyRoute
TRAVEL SERVICES INC.

Tel: 416-439-4000 ext. 320
Fax: 416-439-6463
E-mail: vijay@skyroutetravel.com

1200 Markham Road | Suite 106
Toronto | Ontario | M1H 3C3 | Canada

IATA | Accredited Agent
tico.ca

Vijay Karthigesu
Travel Consultant
416 315 4722





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்க்கவியலும் குணவியலும்

## "ஒரு பரிணாம வரலாற்றுக் கண்ணோட்டம்"

"மெய்யுள்" உருவம் ஓர் எழுத்தாளனின் வித்துவச் செருக்கு, ஆணவம் தன்னை நிறுவுவதற்காகக் கண்டுபிடித்துள்ள பம்மாத்தல்ல. இன்று பல எழுத்தாளர்கள் மிகமிகச் செயற்கையாக உருவாக்கும் கற்பனாவாதக் கோலங்களில் இருந்து மெய்யுள் முற்றாக மாறுபட்டது. மெய்யுள் ஓர் எழுத்தாளனின் ஆணவ அறுப்பு முயற்சியின் உருவமாகும். இன்றைய தத்துவ வளர்ச்சியின் தவிர்க்க முடியாத இலக்கிய வெளிப்பாடாகும். அந்தத் தத்துவ வளர்ச்சி இன்றைய சிந்தனை, செயல், சரித்திர வளர்ச்சியின் தவிர்க்க முடியாத குரலாகும்.

இன்றைய வரலாறு தனிப்பட்ட மனிதனதும், முழுமனித இனத்தினதும் அறிவுத் தளத்துக்குரிய தனிப்பட்ட ஆணவத்தையும் கூட்டு ஆணவத்தையும் அறுத்து, மனிதனைப் பேரறிவுத் தளத்துக்குள் இறக்கும் நிலையை எட்டியுள்ளது. மனிதனைப் பரவலாகப் பரம்பொருளான சக்தியத்தின் நேரடித் தரிசனத்திற்குத் தயார்ப்படுத்துகிறது. அதற்குரிய பெருந்தத்துவம் அறிவுத்தளத்திற்குரிய சகல சிறு தத்துவங்களினதும் சமயங்களினதும் கூட்டு ஆணவத்தைக் குலைக்கும் தரிசன விளக்கமாக இருக்கிறது. அந்தப் பெரும் தத்துவத்திற்குரிய இலக்கியம் அதேவகையில் இலக்கியத்தையே அழிக்கும் இலக்கிய மாக மாற்றப்பட்டு, இதுவரையில் இருந்த இலக்கியத்தின் கற்பனைக் கோலங்களை எல்லாம் குலைக்கும் கூட்டுத்தியானமாக வளர வேண்டியிருக்கிறது. (அது ஒரு பெரும் சக்திய இலக்கிய வளர்ச்சியைத் தோற்றுவிக்கும்.) அதனால் அதை எழுதும் எழுத்தாளனும் தனது ஆணவத்தை அறுத்து "நாளை"க் கடந்தவனாகவே, பேரறிவின் நேரடி இயக்கத்தைத் தன்மூலம் வெளிக்காட்ட விட்டுக்கொடுப்பவனாகவே இருப்பான்; இருக்க வேண்டும்.

அந்த வகையில் புதிய மெய்யுளுக் குரிய உருவம், உள்ளடக்கம், மொழி நடையெல்லாம் கற்பனை அறுப்புக்கும் ஒழிப்புக்குமுரிய சாதனையாகவுமே நிற்கும். (போர்ப்பறையில் கலை பற்றிய ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு). எனவே, மெய்யுள் இன்றைய தவிர்க்க முடியாத Anti இலக்கியம் என்றும் சொல்லிக்கொள்ளலாம்.

எனவே, இவற்றை விளக்க இன்றைய பெருந்தத்துவத்தின் சில வெளிக்கோடுகளையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும்.

பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் என்ற பாகுபாடு இன்று விஞ்ஞான ரீதியாகத் தன்னை நிறுவ முடியாத குருட்டுப் பார்வையாகிவிட்டது. சடம், உயிர், நினைவு (எண்ணம்) என்பவை வெவ்வேறு தளத்தோற்றங்களாக இருப்பினும், அடிப்படையில் அத்வைதத் கலப்பையே காட்டுகின்றன என்பதை விஞ்ஞானம் இன்று மறுக்க முடியாமல் ஒப்புக் கொண்டுள்ளது. சடத்தை ஆராயும்போது, சடமானது சடத்தின் உருவத்தைக் கடந்த சக்தி ஒளி அலையாகவும், அவற்றுக்கு அப்பாற்பட்டதாகவும் மாறுகிறது. அப்படியென்றால், சடத்தை அல்லது பொருளை முதலாக எப்படிக் கணிப்பது? உண்மையில் சடம் (பொருள்) என்பது நிலையான ஓர் அடித்தளமல்ல.

இன்றைய மனித நினைவு நிலையின் உச்ச வளர்ச்சி (பரிணாமம்) சடத்தைக் கடப்பதோடு மட்டும் நிற்காது முழுச்சடத்தையும் கரைத்து. அதன் நிலையான நிரந்தர அடித்தளத்தில் நிறுவலாம் என்றும், அந்த நிலையான சடத்தின் அடித்தளம் மிகப் பிரமாண்டமான பேர்ஞான (சாதாரண நினைவு நிலையைக் கடந்த) தளமாக இருக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கோட்பாட்டை விஞ்ஞானம் இன்று மிகத் துணிச் சலாக முன்வைக்க வந்துள்ளது. (ஆர்தர் சி. கிளார்க்கின் "2001 ஒடிசி")

இந்த நிலையில் பொருளை முதலாகக் கொள்வது எப்படி? இன்றைய சாதாரண மனிதன் அறிந்த கருத்தை அல்லது அறிவு நிலையை அல்லது நனவு நிலையை முதலாகக் கொள்வது எப்படி?

இரண்டும் பிழையே. பிழை என்பதைவிட இரண்டும் பாதிப்பாதி விளக்கங்கள் என்று சொல்வதே சரி. இரண்டையும் இணைத்த அதே சமயம் இரண்டையும் கடந்த புதிய பார்வை தேவைப்படுகிறது. அதுவே மெய்முதல்வாதம்.

அந்தப் புதிய பார்வையைப் பழைய சமயங்கள் ஏற்கனவே முன்வைத்துவிட்டன.
பிரம்மமே சக்தி. சக்தியே பிரம்மம்.
முழுப் பிரபஞ்ச சக்தியும் அதன் உருவ வெளிப்பாடுகளும் அடிப்படையில் மாற்றமற்ற பிரம்மமே (எல்லையற்ற நித்திய பேர்ஞான நிலையே) என்று வேதாந்தம் கூறுகின்றது.

சடத்திற்கும் உயிருக்கும் நினைவுக்கும் அப்பாற்பட்டதாகவும், அவற்றை இணைப்பதாகவும் நிற்கும் அந்த நித்திய பேர்ஞான விடுதலை நிலையை அனுபவித்தவாறே, அதில் நின்றவாறே அந்த அனுபூதி மகான்கள் கூறியுள்ளனர். அவர்கள் மாபெரும் விஞ்ஞானிகள்.

அந்த நிலையை இன்றைய விஞ்ஞானிகள் இன்னும் அனுபவிக்கவில்லை. அந்த நிலையை அளக்கும் கருவிகளோ மனப்பக்குவமோ அவர்களிடம் இல்லை. இருப்பினும், அந்த நிலையை யூகிக்கும் கட்டத்திற்கு அவர்கள் வந்துவிட்டனர். அந்த யூகத்தை எதிர்காலத்திற் குரிய கோட்பாடாகவும் முன் வைக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையில், தனிப்பட்ட சமய ஸ்தாபனங்களையும் அவற்றின் தவறானபழக்கங்களையும் ஒதுக்குவது வேறு. அவற்றுக்குக் காரணமாயிருந்த சடத்தையும் நினைவையும் தாண்டிய பேர்ஞான நிலையை ஒதுக்குவது வேறு. பின்னதை ஒதுக்க முடியாது. அது நிரந்தரமானது. மார்க்ஸ் அதையுமே அபின் என்று ஒதுக்கிவிட முயன்றார். ஆனால், இன்றைய விஞ்ஞானம் அந்த அடித்தளப் பேர்ஞான விடுதலை நிலையை நோக்கியே அடியெடுத்து வைக்க முயல்கிறது.

மனித சமூகத்தின் வளர்ச்சியை அறிய ஆதிப்பொதுவு டைமை நிலையிலிருந்து சரித்திரத்தை ஆராய்ந்தால் போதாது என்றும், அதன் மூலம் பெறப்படும் உண்மைகள் இன்றைய பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது என்றும் இன்றைய விஞ்ஞானி உணரத் தலைப்பட்டுள்ளான். மனித சமூகத்தின் ஆரம்ப இயக்கவியல் என்ன? அதற்கும் முந்திய சடநிலை வளர்ச்சிக்குரிய இயக்கவியல் என்ன? சடத்துக்கும் முந்திய நிலையின் இயக்கவியல் என்ன?

இன்றைய சமூகவியல் ஆராய்ச்சி, மார்க்ஸூம் ஏங்கல்சும் கருதியதுபோல் வெறும் பொருளியல் அரசியல் ஆராய்ச்சி மட்டுமல்ல, அது அடிப்படையில் உயிரியல், பௌதிகவியல் ஆராய்ச்சியாகவும் அதற்கு அப்பாற்பட்ட ஆன்மீக விசாரமாகவும் உருமாற வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது. மார்க்சையும் ஏங்கல்சையும்விட Julian u;uxley, Teirhard, Aurobindo போன்றவர்கள் இன்றைய தேடலுக்கு உருவங்கொடுப்பவர்களாவர். அந்தத் தேடல் திரும்பவும் பழைய நான்கு முக்கிய சமயங்களினதும் அடிப்படையை உணரும் விஞ்ஞான- ஆன்மீகத் தேடலாகவே இருக்க முடியும். ஒருவகையில், மார்க்சிய பொதுவுடைமையும் அதற்குரிய அகவிடுதலையும் ஆன்மீக விடுதலையேதான். ஆனால், உற்பத்திச் சாதனங்களையும் அதற்குரிய உறவு முறைகளையும் மாற்றுதலால் மட்டும் அந்த அகவிடுதலை வரப்போவதில்லை. அப்படி வரலாம் என்று நினைப்பது சடம், உயிர், மனத் தளங்களுக்குள்ளேயே அவற்றிற்கு அப்பாற்பட்ட விடுதலையைக் காணலாம் என்று கனவு காண்பதாகும். அது இன்றைய விஞ்ஞானத்துக்கே முரணானது. சடத்தின் தளமே நிலையற்று வழுவிக்கொண் டோடும் போது, நிரந்தர அகவிடுதலையை வெறும் உற்பத்திச்சாதன - உறவு முறையால் மட்டும் எப்படி நிரந்தரமாக நிறுவலாம்?

எனவே, புதிய பெருந்தத்துவம் பொருள்முதல்வாதம், கருத்து முதல்வாதம் என்ற பாகுபாடுகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. பொருளையும் நினைவையும் கடந்த சத்தியம் அல்லது உண்மை நிலை சத்தாகவும் சித்தாகவும் இருக்கிறபடியால் பாகுபாட்டுக்கு இடம் இல்லை. புதிய தத்துவம் அடிப்படையில் ஆன்மீகத் தத்துவமனதும் இருக்கும். ஆதனால் இதுவரை நிலவிய சமயங்களினதும் அடிப்படை உண்மை சகல வேலைகளிலும், சகல சமூக இயக்கங்களிலும் தெரியவரும்.

அடிப்படைச் சத்திய அத்வைத நிலையைச் சகலத்திலும் தெரிய வைப்பதே புதிய பெருந்தத்துவத்தின் நோக்காக இருக்கும். சகலத்திலும் எழுச்சியடைவது சத்தியமே. அந்த எழுச்சியையே "சர்வோதயம்" என்பது குறிக்கிறது.

ஆனால், இந்தத் தத்துவத்தின் பூரணமான உருவம் இனிமேல்தான் வரவேண்டியுள்ளது. மனித சமூகத்துக்குரிய வரலாற்றை சடம், உயிர், மனம் முதலிய தளங்களின் தோற்றங்களின் வரலாற்றோடு இணைத்துப் பார்க்கவும், ஒவ்வொரு கட்டத்திலும் வரலாற்றோடு இணைத்துப் பார்க்கவும். ஒவ்வொரு கட்டத்திலும் வரலாற்று இயக்கம் எவ்வாறு இருந்தது என்பதனையும், இனிமேல் எவ்வாறு இருக்கப் போகிறது என்பதையும் ஆன்மீக- விஞ்ஞான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாக விளக்க வேண்டியுள்ளது. சகல கோட்பாடுகளையும் மதிப்பீடுகளையும் தகர்த்துக்கொண்டு எழும் ஒரு பிரம்மாண்டமான சிந்தனை– செயல் எழுச்சிக்குரிய ஒரு தத்துவ உருவமாக அது அமையப் போகிறது.

குறிப்பாக வர்க்கவியல் என்பது அற்பமான விடயமாகி விடும். இனிமேல் குணவியல்தான் முக்கியத்துவம் பெறும். குணங்களைப் பற்றிக் கூறிய சமயங்கள் எவற்றின் அடிப்படையில் அவை வந்தன என்று கூறவில்லை. உண்மையில் அவை பரிணாமக் கட்டங்களுக்குரிய குணமாகும். (சடத்துக்குரிய மந்தம் –அசைவின்மைப் பண்பு.) உயிர்நிலை வெளிப்பாட்டின் குணமே ரஜதகுணமாகும் (உயிருக்குரிய வேகம், அசைவுப் பண்பு.) மனநிலை வெளிப்பாட்டின் குணமே சாத்வீக குணமாகும் (மனதுக்குரிய பண்புகளான அறிவு, அன்பு, பண்பாடு இவற்றைக் குறிப்பது.) மனித வரலாறு இந்தக் குணங்களைக் கடக்கும் பரிணாமத்தின் வரலாறாகும். குணங்களுக்குட்பட்ட உருவங்களிலும், தளங்களிலும் குணங்களைக் கடந்த சக்தியத்தை வெளிப்படுத்த முயலும் வரலாறாகும். குணங்களைக் கடக்கும் அம்முயற்சி சமூகமளவில் நடக்கும்போது படிப்படியாக சமூக எழுச்சியையும் அதற்குரிய போராட்டங்களையும் காட்டுகிறது.

பழைய இந்து மரபின் சாதிப்பிரிவுகள் எந்த *அடிப்படையில்* நிறுவப்பட்டன என்பதற்குரிய பூரண விளக்கங்கள் இதுவரை காட்டப்பட்டதில்லை. ஆனால், உண்மையில் பழைய நான்கு வர்ணங்களும் சமூகத்தின் அளவில் மனிதன் இலகுவாகக் குணங்களைக் கடந்து வளர்வதற்கு வகுக்கப்பட்ட பிரிவுகள்தான். தனிப்பட்ட மனிதன் தன்னளவில் குணங்களைக் கடந்து வாழ்வதற்கு நான்கு ஆச்சிரமங்கள் இருந்தன. பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம். அதேபோல் சமூகமளவில் பரிணாம முன்னேற்றத்திற்காக வகுக்கப்பட்ட பிரிவுகள்தான் பிராமண, சத்திரி, வைசிய, சூத்திர வர்ணங்களாகும்.

முழு உயிரினங்களினதும் வளர்ச்சியை விஞ்ஞான ரீதியாகக் கணக்கெடுத்து, அந்தக் கணக்கெடுப்புக்கு ஏற்ப மனித பரிணாமத்தைச் சத்திய உச்சத்தை நோக்கித் துரிதப்படுத்தி வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டவையே அந்த ஆச்சிரம – வர்ணப் பாகுபாடுகளாகும். மறுபிறப்புக் கொள்கையோடு அவை பொருத்தப்பட்டு, “தத்துவம் ஆசி” என்ற இலட்சிய நிலையைச் சதா முன்வைத்து சமூக இயக்கமே பிரமிக்கும் வகையில் ஆற்றுப்படுத்தப்பட்டிருக்கிறது.

உயிரினம் தனது பரிணாமப் பிரயாணத்தில் நனவு நிலைக்குரிய மனத்தளத்தில் ஏறியபோது மனித நாகரீக வளர்ச்சியும் ஆரம்பமாகிறது எனலாம். பழைய கல்லாயுத காலம் முதல் நதிக்கரை நாகரீக எழுச்சிவரை மனித இனம் அந்த மனத்தளத்துக்கு ஏற நடத்திய தயாரிப்புக் காலமே மிருகத்துக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட கலப்பு நிலை.

அந்தக் கலப்பு நிலைக்குரிய மனநிலையை உண்மையான மனித மனநிலையாக – உண்மையான மனத்தளத்துக்குரிய நிலையாகக் கொள்ளாமல் மிருக – மனித மாற்றுவலை யத்துக் குரிய ஆதி மனநிலையாகவே கொள்ள வேண்டும். அதற்குப்பின் வந்த எழுச்சியில் மனித அறிவுநிலை உண்மையான மனித மனத்தளத்துக்கு ஏறியபோது நான்கு முக்கிய வர்க்க வித்தியாசங்களைக் காட்டிற்று.

முதலாவது, மனம் மனத்தளத்திலேயே வயித்த நிலை. மனமானது தன் நினைவின் தளத்திலேயே: அதாவது அறிவிலேயே அதிகம் வாழ்ந்த நிலை. அதனால் அது உண்மையான மனத்தளத்திற்குரிய சாத்வீக குணத்தில் வாழ்ந்த நிலை, அன்பு, அறிவு, அகிம்சை மேலிட்ட நிலை. மனதளத்துக்கும் அப்பாற்பட்ட பேரறிவுத் தளத்தின் எல்லைகளையும் தொட்டும் ஊடுருவியும் பாய்ந்த நிலை. பேரறிவுக்கசிவும் மெல்ல மெல்ல உட்புகுந்த நிலை.

அந்த நிலைக்குரிய குணம் சாத்வீக குணமென்றால், அந்தக் குணத்துக்குரியதாகச் சமூகத்தில் தெரிந்த வர்க்கமே பிராமண வர்ணமாகும். முனித மனம் மனத்தளவில் வாழ்ந்தவாறு அதற்கப்பாற்பட்ட பேரிறிவுத் தளத்துள்ளும் ஊடுருவ முயன்ற போக்கை வெளிப்படுத்திய வர்க்கம்.

மனித மனம் மனத்தளத்தில் லயித்து அதற்குரிய சாத்வீக குணத்தில் நிற்காமல் உயிர்த்தளத்துக்குரிய ரஜத குணத்துக்குட்பட்டு நின்ற நிலை இரண்டாவது. உயிர்த் தளத்தின் வேகம், கோபம், ஆசை ஆகிய ரஜத குணப்பண்புகளின் ஆளுகைக்குட்பட்டிருந்த மனித மனநிலையைப் பிரதிபலித்த வர்க்கமே சத்திரிய வர்ண மாகும். அது இரண்டாவது வர்க்கம்.

மூன்றாவதாக, மனித மனமானது உண்மையான மனத்தளத்துக்குரிய குணமான சாத்வீக குணத்திலும் லயிக்காது, உயிர்த்தளத்துக்குரிய (மன வளர்ச்சியற்ற உயிர்களுக்குரிய) ரஜத குணத்திலும் லயிக்காது, உயிரினத்துக்கு முந்திய சடத்திற்குரிய குணமாக தாமதகுணத்தில் நின்றபோது அது மந்தப் போக்காகவும் சடமான பொருட்களில் உள்ள ஆசையாகவுமே வெளிப்பட்டது. சமூகத்தில் அதை வெளிப்படுத்திய வர்க்கமே வைசிய வர்க்கமாகும்.

மிருக – மனித மாற்று வலையமான ஆதிக்கலப்பு நிலையில் இருந்து (கல்லாயுத காலம் முதல் நதிக்கரை நாகரீகம் வரை) உண்மையான மனத்தளத்துக்கு எழுச்சியுற்ற மனித குலம் இந்த மூன்று மனப்போக்குகளுடன் இன்னு மொன்றைக் காட்டிற்று.

மனத் தளத்துக்கு மனிதகுலம் எழுச்சியுற்ற காலத்துக்குப் பின்பும், ஆதி – மிருக மனித மாற்று வலையத்துக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைத்தளத்தில் நிற்கும் மிருக – மனித கலப்புப்போக்கு. மனித மனமானது சாத்வீக, ரஜத, தாமத குணங்களில் லயிக்காது அவற்றுக்கும் கீழ்ப்பட்ட ஆதி இடைத்தள இயல்பைக் காட்டும் நிலை. அந்த மிருக – மனித இடையறிவுக் குரிய சமூக வர்க்கமே சூத்திர வர்க்கமாகும்.

பழைய பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர சமூகவர்ணங் களின் அர்த்தங்கள் இவைதான். இவை உண்மையில் பிறப்பை அடிப்படையாகக் கொண்டவையல்ல. இவை குணங்களை அடிப்படையாகக் கொண்டவை. உடலை அடிப்படையாகக் கொண்டவையல்ல. மனத்தளங்களின் நினைவுகளை அடிப்படையாகக் கொண்டவை.

குணமும் நினைவுகளும் நிலையானவையல்ல. மாறுபடக் கூடியவை. சுடம், உயிர், மனம் ஆகிய பெருந்தளங்களே மாறிக்கொண்டிருக்கும் பெருந்தளப் போக்குகளாக இருக்கும் போது மனத்தளத்தின் நினைவுகளும், அவை வெளிப் படுத்தும் குணச்சாயல்களும் எப்படி மாற்றமுறாமல் இருக்கும்?

அவை மாறுபவை, அது மட்டுமல்ல, புத்தி பூர்வமாக மாற்றப்பட வேண்டியவை. அவற்றைக் கடந்து மாற்றமற்ற சத்திய நிலையை அடைய வேண்டும் என்பதே அந்த வர்ணங்களை வகுத்த சமூக மரபின் நோக்கமாகும்.

ஒரு மனிதன் தனது ஒரு பிறப்பிலேயே வர்ணங்களைக் கடக்க வழிவகைகள் இருந்தன. அவை பிரமச்சரிய, கிரகஸ்த, வானப்பிரஸ்த, சந்நியாச ஆச்சிரமங்களாகும். சந்நியாசி குணங்களைத் தாண்டியவன். அதனால் சகல வர்ணங்களினதும் வழிபாட்டிற்குரியவன். மனத்தளத்தையும் தாண்டிப் பேரறிவுக்குள் நிற்பவன்.

பிறப்பால் கட்டுப்படுத்தப்படாத இந்த வர்ணாசிரம வழி வகைகள் பிராமண, சத்திரிய வர்க்கங்களுக்கு மட்டும் உரியவை என்றும் குற்றஞ்சாட்டப்படலாம். ஆனால் மறு பிறப்பு, கர்மமுயற்சி என்ற கொள்கைகளின் அடிப்படையிற் பார்க்கும்போது, சத்திய விடுதலைக்குரிய குணப்பக்கு வத்தைக் கொண்டவன் அதற்குரிய சரியான வர்ணத்தி லேயே பிறப்பான் என்பதையும் மறுக்க முடியாது.

இருப்பினும், சூத்திரன் ஒருவனுக்குக்கூட உண்மையான விடுதலையை விரும்பி, வர்ணக் கட்டுப்பாடுகளில் இருந்து தப்பி ஓடி சந்நியாசியாக வாழும் துணிவும் தேடலும் இருந்திருந்தால் அவனுங்கூட சகல வர்ணகங்களினதும் மரியாதையையும் ஆதரவையும் பெற்றுத்தான் இருப்பான்.

எனவே, தனிப்பட்டவனின் விடுதலைக்குச் சதா நேரமும் வழி இருந்தது. பிறப்பும் அதற்குரிய உடலும் ஒரு தடையல்ல. ஆனால் தனிப்பட்டவனைப்போல் முழுச்சமூகமும் வளர வேண்டியிருந்தது. முழுச் சமூகத்தையும் ஒரு தனி மனிதனாக எடுத்தால், அந்தச் சமூகம் தாண்ட வேண்டிய பிரமச்சரிய, கிரகஸ்த, வானப்பிரஸ்த, சந்நியாச நிலைகளே சூத்திர, வைசிய, சத்திரிய, பிராமண வர்ணங்களாகும். முழுச் சமூகத்தையும் பிராமண நிலைக்கு உயர்த்துவதும் பேரறிவுக்குத் திசை திருப்புவதுமே பிராமண வர்க்கத்துக்குரிய தர்மமாகும்.

தனி மனிதனைப்போல் முழுச் சமூகமும் அவ்வாறு வளரவே செய்தது: செய்கிறது.

பிராமண உச்சத்தை நோக்கிச் சத்திரிய வர்க்கம் எழுச்சியுற்றது. சமூகத்தினதும் தனி மனிதனதும் வளர்ச்சிக்குத் திசை காட்டவும், மனத் தளத்துக்கும் அப்பாற்பட்ட பேரறிவுத்தளத்துக்கு வழிகாட்டவும் பிராமண வர்க்கத்தைப்போல் சத்திரிய வர்க்கமும் உரிமை பெற்றது. அந்த எழுச்சி சத்திரிய வர்ணத்துக்குக் கீழ்ப்பட்ட வர்ணங்களின் வளர்ச்சியையும் துரிதப்படுத்தியது. வர்ணப்பிரிவுகளின் எல்லைகளிலும் முதல் தகர்ப்பை ஏற்படுத்தியது. (புத்தர் – மோஸஸ் காலத்தை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.)

அதுபோல் அடுத்ததாக வைசிய குலம் பிராமண நிலைக்கு எழுச்சியுற்றது. ஒரு காலத்தில் பிராமண வர்க்கமும் பின்பு பிராமண – சத்திரிய குலங்களும் சமூகத்தில் பெற்றிருந்த அதிகாரத்தையும் தகுதியையும் வைசியரும் பெற்றுக் கொண்டனர். அவர்களின் எழுச்சி சூத்திரியரின் எழுச்சி யையும் துரிதப்படுத்துகின்றது. அதேபோல், முந்திய வர்க்கங்களின் எல்லைகளை இன்னும் தளர்த்திக் கலக்க வைத்தது. (கிறிஸ்து முதல் முகம்மது ஊடாக ராமகிருஷ்ணர் வரையுள்ள காலம்.)

இன்று சூத்திரர் எழுச்சியடைந்துவிட்ட காலமாகும். இராம கிருஷ்ணருக்குப் பிந்திய இந்த இருபதாம் நூற்றாண்டு, மனித வரலாறு சமூகத்தின் சகலரும் பிராமணராகிய வரலாற்றையே குறிக்கிறது எனலாம். வர்ண எல்லைகள் முற்றாக கலந்து கரைந்துவிட்டன. சகலரின் மனமும் மனத்தளத்திலேயே லயிக்கவும், அதன் சாத்வீக குணத்திலேயே நிற்கவும், அதற்குரிய அறிவு வீச்சைக் காட்டவும் ஆரம்பித்துள்ள காலம். பேரறிவுத் தளமான அடுத்த பெருந்தளத் தாக்கத்தின் அருட்டலைச் சகலரும் எதோ ஒரு வகையில் உணரத் தொடங்கியுள்ள காலம்.

மனித குலம் முழுவதும் மனத்தளத்தில் ஏறி, அதற்குரிய உண்மையான சாத்வீக குணத்திலேயே (அறிவு, அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், பொதுவுடைமை) பெரும் போக்காக லயிக்கத் தொடங்கிவிட்டதென்றால், மனத்தளத் திற்கு அடுத்த பெருந்தளமாக பேரறிவுத் தளத்துக்குப் பரிணாமம் ஏறத் தொடங்கும் காலமும் வந்துவிட்டது என்ற முடிவு தர்க்கரீதியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை உணரும்போதே அதற்குரிய தயாரிப்பும் தொடங்கி விடுகிறது.

அந்த உணர்வையும் தயாரிப்பையும் ஆரம்பித்துவைக்கிறது சர்வமத சங்க – பூர்வ சர்வோதய இயக்க ஸ்தாபகரான பகவான் ஸ்ரீலஸ்ரீ நந்தகொபலகிரியின் காலம்.

உடல் – மனத் தளங்களுக்கு இடைப்பட்ட மிருக-மனித மாற்று வலயமான இடைத்தளக் கலப்புக் காலம் ஆதிமனித காலமாக இருந்தது. உயிர்த் தளத்துக்குரிய கலியுகம் முடிந்து, மனத் தளத்திற்குரிய சத்திய யுகம் ஆரம்பித்த மாற்று வலயக் காலம் வரலாற்றில் கல்லாயுதம் முதல் நதிக்கரை நாகரீகம் வரை நீடித்த காலம்.

அந்தக் கலப்புக் காலத்தைப் போல புதிய தளத்துக்குரிய புதிய சூழலில் மனத்தள – பேரறிவுத்தள மாற்றுவலயக் கலப்புக் காலம் இப்போ ஆரம்பித்துள்ளது. மனத்தளத்துக் குரிய கலியுகம் முடிந்து பேரறிவுக்குரிய சத்திய யுகம் ஆரம்பிக்கும் மாற்றுவலயக் காலம். மனித – பெருமனிதக் கலப்பு, மனித-தேவக் கலப்பு, அறிவு-பேரறிவுக் கலப்பு.

இது அடுத்த பெருத்தல எழுச்சிவரை நீடிக்கும். ஆனால், முன்பைப்போல் இது நீண்ட காலமாக இருக்காது. மனித அறிவு மூலம் பரிணாமப் போக்கானது தன்னையே புத்தி பூர்வமாக உணர்ந்து தன்னையே புத்தி பூர்வமாக உணர்ந்துகொண்டு, பேரறிவுக்கு தன்னை அர்ப்பணித்துச் சரணாகதியடைந்து நடக்கும் தயாரிப்பானது மிக மிகச் சுருக்கமாகவே இருக்கும்.

அந்தத் தயரிப்புக்க்குரிய தத்துவமே சர்வமத-சர்வோதய மாகும் அல்லது பூரண சர்வோதயமாகும் அடுத்த பெருந்தளத்துக்குரிய எழுச்சி சகல துறைகளிலும் அதன்மூலமே ஆர்ருப்படுத்தப்படும்.

பரிணாமம்
– அதன் தூக்க, கனவு, விழிப்பு, தூறிய நிலைகள் திரியில் நெருப்பெரிகிற காலம், மனதை அமுக்கிய தாமதப் பாறை பிளவுபட்டுச் சிதறுகிற காலம். அந்தப் பாறையில் ஒட்டி வாழ்ந்த ரஜத, சாத்வீக குணங்கள் தகர்த்தெறியப் படுகிறகாலம்.

அது வந்துவிட்டது.
கற்பாறையைப் பிளக்கத் திரியில் நெருப்பேற்றி விட்டுத் தொழிலாளி கத்துவான்.
“கல்பொறே...!”
பாறைவெடி!
பாறை வெடிக்கப்போகிறது, தயாராகுங்கள் என்ற கூப்பாடு. மனதை அமுக்கியுள்ள முக்குணங்களைத் தகர்தேறிவ தற்குக் காலங்காலமாக வந்த சமய ஞானிகளும் இவ்வாறுதான் எச்சரித்து வந்துள்ளனர். காலங்காலமாய்த் திரியில் நெருப்பெறி வந்துள்ளது. இன்று பாறை வெடிக்கப் போகிறது.
அந்த எச்சரிக்கைக் குரல்களுள் இன்று ஒன்று மட்டும் அதிக வலுப்பெற்றுக் கேட்கிறது. அது யேசுவின் குரல். தேவராச்சியம் அண்மித்துவிட்டது, தயாராகுங்கள்!

உண்மையில் தேவராச்சியம் என்ற ஒன்று ஏற்படுமா? தேவராச்சியம் என்றால் எது?

அதை யேசு தெளிவாகச் சொன்னதில்லை. அனால், அதற்காக அது விளங்காமல் போனதுமில்லை. தேவராச்சியம் என்பது ஞானராச்சியமேதான். அது அன்றும் இருந்தது. இப்போதும் இருக்கிறது, என்றும் இருக்கும்.

ஆனால், இன்னும் அது எல்லோருக்கும் உரியதாக, பொது ராச்சியமாக, ஞானப்பொதுவுடைமையாக வரவில்லை. இனித்தான் வரவேண்டும். இதுவரை தனிப்பட்ட சிலர் அனுபவித்த ஞான அனுபவம் இனிமேல்தான் சகலருக்குமுரியதாக வரவேண்டியிருக்கிறது. அவ்வாறு சகலருக்குரியதாக வளரும் சர்வோதயக் கட்டத்தைத்தான் தேவராச்சியம் இங்கு நிறுவப்படும் கட்டமாக்க் கூறலாம். யேசுவின் கூற்றின் உண்மையான அர்த்தம் அதுதான்.

யேசுவின் காலத்தவர் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் நம்பியது இன்று நடைமுறையில் வரப்போகிறது. அவர்கள் கண்ட கனவு நனவாகும் கட்டம் இன்று வந்து கொண்டிருக்கிறது.

அல்லது அப்படிக் கூறுவதுதான் கனவோ? எப்படி இதை நம்புவது? அப்படியும் சில கேள்விகள் இங்கு எழலாம்.

ஆனால், உண்மையில் இனித்தான் கனவு அழியும் காலம் வந்துகொண்டிருக்கிறது. இதுவரை விழிப்புநிலை என்றும், விஞ்ஞான நிலை என்றும் நாம் பெருமிதப்பட்டுக் கூறி வந்த காலந்தான் உண்மையில் தூக்கம் – கனவு – விழிப்பு ஆகிய மூன்று நிலைகளைத் தாண்டிய உண்மையான போர்விழிப்பாக, ஞானவிழிப்பாக இல்லை. இனிமேல்தான் கனவு அழிந்து உண்மையான பேர்விழிப்பு வரப்போகிறது.

தூக்கம், கனவு, விழிப்பு, தூரிய என்ற நான்கு நிலைகள் இருப்பதாக வேதசாஸ்திரங்கள் கூறுகின்றன. தாமதம், ரஜஸ், சாத்வீகம் ஆகிய முக்குணங்களுக்கு உட்பட்ட சாதாரண மனிதன் தூக்கம், கனவு, விழிப்பு ஆகிய நிலைகளுக்கு அப்பாற்போக முடியாதவனாகவே வாழ்கி றான் என்றும், ஞானி மட்டுந்தான் அவற்றையும் கடந்த தூரிய என்ற சத்திய ஞானநிலைக்குரியவனாக வாழ்கிறான் என்றும் சாத்திரங்கள் கூறுகின்றன.

என்றும் இருப்பதும், எல்லாமாக இருப்பதும் – இருப்பு பேரறிவு – ஆனந்தம் என்ற சத்-சித்-ஆனந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மமேதான். அதை உணர்ந்த ஞானவிழிப்பு நிலைதான் தூரிய நிலையாகும். அதை உணர்ந்து அதுவாகவே இருக்கும் நிலை.

தனிப்பட்ட ஞானிகள் அந்தத் தூரிய நிலையை அனுபவித்து விட்டனர். ஆனால், மனித இனம் முழுதும் பரவலாக அதை இன்னும் தொட்டதில்லை. இனித்தான் அதைத் தொடக்கூடிய கட்டம் வருகிறது. அதைத் தவிர்க்க முடியாது.

1. உலகத்தின் பரிணாம வளர்ச்சியில் சடநிலையாய் இருந்த காலத்தையும் கட்டத்தையும் தூக்கம் எனலாம். தாமத குணத்தின் ஆட்சிக்காலம் – சடராச்சியம்.

2. உயிரினம் வளர்ச்சியுற்ற கட்டத்தை உலக வளர்ச்சியின் கனவுக் காலம் எனலாம். ரஜத குணத்தின் ஆட்சிக்காலம். மிருகராச்சியம்.

3. மனித மனம் தோன்றிய காலத்தில்தான் உயிரினத்திற்கு விழிப்பு தோன்றிற்று எனலாம். சாத்வீக குணத்தின் ஆட்சிக்காலம். சமயம் முதல் விஞ்ஞானம் வரை வளர்ந்த காலம். மனித ராச்சியம்.

4. இனிமேல் பரிணாமப்போக்கில், அதாவது மனதையும் அதன் சாத்வீக குணத்தையும் தொட்டுவிட்ட மனித இனத்தின் பரிணாமத்தில், தூரிய நிலை வளர்ச்சியுறும் கட்டம் வந்துவிட்டது. மனதையும் கடந்த ஞான விழிப்பான தூரிய நிலை முக்குணங்களையும் கடந்த சாத்திய நிலையாகும். உடலோடும், மனதோடும், உயிரோடும் மனிதன் இனிமேல் சாத்தியஞான உணர்வையும் தனது சகஜநிலையாக மாற்றிக்கொள்ளப் போகிறான். அதன் ஆட்சியே தேவராச்சியம். மனதின் பரிணாமச் சுழலுக்குரிய கலியுகம் முடிந்தபின் மனதையும் தாண்டிய சுழலுக்குரிய சத்திய யுகம் பிறக்கப்போகிறது. அதுவே கிறிஸ்து குறிப்பிட்ட தேவராச்சியமாகும்.

இது கனவுமல்ல கற்பனையுமல்ல. தர்க்கரீதியான பரிணாம வளர்ச்சி பற்றிய விஞ்ஞான வியாக்கியானமாகும். இந்த நிலையை இன்றைய உயிரியல் விஞ்ஞானியான ஜூலியன் ஹக்ஸ்லி மனித நிலையைத் தாண்டிய நிலை என்கிறார் (Trans humanism). கிறிஸ்தவ விஞ்ஞானியான ரேஹா (வுநடையாசன) மனிதன் கிறிஸ்துவாகும் நிலை என்கிறார் (Christogenesis). காந்தி ராமராச்சியம் என்கிறார். ஆனால், அதைத் தன்னளவிற் பூரணமாக அனுபவித்து, அதற்குரிய விஞ்ஞான ரீதியான விளக்கங்களையும் வியாக்கியானங்களையும் பிரமிக்கவைக்கும் கலைச்செறிவோடு போட்டுள்ளவர் இதுவரை அரவிந்தர் ஒருவரேதான். இன்று மார்க்ஸை ஏற்றிப் போற்றுவது போல் அரவிந்தரை மார்க்ஸைவிடப் பன்மடங்கு பெரிதாக, எற்றிப் போற்றி இயக்கம் நடத்தும் காலம் வந்துகொண்டிருக்கிறது. இந்தப் புதிய பரிணாம நிலையை அரவிந்தர் பேர்மனிதப் பிறப்பு என்றும், பேரறிவின் இறக்கம் என்றும் கூறுகிறார். அது அண்மித்துவிட்டது் தயாராகுங்கள்!

அதைத் தவிர்க்க முடியாது. தடுக்க முடியாது. தாமதப்படுத்தவும் முடியாது. பேரறிவின் பாய்ச்சலை யார் தடுக்கலாம்? யார் எதிர்க்கலாம்? அதனிடம் மனித இனம் பூரணமாகத் தன்னை அர்ப்பணித்து சரணாகதியடைவதே சரியான செயலாகும்.

எப்படிச் சரணாகதியடைவது? எப்படித் தயார்ப்படுத்துவது? யார் சரணாகதியடைவது? யார் தயார்ப்படுத்துவது?

யார் இதை முதலில் உண்மையாக உணர்கிறார்களோ அவர்கள்தான் தயாராக வேண்டும். எந்த இனம், எந்தச் சமயம், எந்த மொழிக்கூட்ட இதை உணர்கிறதோ அந்த இனம், அந்தச் சமயம், அந்த மொழிக்கூட்டந்தான் தயாராக வேண்டும்.

இதுவரை தனிப்பட்ட ஞானிகள் செய்ததை இனிமேல் ஒரு முழு இனமே, ஒரு முழுநாடே செய்யவேண்டும். அப்பொழுதுதான் முழு மனித குலத்தையும் அடுத்த பரிணாமக் கட்டத்துக்குள் இறக்குவதற்கு வேகமாக வழி பிறக்கும்.

யார் தயார்ப்படுகிறார்களோ, யார் மற்றவர்களையும் தயார்ப்படுத்துகிறார்களோ அவர்கள் மனித குலத்துக்கே தலைமை தாங்குபவர்களாக மாறிவிடுவர். அவர்கள் மனிதரில் தேவர்களாகின்றனர். அவர்களது மொழி தெய்வமொழியாகிறது. அவர்களது சமயம் முக்தியைப் பெறுகிறது.

தேவராச்சியத்தை நிலைநாட்டுபவர்கள் தேவர்களாகத் தானே வேண்டும்? அவர்களது மொழி தேவமொழியாகத் தானே வேண்டும்? அவர்களது சமயம் முக்தி பெற்ற சமயமாகத் தானே வேண்டும்? யார் இதைச் செய்யப்போகிறார்கள்? யார் இந்தப் பெரும் பதவியை அடையப்போகிறார்கள்?

எவர் அடுத்த வளர்ச்சிக் கட்டத்தின் தேவையை உணர்ந்து அதற்குரிய வழியையும் கண்டுபிடிக்கிறார்களோ அவர்கள் இதைச் செய்யத்தான் போகிறார்கள்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே தேவராச்சியம் அண்மித்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. ஆனால், அந்த அறிவித்தலை நம்பியவர்கள், ஊசித் துவாரத்தில் ஒட்டகம் நுழைத்தாலும் பணக்காரனால் சுவர்க்கத்துக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைய முடியாது என்ற உண்மையை, இவ்வுலகத்தில் நிறுவப்பட வேண்டிய தேவராச்சியத்துக்குரிய பொதுவுடைமை வழியை, இதுவரை நம்பியதில்லை. அதேபோல் வழியை நம்பிய இன்றைய பொதுவுடைமைவாதிகளோ இதுவரை இறைவனை நம்பியதில்லை. ஆனால், இரண்டும் பூரணமாக வென்றதில்லை. ஆமாம் ஞானப் பொதுவுடை மையும் ஒன்றையொன்று தழுவிவர வேண்டும். அப்போதுதான் இரண்டும் வெற்றியடையும். இல்லாவிட்டால் – ஞானப் பொதுவுடைமை கீழிறங்குவதற்குரிய சரியான தளம் கிடையாது. பொருளாதாரப் பொதுவுடைமை சீராக வளர்ச்சியடைவதற்குரிய சரியான தலைமை கிடையாது. அதனால் இரண்டும் தோல்வியடையவே செய்யும்.

இன்று தீவிர வழியையும் கண்டு, இறைவனையும் நம்புபவர்கள் எவர்களோ அவர்கள்தான் நிச்சயமாக இங்கு தேவராச்சியத்தை நிறுவக்கூடியவர்கள். அவர்கள் தான் உண்மையான பொதுவுடைமையையும் ஸ்தாபிப்பவர்களாக இருப்பர். வர்க்கங்களைத் தாண்டிய பொருளாதாரப் பொதுவுடைமையுடன், குணங்களைத் தாண்டிய பேர்மனித ஞானப் பொதுவுடைமையரசு! பூரண சர்வோதய அரசு!

நான்கு மதங்களும் வளர்ந்துள்ள இலங்கையில் இந்தப் போராட்டத்துக்குரிய நல்ல சூழல் நிலவுகிறது. அந்த நிலையில் இலங்கையில் நிலவும் எல்லா வகை அதிருப்தியையும் போராட்டத்தையும் இப்பேர்மனிதப் பிறப்புக் குரிய பெரும் போராட்டமாக ஏன் மாற்றி வளர்க்கக்கூடாது?

தொடங்குவது எங்கு? "எது செய்யப்பட வேண்டும்?" என்று லெனின் எழுதிய நிலையிலிருந்து இப்பொழுது வரை வந்துள்ள வளர்ச்சி "முடிவது எங்கு?" (அதற்கு) "எது செய்யப்பட வேண்டும்?" என்ற புதுக்கேள்விகளை எழுப்பும் ஒரு சூழலுக்கும், சரித்திர காலகட்டத்துக்கும் வந்துவிட்ட தாகவே நாம் கருதுகிறோம்.
"சத்தியம்"

விடுதலை என்ற இலட்சியத்துக்குரிய வழிகளும் விடுதலை பயப்பதாக இருக்க வேண்டும்.
ஈழத் தமிழரும் உலக விடுதலை இலக்கியமும் இயக்கமும்.
மெய்முதல்வாதம்
இன்று உலகின் வேறு எந்த நாட்டு இலக்கியத்திலும் காணமுடியாத அளவுக்கு ஈழத்துத் தமிழ் இலக்கியப் போக்கு ஒரு துரித வளர்ச்சியையும் பாய்ச்சலையும் காட்டுகிறது. முழு உலக இலக்கிய வளர்ச்சிக்கும் இன்று ஈழத்தமிழ் இலக்கியப் போக்கே தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறது. அதுவே முழு உலகத்துக்குமுரிய விடுதலை இலக்கியமாக இருக்கின்றது.

இது உண்மை. ஆனால், பலருக்கு இதை நம்புவது கஷ்டமாக இருக்கும். எப்படி நம்புவது.? எல்லா வெளித்தோற்றங்களும் இந்த உண்மையை மறைக்கும் திரைகளாக இருக்கும்போது எப்படி நம்புவது?.

தமிழ் இனத்தையும் அதன் மொழியையும் பிரதிபலிப்பதாகக் கூறும் ஈழத்துப் பெரும்பான்மைத் தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாம் தனித்தனியாகவும் கூட்டாகவும் இன்றைய உலக போக்குக்குத் தடையாகவே எதிர்நீச்சல் அடித்துக் கொண்டிருக்கின்றன. கனவுகள், கற்பனைகள், பொய்கள் எல்லாவற்றையும் கிழித்துக் கொண்டு உலக சமூகத்தின் யதார்த்தப் போக்கைக் காண முயலும் அரசியல் விழிப்பு அடுத்த நாடுகளில் எழுச்சியுற்றுக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் நம் கட்சிகளோ அண்டைத் "தாய்த்தமிழ்நாடு" வளர்த்துவரும் சினமா–பிஸ்னஸ்–அரசியல் கனவுகளில், கற்பனைகளில், பொய்களில் தம் கொள்கைகளையும் கொடிகளையும் நிறுவியவாறே போராட முயல்கின்றன.

அந்த நிலையில் உலகத்துக்குத் தலைமை தாங்கும் இலக்கியப் போக்கை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் எவ்வாறு எதிர்பார்க்கலாம்?

ஈழத்துத் தமிழரின் கல்வித்தரம் மிக உயர்வானது. ஆனால் அந்தக் கல்வியோ வயிற்றை வளர்க்கும் உத்தியோகக் கல்வியாக மட்டும் இருக்கிறது. "டொக்டர்", "என்ஜினியர்", "புறொக்டர்" (வழக்கறிஞர்) என்ற பெயர்களில் படித்த யந்திரங்களாக வாழும் போக்குத்தான் பெரும்பாலான ஈழத்துத் தமிழர்களின் இலட்சிய வாழ்க்கைப் போக்காக இருக்கிறது. மனதை வளர்க்கும் கல்வியையும், சிந்தனையை வளர்க்கும் வாழ்க்கைப் போக்கையும் அவர்களால் இன்னும் நாட முடியவில்லை.
அந்த நிலையில் எவ்வாறு உலக இலக்கியத் தலைமையை ஈழத்துத் தமிழ் இலக்கியத்திடம் எதிர்பார்க்கலாம்?.
நெற்றியில் விபூதிப் பூச்சு, வாயில் அன்பே சிவம் என்ற பேச்சு, போதாதற்குக் கோயில்கள், கோபுரங்கள், தேர்கள், திருவிழாக்கள் வேறு. மார்கழி விரத காலங்களில் கோலம் போட்ட வீட்டு முற்றங்களின் அழகுபோல் நம் சைவத் தமிழர்களின் தோற்றமும், அவர்கள் வாழும் சமூகத்தின் சம்பிரதாயங்களும் அழகாகத்தான் இருக்கின்றன. ஆனால், அத்தனையும் எத்தனை கோரமான ஏமாற்றுப் பூச்சுக் கோலங்கள். அத்தனை வெளிப் பூச்சுக்களின் மறைவிலும் உலகத்தின் பழம்பெரும் பிற்போக்குப் பலாத்காரமும், ஆக்கிரமிப்பும், சுரண்டலும் இன்னும் மரியாதையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. நிறத்தைச் சொல்லி, மொழியைச் சொல்லி, இனத்தைச் சொல்லி, வர்க்கத்தைச் சொல்லி, கட்சியைச் சொல்லி நடத்தப்படும் பலாத்கார ஆக்கிரமிப்பும் சுரண்டல்களும் மனிதக் குறைகளின் வெளிப்பாடுகள் என மன்னிக்கப்படக்கூடியவை. ஆனால், சமயத்தைச் சொல்லி நடத்தப்படும் பலாத்கார ஆக்கிரமிப்பும் சுரண்டலும் இறைவனையே குற்றங்களுக் குரியவனாக ஆக்கி விடுகின்றன. மனிதனையல்ல, அந்தக் கெட்டித்தனமான காரியத்தைப் பெரும்பாலான இந்துக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலமாகச் செய்து வருகின்றனர். அவர்களில் முன்னுக்கு நிற்பவர்கள் நம் யாழ்ப்பாணத்துச் சைவர்கள்.

தம் சொந்தக் குறைகளையும், கூட்டு ஆசைகளையும், ஆணவத்தையும், அறியாமையையும் இறைவனிலும் சமயத்திலும் ஏற்றிவிட்டுத் தம்மளவில் ஒன்றும் அறியாத நிரபராதிகள் போல், பண்பட்ட சாத்வீகவாதிகள் போல் நடித்துக் கொள்ளும் நமது ஈழத்துச் சைவர்களைப் போன்ற வேடதாரிகளை உலகில் வேறு எங்கும் காணமுடியாது என்று கூடச் சொல்லலாம். சாதிப்பாகுபாடு என்ற பெயரில் அவர்கள் காலங்காலமாக நடத்திவரும் பலாத்கார ஆக்கிரமிப்பும் சுரண்டலும் உலகில் காணப்படும் வேறு எல்லா வகையான ஆக்கிரமிப்புக்களையும் சுரண்டல் களையுமிடக் கோரமானவை. காட்டுமிராண்டித்தனமானவை. ஆனால், அந்தக் காட்டுமிராண்டித்தனத்தின் கோரத்தை அதன் நிர்வாணக் கோலத்தில் வெளியே தெரிய விடாமல், இதன் மேல்பூச்சுச் சாத்வீக வேடம் மறைத்து விடுகிறது. மறைத்துவிடுவதோடு அதன் கோரத்தையும் நோவையும் உணரவிடாது, அங்கு வாழும் பல நல்ல மனிதர்களின் உணர்வுகளையுங்கூட மழுங்கடித்து விடுகிறது. ஆதனால் எந்த விதக் கற்ற உணர்வும் முரண்பாட்டுணர்வுமின்றி அவர்களாலும் "அன்பே சிவம்" என்றும், "கடமை-கண்ணியம் – கட்டுப்பாடு" என்றும் ஒத்துப்பாட முடிகிறது. சாதிப்பிரச்சனையின் கோரத்தைப் புட்டுக்காட்ட முயல்பவர் களை, ஏதோ தன்பாட்டில் சாகப்போகும் ஒன்றுக்கு உயிரூட்ட முயல்பவர்களாகவும், தேவையற்ற சின்னப் பிரச்சனை களைச் சின்னத்தனமாக, தமிழர்களைக் காட்டிக் கொடுக் கும் துரோகத்தனமாகக் கிளறிவிட முயல்பவர்களாகவும் குற்றஞ் சாட்டி ஒதுக்கிவிட அவர்களால் முடிகிறது. சில சமயம் அந்த வெளிவேடக் கலாசாரத்தின் இல்லாத கற்பையும் தூய்மையையும் இருப்பதாக நிரூபிப்பதற்கும், அல்லாத அந்த மாயையைப் பாதுகாப்பதற்கும் அவர்காளல் கலையாட்டம் போடவும் முடிகிறது.

இதுதான் ஈழத்தமிழ்ச் சமூகம். குறிப்பாக யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழ்ச் சமூகம். இதனிடம் முழு உலகுக்குமே தலைமை தாங்கும் இலக்கியப் போக்கை எப்படி எதிர்பார்க்கலாம்?.

தமிழ் என்ற பெயரிலும், பண்பாடு என்ற பெயரிலும் தென்னிந்தியாவிலிருந்து வியாபாரத்துக்காக இறக்குமதி செய்யப்பட்ட தமிழ்ச் சஞ்சிகைகள், பத்திரிகைகள், திரைப்படங்கள் என்ற நோய்க்கிருமிகள் ஈழத்துத் தமிழ்ப் பொதுமக்களின் கலை, இலக்கிய ரசனையை அரித்துவிட்டு அதனிடத்தில் கனவுகள், கற்பனைகள், வரலாற்றுப் பொய்கைள் என்ற புற்றுக்களை எழுப்பியுள்ளன. அந்தப் புற்றுநோயை எதிர்ப்பதிலேயே தரமான ஈழத்துத் தமிழ் எழுத்தாளன் தன்முழு நேரத்தையும் செலவழிக்க வேண்டியவனாய் இருக்கிறான். அந்த நோயின் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இன்று ஒருவாறு வெற்றியைக் கண்டுள்ள அவன், அது விட்டுள்ள இடத்தில் உயிருள்ள கலை, இலக்கியக் கலங்களை எழுப்புவதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறான். அதில் அவன் பூரணமாக வெற்றி கண்டவனாக இல்லை.

அந்த நிலையில் அவனால் எப்படி முழு உலகத்துக்கும் வழிகாட்ட முடியும்?.

ஒருவகையில் அந்தச் சந்தேகங்கள் நியாயமானவையே. ஆனால், அவற்றுக்குக் காரணமாகவுள்ள முரண்பாடுகள் தான் நம்பிக்கையையும் எழுப்புகின்றன. எந்தெந்தக் காரணங்கள், எந்தெந்தச் சமூக அரசியல், கலாச்சார, சமய, யதார்த்த நிலைகள் உலகப் போக்குக்கு எதிரான முரண்பாடுகளாகத் தெரிகின்றனவோ, அவையேதான் புதிய சிந்தனை எழுச்சிக்கும், அது தரக்கூடிய தலைமைக்கும் காரணமாகவும் இருக்கின்றன.

உலகின் மிக மிகப் பிற்போக்கான அரசியல், சமூக, கலாச்சார, சமயச் சூழலில்தான் உலக வரலாற்றின் அடுத்த கட்ட எழுச்சிக்குரிய சிந்தனையும் செயலும் பிறக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனால், வேறு காரணிகளும் கூடிக் காணப்பட்டால், அதைவிட அருமையான வேறு சூழல் இருக்கவும் முடியாது.

அந்த வேறு காரணிகள் எவை?

முதலாவதாக, இன்றைய ஈழத் தமிழர்களின் பெரும் பாலானோர் ஏதோ ஒருவகையில் அதிருப்திப்பட்டவர் களாகவே இருக்கின்றனர். அநியாயத்தையும் அதர்மத்தையும் எதிர்த்து, அரசியல் துறையில் போராட வேண்டியவர்களாகவே தம்மைக் கருதிக் கொள்கின்றனர். அந்த அதிருதப்தியும், போராட்ட உணர்வும் வரலாற்றின் அடுத்த கட்ட எழச்சிக்கு மிக மிக அவசியமாகத் தேவைப்படும் மனச்சூழல் ஆகும். திருப்தியும் தேடலும் அவற்றுக்குரிய போராட்ட உணர்வும் இல்லாத ஒரு சூழலில் புதிய எழுச்சி பிறப்பது இயலாத காரியமாகும்.

அத்துடன் அரசியல் துறையில் அதிருப்தியுற்ற காரணத் தினால் போராட்டத்தின் அவசியத்தை உணரும் ஈழத்தமிழ்ச் சமூகம் அதே போராட்டத்தின் மூலம் தன் வெளிவேடச் சமூக, கலாச்சார அமைப்பைக் காப்பாற்றவும், அதற்கு எதிராக ஓர் அடிப்படைப் போராட்டத்தின் அவசியத்தை மறைக்கவும் திசை திருப்பவும் முயல்கிறது என்பதை உணர்ந்து, அந்த மேல்தளப் போராட்டத்தை முழுமைப்படுத்த முயல்பவர்களும் அதே அமைப்பில் இருக்கின்றனர்.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் அந்த ரகத்தினராகவே இருக்கின்றனர். வெளிவேட அமைப்பு நடத்தும் வெளிவேடப் போராட்டத்தையும், அதற்குக் காரணமாகவுள்ள அரசியல்துறை அதிருப்தியையும், அதே வெளிவேட அமைப்பின் சகல அம்சங்களையும்

தகர்த்தெறியும் முழுப் போராட்டமாக மாற்ற வேண்டுமென்பதையும், அந்த மாற்றத்தின் மூலமே அந்தப் போராட்டத்தை முழு உலகத்துக்கும் வழிகாட்டும் போராட்டமாக வளர்க்க வேண்டுமென்பதையும் ஒத்து உணர்ந்தவர்களாக அவர்கள் இருக்கின்றனர். உதாரணமாகத் தென்னிந்தியாவிலிருந்து கட்டற்ற முறையில் இதுவரை இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற சஞ்சிகைகளைக் கட்டுப்படுத்த அவர்கள் எடுத்த முயற்சிக்குரிய அர்த்தம் வெறும் இலக்கியத்துறையோடு நின்றுவிடுவதில்லை. அம்முயற்சியை ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார, சமயத் துறைகளுக்குரிய கனவுகளையும், பொய்களையும், வெளிவேடப் பூச்சுக்களையும் அழிக்க உதவும் ஒரு பெரும் போக்கின் சிறு அம்சமாகவே பார்க்க வேண்டும். அப்படியே தான் அவர்கள் பார்க்கின்றனர். அது அவர்களின் இலக்கியப் போராட்டம் மட்டுமல்ல, அதுவே சாதிக் கொடுமைக்குமான, அரசியல் ஏமாற்றங்களுக்கும் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கும் எதிரான ஆரம்பப் போராட்டமாகவும் இருக்கிற. எழுச்சியுற்றுக் கொண்டிருக் கும் உலக சமூகத்தின் முற்போக்குச் சக்திகளோடு ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தையும் பிணைக்கும் ஓர் பேர் முயற்சியின் "போர்க்கோலம்".

அதை உணரும்போது, உலக இலக்கிய வளர்ச்சிக்கு நம் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் எவ்வாறு தலைமை தாங்கலாம் என்று முன்பு எழுந்த சந்தேகங்கள் மெல்ல மெல்லக் கரையத் தொடங்கிவிடும்.

ஆனால், மற்றாகக் கரைந்துவிடா. ஆவற்றை முற்றாகக் கரைப்பதற்கு வேறு ஆதாரங்களும் வேண்டும்.

உலகத்தின் பழம்பெரும் பலாத்கார ஆக்கிரமிப்பையும் சுரண்டலையும் தன் வெளிவேடச் சாத்வீகப் பூச்சுக்களால் மறைத்துக் கொண்டிருக்கும் தமிழ்ச் சமூகம், அதே வேளையில் உலகத்தின் ஒரு பழம்பெரும் சமூகமாகவும், பழம்பெரும் இலக்கிய, கலாச்சார சமய வரலாற்றைக் கொண்டதாகவும் இருக்கிறது. அதனால இன்றைய உலகப் பிரச்சினைகளுக்கு வழிகாட்டக்கூடிய அனுபவ முதிர்ச்சியும், அந்த அனுபவம் இட்டுச் சென்று தொட்டுக்காட்டிய ஞானப்படுக்கையும் அதனிடம் இல்லாமலில்லை. அந்த அனுபவ முதிர்ச்சியையும் அது தொட்ட ஞான ஊற்றையு மே இன்று நம் தமிழ்ச் சமூகம் தன் சாத்வீக வெளிப்பூச்சுக்களாக மாற்றியுள்ளது. அந்த அனுபவமும் ஞானமும் எந்த அக்கிரமங்களையும். அறியாமையையும் பலாத்காரத்தையும் எதிர்த்தனவோ, அவற்றையே தன் உள்ளடக்கமாகவும், அந்தரங்க வாழ்க்கைப் பண்புகளாகவும் மாற்றி, அன்றைய தமிழ்ச் சமூகம் மாறாட்டம் செய்கிறது. முருகனின் கோயிலுக்கள் சூரன் கொலுவேறிய கதை. கண்ணகியின் கற்பை வெறும் வாயளவிற் பேசிக்கொள்ளும் வெளிவேட வியாபார விபச்சார வாழ்க்கை இருந்தாலும் கண்ணகியும் சரி, முருகனும் சரி நம் பழம்பெரும் தமிழ்ச்சமூகத்துக்கு அந்நியமானவர்களில்லை. அவர்களில்தான் நம் கலாச்சாரத்தின் அடித்தளம் தங்கியுள்ளது.

அந்த வகையில் பார்க்கும்போதுதான் நாம் சந்திக்கும் முரண்பாடுகளின் உண்மையான தன்மை தெரியவரும். தம் பின்தங்கிய நிலையிலிருந்து எழுச்சியுறப் போராடிக்கொண்டிருக்கும் ஆப்பிரிக்கச் சமூககங்களைப் போல் நம் ஈழத்துத் தமிழ்ச் சமூகம் பொருளாதார வறுமையோடு கலாச்சார சமய வறுமையையும் காட்டும் ஒரு சமூகமல்ல. தன் முரண்பாடுகளிலிருந்து விடுதலை பெற முயன்றுகொண்டிருக்கம் நம் ஈழத்துத் தமிழ்ச் சமூகம், அமெரிக்கச் சமூகத்தைப்போல் அண்மைக்கால வரலாற்றையும் அனுபவத்தையும் கொண்டுள்ள ஒரு புதுச் சமூகமல்ல. அடியில் இன்னும் ஞான உயிர்த்துடிப்புடன் வாழும் உலகத்தின் மிகப் பெரும் பழமை வாய்ந்த கலாச்சாரத்தைக்கொண்ட சமூகங்களில் நமது சமூகமம் ஒன்று.

அத்தகைய ஒரு சமூகத்தின் உயிர்த்துடிப்பை, அதன் உண்மையான மரபுத்துடிப்பைத் தொடும் எழுத்தாளர்கள் இன்று ஈழத்தமிழ்ச் சமூகத்திற் காணப்படுகின்றனர். அவர்கள் தம் சொந்தச் சமூகத்திற் காணப்படுகின்றனர். அவர்கள் தம் சொந்தச் சமூகப் பிரச்சினைகளுக்கும், முழு உலகப் பிரச்சனைகளுக்கும் வழிகாணும் துணிவைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். சமகால ஈமத்துத் தமிழ் இலக்கியத்தை அறிந்தவர்கள். அந்தப் பழத்தமிழ் மரபின் உயிர்த்துடிப்பையும் அது காட்டும் ஞானத்துணிவையும் புதிய தரிசன வழியையும் நிச்சயமாகக் காண்பர்.

ஈழத்தமிழர்களின வெளிவேடப் "போராட்டப் பூச்சுக்களிருந்து " இன்னொரு பெரும் "போராட்டத்துக்குரிய "போர்க் கோலம்; எழுவதையும், அந்தப் போர்க்கோலத்தையும் அத்தளச் சத்தியத்தில் நிறவி, உலகப் பரிணாம வளர்ச்சியின் அடுத்த தளத்துக்கு உயர்த்தும் இன்னோர் எழுச்சியின் "போர்ப்பறை" அதற்குள் கேட்பதையும் இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை அறிந்தவர்கள் கண்டிருப்பார்கள், கேட்டிருப்பார்கள்.

அவற்றைக் கண்டவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் இன்றைய உலக இலக்கிய வளர்ச்சிக்கு ஈழத் தமிழ் எழுத்தாளர்கள் எவ்வாறு தலைமை தாங்கலாம் என்ற சந்தேகம் இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SELLING A HOME?

GET A FREE HOME EVALUATION DONE.







**KAMAL** AMIRTHALINGAM*

**JAY** PARAMANATHAN*

**ELANGO** EESWARAPATHAM*

TEAM | JAY

REAL ESTATE PROFESSIONALS

**ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE**

www.teamjay.ca

DIRECT: 416.700.2222 | OFFICE: 416.282.3333 info@teamjay.ca

INDEPENDENTLY OWNED & OPERATED | SALES REPRESENTATIVES*

#BuyandSellWithTeamJay / #TeamJay

ROYAL LEPAGE 100 YEARS SINCE 1913

THE HOME HUB

CondoFinder.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல்: ஒன்று
# தளம்: சமூகம்

"போராட்டம்"
"போர்க்கோலம்"
"போர்ப்பறை"

வளர்ச்சிமாற்றத்தைக் கோரி ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தில் எழும் மூன்று குரல்கள் அவை. அவை ஏறக்குறைய ஒரே அர்த்தத்தோடு வந்தாலும் மூன்று வெவ்வேறான தளங்களிலிருந்து வருகின்றன.

"போராட்டம்" – மேல்தளத்தின் குரல்.
"போர்க்கோலம்" – இடைத்தளத்தின் குரல்.
"போர்ப்பறை" – அடித்தளத்தின் குரல்.

மேல்தளம் வெறும் வெளிப்பூச்சுக்களுக்கும், போலியான தாமத சாத்வீக ஆசாரங்களுக்குமுரிய தளமாகும். ஈழத் தமிழ்ச் சமூகத்தின் பெரும்பான்மையினர் உண்மைகள் என்று நம்பி மாறாட்டம் செய்யும் பூச்சுக்களுக்கும் ஆசாரங்களுக்குமுரிய தளமாகும். அந்தத் தளத்தில் வாழும் பெரும்பான்மை ஈழத் தமிழரைப் பிரதிபலிக்கும் தமிழ்க்கூட்டணிக் கட்சிகளின் போராட்டமும் வெறும் மொழியுரிமையோடு நின்றுவிடும் "தூய" அரசியல் போராட்டமாகவும், தமிழ்ச் சமூகத்தின் மேற் பூச்சுக்களைக் கிழித்துக்கொண்டு கீழே செல்லாத ஆசாரப் போராட்டமுமாகவே இதுவரை தடுமாறி வருகிறது. ஆதன் உண்மையான அடித்தள வேர்களை இன்னும் உணராமல் இருக்கிறது.

"போர்க்கோலம்" – என்பது மார்க்சிய முற்போக்கு எழுத்தாளரான செ. கணேசலிங்கனின் நாவல் ஒன்றின் பெயர். நமது தமிழ்ச் சமூகத்தின் மேல்பூச்சுக்களுக்குப் பின்னாலுள்ள சாதிக் கொடுமைகளையும், பிற்போக்குப் பலாத்காரச் சுரண்டலையும் ஆக்கிரமிப்பையும் எதிர்த்து எழும் மார்க்கியப் போராட்டத்தை அழுத்துகிறது அது. மேல் பூச்சு மொழிப் போராட்டத்தை இன்னும் கீழே ஆழமாக இறக்கி சாதிக் கொடுமைக்கு எதிரான போராட்டத்தோடும் உலக நிலமானிய முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான பொதுவுடைமைப் போராட்டத்தோடும் பிணைத்துப்பார்க்கத் தூண்டும் மார்க்சிய கோணத்தின் போர்க்கோலம்.

"போர்ப்பறை" – மு.தளையசிங்கத்தின் நூலொன்றின் பெயர் பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், இந்து சமயம் ஆகிய நான்கு சமயங்களும் வெளிப்படுத்தும் ஒரே உண்மையான சத்தியம். சகலத்திலும் எழுச்சியுறும் பூரண சர்வோதய மலர்ச்சிக்குக் கட்டியங்கூறும் புதுயுகத்தர்மப் பறை அது. முழு மனித குலமும் உடல், உயிர், மனம் ஆகிய தளங்களைத் தாண்டி பேரறிவுக்குள் காலடி வைக்கும் பரிணாமப் பெரும் போராட்டத்துக்கு உதவும் வகையிலும், அதன்மூலம் உதவி பெறும் வகையிலும், சகல சிறு போராட்டங்களும் அதனோடு ஒன்றாகப் பிணைக்கப்பட்டு உருமாற்றப்பட வேண்டுமென்று அறைகூவும் அடித்தள ஆத்மாவின் ஞானக்குரல்.

மூன்றும் வெவ்வேறான தளங்களிலிருந்து எழுபவை. மூன்றையும் எல்லோரும் ஒருங்கே கேட்காவிட்டாலும் மூன்றில் ஏதாவது ஒன்றையாவது ஈழத்துத் தமிழர் எல்லோரும் பெரும் பாலும் இன்று கேட்பவர்களாகவே இருக்கின்றனர்.

வளர்ச்சி மாற்றத்தைக் கோரும் மூன்று பார்வைக் கோணங்களும் மூன்று வெவ்வேறான மனத்தளங்களுக்குரிய நிலைகளாக இருந்தாலும், அவை மூன்றும் வெவ்வேறான சமூகங்களுக்கு உரியவையல்ல. அதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிப்பது அவசியம். மூன்று வெவ்வேறான மனத்தள நிலைகளும் ஒரே இனத்தில், ஒரே சமூகத்தின், ஒரே கூட்டுமனதின் வெவ்வேறான தளங்களிலேயே காணப் படுகின்றன.

அதனால் ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின் கூட்டுமனம் எல்லா நிலைகளிலும் ஏதோ ஓர் அளவில், ஏதோ ஓர் அர்த்தத்தில் இன்று "போர்" என்ற ஒன்றுக்குத் தயார்ப்படுத்துவதாகவே இருக்கிறது. அதன் கூட்டுமனத்தின் மேல்தளத்தில், இடைத்தளத்தில், அடித்தளத்தில் எங்கும் ஏதோ வகையில் "போர்" என்ற ஒன்று உருப்பெற்றுக்கொண்டிருக்கிறது. அதனால் பெரும்பாலும் அக்கூட்டு மனத்துக்குரிய ஒவ்வொரு தனிமனிதனும், ஒவ்வொரு தனிப்பட்ட தமிழனும் ஏதோ ஓர் அளவில் அதை ஆமோதிப்பவனாகவும் இருக்கிறான்.

இதைவிட உலக சரித்திர வளர்ச்சிக்கு ஓர் நல்ல சூழல் இருக்கமுடியாது. ஒரு முழுச்சமூகமும், ஒரு முழு இனமும் ஒரு தனிமனிதனைப் போல் ஏதோ ஒருவகையில் அதிருப்திப்பட்டு, நடைமுறையில் இருக்கிற சமூக நிலையில் மாற்றங்காண விழைந்துகொண்டிருக்கிறது. அத்துடன் அதன் கூட்டுமனத்தின் இடைத்தள இயக்கமும் அடித்தள இயக்கமும் இன்னும் மேல் தளத்தின் பெரும்பான்மைப் பலத்தைப் பெறாதிருந்த போதிலும் அவையே சமூக, இன, மொழி, சமயப் பிரிவுகளைக்கடந்து, சர்வ – தேசமெங்கும் வாழும் சகல மக்களினதும் இயக்கங்களாக வளரக் கூடியவையாக இருக்கின்றன. காரணம் இன, மொழி வித்தியாசங்கள் மேல்தளத்துக்கு மட்டும் உரியவையாகவே இருக்கும்போது அடித்தள சத்திய நிலை உலக மக்கள் சகலருக்கும் உரியதாக இருக்கிறது. ஏற்கனவே அத்தகைய சர்வதேசத் தொடர்புகளும் தெரியவந்துள்ளன.

அதேபோல் மேல்தள மனநிலை மெல்ல மெல்ல அதற்குக் கீழேயுள்ள இடைத்தள இயக்கத்தாலும், இடைத்தள இயக்கம் அதற்கும் கீழுள்ள அடித்தள இயக்கத்தாலும் மெல்ல மெல்ல ஊடுருவப்பட்டு ஒன்றோடு ஒன்று எல்லைகளற்றுக் கலந்து உருமாறும் பூரணப் போக்குக்குரிய அறிகுறிகளும், அதற்குரிய கருத்துச் சர்ச்சைகளும், உட்போராட்டங்களும் ஆரம்பத்திலிருந்தே வெளியே தெரியவந்துள்ளன.

உண்மையில் இந்த மூன்று மனநிலைகளும் அடிப்படையில் வெவ்வேறானவையல்ல. சரித்திர வளர்ச்சியின் சத்திய வெளிக்காட்டல் என்ற ஏக காரணத்தால் தூண்டப்படும் சிந்தனை – செயல் – சூழல் மாற்றத்தை ஈழத்துத் தமிழ்ச்சமூகம் தன் மூன்று மனத்தள நிலைகளுக்கு ஏற்றவாறு மூன்றுவிதமாகப் புரிந்துகொண்டுள்ளது. அவ்வளவுதான். அவை மூன்றும் வெவ்வேறாகத் தெரியினும், அடிப்படையில் அவை ஒரே பெரும் போக்காகவே இருக்கின்றன. காரணம், சரித்திர வளர்ச்சி தற்செயலாக நடைபெறுவதில்லை. சரித்திர வளர்ச்சிக்குப் பின்னால் சகலத்தையும் நடத்துவிக்கும் சத்தியப் பேரறிவு நிற்கிறது. அந்த ஏக காரணமான சத்தியப் பேரறிவு நிற்கிறது. அந்த ஏக காரணமான சத்தியப் பேரறிவு சரித்திர வளர்ச்சியையும், மனிதப் பரிணாமத்தையும் இன்று ஒரு புதிய பெருந் தளத்துக்கு உயர்த்திக்கொண்டிருக்கிறது. அதற்குரிய மாற்றங்கள் இன்று ஈழத்தில் மட்டுமல்ல, முழு உலக மெங்கும் உருவாகிக்கொண்டிருக்கின்றன.

அந்த உலகளாவிய மாற்றங்களைத்தான் ஈழத் தமிழ்ச் சமூகமும், குறிப்பாக அதன் இலக்கிய வளர்ச்சிப் போக்கும் வெளிப்படுத்துகின்றன.

ஈழத்தைப் பொறுத்தவரையில் அந்த மாற்றங்களைக் குறிப்பதற்கு வசதிக்காக ஒரு குறிப்பிட்ட ஆண்டைத் தெரிவு செய்ய வேண்டுமானால், 1956ஐ தெரிவு செய்ய வேண்டும். சர்வதேச ரீதியிலும் அந்த ஆண்டு முக்கிய, பெரும் மாற்றங்களைக் குறிப்பதாக இருக்கிறது.

2

1956ம் ஆண்டு ஈழத்தின் சமகாலச் சரித்திரத்தில்ஒரு முக்கிய ஆண்டாகும். பண்டாரநாயக்கா குறிப்பிட்ட மாற்று வலையக் காலகட்டம் இலங்கையில் ஆரம்பித்த ஆண்டு அது: சிங்களப் பொதுமக்கள் தமது விடுதலையை ஓரளவுக்குப் பரவலாக உணரவந்த காலம் அது. தனிச் சிங்களச் சட்டம் தோன்றிய காலம்.

ஈழத் தமிழ் மக்களிடையேயும் அதன் பாதிப்பு இன, மொழி எதிர் விழிப்பாகவும் அவற்றுக்குரிய அரசியல் எதிர் விழிப்பாகவும் இருந்தன. அரசியலில் தமிழரசுக்கட்சி வலு வடைந்தது. ஈழத்துத் தமிழ் இலக்கியத்திலும் அந்த விழிப்புணர்வு தெரிய வந்தது.

1956ஐ ஒட்டிய காலத்திலேயே ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் களிடையே மார்க்சிய முற்போக்கு இயக்கம் உருவாகி வலுவடைந்தது.

அதே காலத்தில் உலகத்தில் பலவிடங்களிலும் ஏற்பட்ட பலவித மாற்றங்களுள் முக்கியமானவையாக இரண்டு நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம்.

ஒன்று ஹங்கேரிய, போலிஷ் புரட்சி.
இரண்டு, எகிப்து நாட்டால் சூயஸ்கால்வாய் தேசியமய மாக்கப்பட்ட சம்பவமும் அதைத் தொடர்ந்து எகிப்து மீது பிரித்தானியா நடத்திய விமானத் தாக்குதலும் ஆக்கிரமிப்பும்.

பல்வேறு வகைப்பட்ட இத்தகைய நிகழ்ச்சிகள் அடிப்படையில் சில ஒற்றுமையைக் காட்டுகின்றன. அந்த ஒற்றுமையை இனங்காண்பதற்கு ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறையையே உதாரணமாக எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - நிர்வாக சபை - 2017



அமர்ந்திருப்போர் – இடமிருந்து வலம்: திரு. சோம சச்சிதானந்தன் (உப தலைவர்), திரு. வி. கே. பரஞ்சோதி, திரு. நா. பகீரதன் (பொருளாளர்), திரு. துரை. இரவீந்திரன் (தலைவர்) திரு. தி. கருணாகரன் (செயலாளர்) சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜகுருக்கள(போசகர்), திரு. செ. சபாரத்தினம் (போசகர்).

நிற்போர் – இடமிருந்து வலம்: திரு. கு. அனுராகரன், திரு. குமார மனோகரன், திரு, இ. விஜயகுமார், திரு.ச. சந்திரகுமாரன், திரு. நடா. உதயகுமார், திரு. கருணாகரன் ஸ்ரீ திரு. க. செந்தில்

சமுகமளிக்காதோர்: திரு. சு. சுகுணன் (உப செயலாளர்), திரு. அ. பரநிருபன் (உப பொருளாளர்), திரு. க. உமாசங்கர், திரு. செ. இரவீந்திரன், திரு. கென். கிருபா திரு. அ. குலசிங்கம், திரு. அ. பகீரதன், திரு. ந. இரட்ணசிங்கம், திரு. கோ. தீபன், திரு. இ.அரிகரன் (எண்பார்வையாளர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவரசம் பொழுது 2011 வெற்றிபெற வாழ்த்துகிறோம்

**YASO SINNADURAI**
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI

# பூவரசம் பொழுது
## மு.தவின் மெய்யுள் இதழ் 2017



பேராசிரியர் வீ. சிவசாமி
அவர்கள்
ஞாபகார்த்த கலை அரங்கு

பிரதம விருந்தினர்
**சொக்கலிங்கம்**
**கருணைலிங்கம்**
( புங்குடுதீவு நலன்புரிச் சங்கம்
ஐக்கிய இராச்சியம்
முன்னாள் தலைவர்)

சிறப்பு விருந்தினர்
**தேனுஷா பரணி**
Ontario PC Scarborough
தொகுதி வேட்பாளர்

**1. மங்கள விளக்கேற்றல்:**
திரு. திருமதி நடராஜா இரட்ணசிங்கம்
திரு. திருமதி. சண்முகநாதன் சந்திரகுமாரன்

**2. அகவணக்கம்**

**3. அந்தணர்கள் ஆசி வழங்கல்**

**3. கொடி ஏற்றல்:**
தமிழ்: திரு. கனக செந்தில்வேல்முருகன்

கனடா:
திரு. குணா செல்லையா

சங்கம்:
திரு. சொக்கலிங்கம் கருணைலிங்கம்

தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய கீதம்,
புங்குடுதீவு கீதம்
–திருமதி சுமங்கலா சண்முகநாதன்
மாணவிகள்



**Kanagaambikai**
**Nagai Maadam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யசோ சின்னத்துரை

சட்டத்தரணி

2100 Ellesmere Road Unit 202, Scarborough, ON, M1H 3B7

**416-265-3456**




1. ஆசியுரை: கலாநிதி விஜயகுமார குருக்கள்

2. அரங்கு கௌரவம்:
திரு. திருமதி எஸ் இராமச்சந்திரன்
பேராசிரியர் சிவசாமி அவர்கள் பற்றி...
குமார மனோகரன்

3. வரவேற்பு உரை:
திரு. நாகேசு பகீரதன் (பொருளாளர்)

4. நடனம்:
திருமதி பிரவீணா தீபன் மாணவிகள்
திருமதி ரஜனி சக்திரூபன்
கௌசி பிரபாகரன், அர்ச்சுனா மாணவிகள்

5 தீபன் குழுவினர் வழங்கும்
தமிழர் பாரம்பரிய இசை முழக்கம்

6 பிரதம விருந்தினர் உரை
திரு. சொக்கலிங்கம் கருணைலிங்கம்

7. தலைவர் உரை: திரு. துரை. இரவீந்திரன்

8. சிறப்பு விருந்தினர் உரை:
செல்வி தேனுஷா பரணி

9 கௌரவிப்பு நிகழ்வு

**இடைவேளை**

10 மலர் வெளியீடு
பிரதமவிருந்தினர்

### "புங்கையின் இசை அதிர்வு"

சுப்பர் சிங்கர் புகழ்
தென்னிந்திய பிரபல பாடகி
சோனியா பாலகிருஷ்ணன்

சுப்பர் சிங்கர் புகழ்
பிரபல பாடகர்
அர்ஜூன் அடப்பள்ளி

இசை
"சன் சீ" இசைக்குழுவினர்




## கனகாம்பிகை அடகு மாடம்

3160 Eglinton Ave.E, Unit #3, Scarborough, ON, M1J 2H3

**Tel: 416-269-7198**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீடு வாங்க விற்க...

SOCKA
ABRAHAMLINGAM
Sales Representative

Cell: **416.418.0037**
Office: 905.201.9977
Fax: 905.201.9229
Email: abrahamhomelife@gmail.com
Web: www.AbrahamHomes.com

HomeLife/Future
Realty Inc., Brokerage
independently owned & operated
7 Eastvale Drive Suite 205 Markham,
ON L3S 4N8








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SINGAPORE

# Daisy
HERB CLUB

# டெய்ஸி முடி கருமையாக்கும் ஷம்பூ
## இயற்கை மூலிகைகள் கொண்டது




Imported by
**ALAGI ENTERPRISE INC**
**TORONTO ON**

**>> 416 844 4141 <<**

# 5
## நிமிடத்தில் வெள்ளை முடிக்கு
# Good Bye
## முடி உதிரும் பிரச்சினைக்கு
# Good Bye

**அமோனியா கலப்பற்ற டேசி ஸ்மார்ட் ஷம்பூ**
**சந்தன நறுமணத்துடன் 5 நிமிடங்களில் இயற்கை கருநிறம்.**

உங்கள் தலை முடியை கரு நிறமாக்க மிகவும் இலகுவான வழிமுறை அமோனியா கலப்பற்ற டேசி ஸ்மார்ட் ஷம்பூ. உங்களது மண்டையோட்டில் அல்லது தோலில் கறை ஏற்படாமல் தலைமுடியை இயற்கை கரு நிறமாக்குவதற்கென தயாரிக்கப்பட்ட இயற்கை மூலிகைச் சேர்மானங்களைக் கொண்ட மிகவும் மென்மையான பாதுகாப்பான ஷம்பூ ஆகும். மற்றைய ஷம்பூக்களைப் போலவே இதனையும் உபயோகிக்கலாம். டேசி ஸ்மார்ட் ஷம்பூவை தலையில் பூசி 5 நிமிடத்திற்கு விட்டுவையுங்கள். நவீனகரமான டேசி ஸ்மார்ட் ஷம்பூ உங்கள் தலைமுடிக்கு கருமையூட்டி மெதுவாக சுத்தப்படுத்துவதோடு அதில் அடங்கியுள்ள போசணையூட்டும் அத்தியாவசிய எண்ணைகள் தலைமுடியை சமநிலைப்படுத்துகின்றன. அதில் அடங்கியுள்ள இரம்மியமான சந்தன நறுமணமும் உங்களுக்கு புத்துயிர் ஊட்டும். உங்கள் இளமை கருங்கூந்தலை இன்றே மீண்டும் பெற்றுக் கொள்ளுங்கள்.

உபயோகிக்கும் முறை:

1. தலைமுடியை நன்றாக ஈரமாக்கிக் கொள்ளுங்கள்.
2. (பொதியில் உள்ள) கையுறைகளை அணிந்து கொள்ளுங்கள்.
3. பக்கட்டை நேராக வெட்டித் திறந்து அதிலுள்ள ஷம்பூ முழுவதையும் ஒரு சிறிய கிண்ணத்தில் எடுத்து விரல்களினால் நன்றாகக் கலக்குங்கள்.
4. தலையில் தேய்த்து 2 நிமிடங்களுக்கு மசாச் செய்யுங்கள்.
5. 5 நிமிடத்திற்கு விட்டு வையுங்கள்.
6. தண்ணீரால் நன்றாக கழுவி விடவும்.
7. Conditioner வைத்து நன்றாக தேய்த்து 3 நிமிடங்கள் விட்டு கழுவவும்.

டேசி மூலிகை ஷம்ப் உற்பத்திகள் சர்வதேச தரங்களுக்கு அமைய கடுமையான தரக் கட்டுப்பாடுகளின் கீழ் தயாரிக்கப்பட்டவை.

# சூழல்: இரண்டு
# தளம்: சத்தியம்

கருத்துமுதல்வாதம் என்றால் என்ன ?
கடவுளை அல்லது இலட்சியரீதியான சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வுலக வாழ்க்கைக்கு விளக்கங்காணும் போக்கைக் கருத்து முதல்வாதம் எனலாம். சடத்தையும் பொருளையும் அடிப்படையாகக் கொண்ட பொருள் முதல் வாதப் பார்வைக்கு இது எதிர்மாறானதாகக் கருதப்படுகிறது.

கருத்து முதல்வாதம், கடவுளை ஏற்றுக்கொள்ளாத சிந்தனைப் பார்வையாக இருக்கும்போது நடைமுறை வாழ்க்கைக்கு அதிகம் உதவாத இலட்சிய சித்தாந்தங் களாகவும், கற்பனாவாதங்களாகவும் நின்றுவிடுகிறது. கடவுளை ஏற்றுக்கொள்ளும்போது பெரும்பாலும் எல்லாச் சமயங்களும் வளர்த்துள்ள ஆசார மரபாகவே நிற்கிறது.

சகல சமயங்களினதும் அடிப்படையான ஞானப்பார்வை அதாவது ஆத்ம மரபு, இதற்குள் அடங்காது.

இதுதான் கருத்து முதல்வாதத்தின் அர்த்தமாகும். இன்று அது இவ்வாறுதான் விளங்கிக்கொள்ளப்படுகிறது. இவ்வு லக வாழ்க்கையை அதிகம் ஆமோதிக்காத போக்கு, சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சி மாற்றங்களுக்கு விட்டுக் கொடுக்காமை, நடைமுறை அமைப்பைப் பாதுகாத்தல், விசாரணையற்ற பக்தி, கட்டுப்பெட்டித்தனம் ஆகியவற்றை இந்தப் பார்வையின் முக்கியப் பண்புகளாகக் கூறலாம்.

பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் கிறிஸ்தவ சமயம் வளர்த்திருந்த ஆசார மரபு இந்த வகையானதாகவே இருந்தது. அதனால்தான் அதே காலத்தில் அதற்கு எதிரான அறிவுவாதமாக விஞ்ஞானம் வளர்ச்சி யடைந்தது. அந்த விஞ்ஞான அறிவுவாதத்தின் ஒரு போக்கு பொருள் முதல்வாதமான இன்றைய மார்க்சிய சோஸலிஸப் பார்வையாக வளர்ச்சியடைந்துள்ளது. அடுத்த போக்கு, கருத்தை அழுத்தும் இலட்சியரீதியான பல சிறு சித்தாந்தங்களாகவும் சமய ஆசாரப் பூச்சுக்களோடு வளர்ந்துள்ள இன்றைய முதலாளித்துவ ஏகாதிபத்தியப் போக்காகவும் உருமாறியுள்ளது.

முதலாளித்துவத்தின் முற்றிய சர்வாதிகாரமான பாஸிஸத் தில் தவிர வேறு நிலைகளிலும் மேற்கத்தைய முதலாளித்து வம் சமய ஆசாரத்தை மறுத்ததில்லை.

மொத்தத்தில் கருத்து முதல்வாதம் என்பது சமயத்தின் பெயரிலும் கருத்தின் பெயரிலும் வெறும் சமய ஆசார மரபாகவும் முதலாளித்துவ ஏகாதிபத்தியமாகவும் இருப்பதால் உண்மையில் அது ஆன்மீகப் பூச்சுக்களுக்குள் வாழும் பச்சையான பொருளாசையாகவே இருக்கிறது. அல்லது அதிகமாகப் பொருளாசைக்கே விட்டுக்கொடுக்கிறது. அதனால் உண்மையான சமயஞானம், அதாவது ஆத்மமரபு எவையெவற்றை இலட்சியங்களாகக் கொண்டுள்ளதோ அவற்றுக்கு அது தடை யாகவே நிற்கிறது. அன்பு, சமத்துவம், விடுதலை என்பவை உண்மையான சமயஞா னத்தின் பண்புகளாகும். ஆத்மமரபு அவற்றையே சமூகத்துக்குரிய இலட்சியங்களாக முன்வைக்கிறது – அவற்றை ஏற்றுக்கொள்வதுபோல் கருத்து முதல்வாதம் நடித்துக்கொண்டாலும் உண்மையில் அவற்றை நடை முறைப் படுத்துவதற்குத் தடையாகவே இருக்கிறது.

அன்பு, சமத்துவம், விடுதலை என்பவை ஏக சத்தியத்துக் குரிய தவிர்க்க முடியாத பண்புகளாகும். காரணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலருக்கும் சகலத்துக்கும் உரிய அடித்தளச் சத்திய நிலையான ஆத்மநிலை எல்லாவற்றுக்குமுரிய இரண்டற்ற ஒன்றாக, அத்வைத நிலை யாக நிற்கிறது. அதனால் அடிப்படையில் எல்லாரும் ஒரே ஆத்ம சுயமாக இருக்கும் போது சமத்துவம், அன்பு என்பவை அதன் சுயபண்புகளாக இருக்கின்றன. அவற்றையும் அவற்றுக் குரிய சுயத்தையும் அனுபவிப்பதே உண்மையான விடுதலையாக இருக்கிறது.

எல்லாச் சமயங்களுக்குமுரிய ஆத்மமரபு, அந்தப் பண்பு களையே சமூகத்தின் இலட்சியங்களாக முன்வைக்கிறது. உபநிடதங்களின் மகாவாக்கியங்கள் அந்த ஆத்மமரபின் உண்மையான அர்த்தத்தை விளக்குகின்றன.
அதுவே நீ. (சத்தியநிலையான பிரம்மமே நீ)
அகம் பிரம்மம்.
சர்வமும் பிரம்மம். (சத்திய நிலை)
இந்தச் சத்தியநிலையை அனுபவிக்கும்போதே உண்மை யான விடுதலை ஏற்படும். அந்த விடுதலைமூலமே உண்மையான சமத்துவத்தையும் அன்பையும் சகோதரத் துவத்தையும் வெளிப்படுத்தலாம். இன, மொழி, சாதி, சமய, வர்க்க, நிற வேறுபாடுகள் சகலவற்றையும் அவற்றுக்குரிய சுரண்டலையும் பலாத்காரத்தையும் அப்போதுதான் வேரோடு களையலாம். ஆனால், அந்த விடுதலையைப் பெறுவதற்கு வெளியுலகப் பொருட்களிலும் பற்றுக்களிலிருந்தும், உடல், உயிர், மனத்தளங்களின் கட்டுக்களிலிருந்தும் விடுபட வேண்டும். சத்திய விடுதலை என்பது அதுவேதான்.

சகல மதங்களுக்குமுரிய ஆத்மமரபு வெளிப்படுத்தும் இலட்சிய விடுதலை இதுதான். ஆனால், அந்த விடுதலையானது மனித வாழ்க்கையைப் புதிய பெருந்தளமான பேரறிவுப் பொதுவுடைமையிலிருந்து இவ்வுலகத்திலேயே அனுபவிக்க வழிகாட்டும். அடுத்த உலகத்துக்குரிய விடுதலையல்ல. அதுவும் உண்டு. அது வேறு விடயம்.

ஆனால், இந்த இலட்சியத்தை முன்வைத்துள்ள சர்வ சமய ஆத்மமரபு அதற்குரிய பக்குவம் சகலரிடமும் வரும் வரைக்கும் காத்திருக்கவும் தயாராய் இருந்தது. நதிக்கரை நாகரிகம் முதலாகப் பழைய வேத – உபநிடத காலம் ஊடாக இன்றுவரை அது காத்திருக்கவே செய்கிறது. இதுவே மனித மனத்தள வளர்ச்சிக்குரிய சுழலாகும். அந்தந்தக் காலங்களில் அந்தந்த இடங்களில் நடைமுறையிலிருந்த சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் அமைப்புகளை மாற்றியமைத்த சமய எழுச்சிகள் எல்லாம் இந்த விடுதலைக்குரிய வகையில் மனிதனைத் தயார்ப்படுத்தவே முயன்றன. இந்த விடுதலை பரவலாக எல்லோருக்கும் உரியதாக வரும்போது மனித குலத்தின் பரிணாமப் போக்கு பேரறிவுக்குள் இறங்குவதாக முடியும். ஆனால், அதற்குமுன் சகல மனத்தளங்களும் அதற்குத் தயார்ப்படுத்தப்பட வேண்டும்.

இந்த விடுதலைக்குத் தடையாக இருந்த முக்கிய சக்திகள் பொருளாசையும் அதனோடு சம்பந்தப்பட்ட சிற்றின்ப ஆசைகளுமே. அந்த ஆசைகள்தான் கருத்து முதல்வாதத்துக்குரிய சமய ஆசாரமாகவும் முதலாளித்துவ மாகவும் இன்று நிற்கின்றன. ஆனால் அவை வெளிப் படையாக ஆத்ம மரபு கூறும் விடுதலையை மறுக்காதவை. அதனால் அடித்தள ஆத்ம மரபுக்கும் மேல்தள ஆசார மரபுக்கும் தொடர்பும் கலப்பும் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இன்னும் இருக்கவே செய்கின்றன. அத்துடன் மேல் தள ஆசார மரபும் முதலாளித்துவமும் இன்று சர்வதேச மெங்கும் ஸ்தம்பித நிலையில் பலமிழந்துகொண்டிருக்கின்றன. அப்படியானால் ஆத்மவிடுதலைக்குப் பதிலாகப் பொருள் தேடுவதில் அக்கறை காட்டிய மனித குலத்தின் பொரு ளாசை இன்று பரவலாக ஸ்தம்பிதமடைந்து வலுவிழந்து வருகிறது என்பது அர்த்தமாகும்.

அந்தத் தேக்கமும் அதனோடு கூடிய வலுவிழப்பும் சீர்குலைவும் வரும் வரையுமே உண்மையான சமய ஞானத் துக்குரிய ஆத்மமரபு அதன் பரவலான விடுதலைப் போராட் டத்துக்குக் காத்துக்கொண்டிருந்தது. அந்த விடுதலைக் காலம் இன்று வந்துவிட்டது.

அந்த ஆத்ம மரபின் புதுத்தள எழுச்சியைத்தான் இன்று மெய்முதல்வாதம் பிரதிபலிக்கிறது. பூரண சர்வோதயம் என் பது புதுயுகத்துக்குரிய மெய்முதல்வாதப் பெருந்தத்துவமாகும். கருத்தும் பொருளும் அடிப்படையில் ஏக ஆத்மாவான சத்தியமாக இருக்கும்போது (பௌத்த சமயம் விளக்கிய நிர்வான விடுதலைக்குரிய சம்போதி ஞான நிலையாக இருக்கும் போது) கருத்தை வேறாகவும் பொருளை வேறாகவும் கருதுவது தவறாகும். முதலில் கருத்து வந்ததா அல்லது பொருள் வந்ததா என்ற தர்க்கமும் பிழையா னதாகும். கருத்தும் பொருளும் அடிப்படையில் கருத்துக்கும் பொருளுக்கும் காரணமாகவுள்ள சத்தியமாக, மெய்யாக நிற்கின்றன.

பிரம்மமே சக்தி, சக்தியே பிரம்மம். நிர்வாணமே சம்சாரம், சம்சாரமே நிர்வாணம், அடித்தளச் சத்திய நிலை உண்மை யான சத்தாகவும் (உண்மைப் பொருள்), உண்மையான சித்தாகவும் (பேர்ஞானம்), உண்மையான ஆனந்தமாகவும் (விடுதலைப் பரவசம்) இருக்கிறது.
இதுதான் பழைய ஆத்ம மரபின் தீர்ப்பாகும்.
இந்த உண்மையை வெளிப்படுத்தும் மெய்முதல்வாதமானது, கருத்து முதல்வாதம், பொருள்முதல்வாதம் என்ற பாகுபாடு களை நீக்கி, எல்லாவற்றையும் திருத்தி முழுமைப் படுத்திப் பூரணப் போக்காக மாற்றிப் பரவலான விடுதலைப் போராட்டத் துக்கு இன்று மனிதகுலத்தைத் தயார்ப்படுத்த எழுந்து கொண்டிருக்கிறது.

பொருள் – உடல், உயிர், மனம் ஆகிய தளங்களிலிருந்து அடுத்த பேரறிவுத்தளத்துக்கு எழுச்சியுறும் விடுதலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தை அதுவே கொண்டுவரக்கூடியதாக இருக்கிறது.

இதற்குப் பொருள்முதல்வாதமான மார்க்சிய சித்தாந்தம் எந்தளவுக்கு உதவுகிறது?

பொருள்முதல்வாதமான மார்க்சிய சித்தாந்தம் சமய ஆசாரத்தையும் நிலமானிய – முதலாளித்துவத்தையும் பிரதிபலிக்கும் கருத்து முதல்வாதத்துக்கு முரணாக எழுந்த போக்கே யொழிய, அடித்தள ஆத்மமரபுக்கு முரணானதல்ல. அதை முதலில் அவதானிக்க வேண்டும். உண்மையில் ஆத்மமரபை அது அறிந்திருக்கவில்லை. அன்பு, சமத்துவம், விடுதலை என்பவற்றை வெறும் அர்த்தமற்ற சுலோகங்களாக ஆக்கிவிட்டு, பொருளாசைக்கு இடம் விட்டு வந்த சமய ஆசார மரபைத்தான் அது உண்மையாக அறிந்திருந்தது. அதனால் அதற்கு எதிராகவும், அதோடு கூடிய நிலமானிய – முதலாளித்துவப் போக்குக்கு எதிராகவும், உண்மையான அன்பு, விடுதலை, சமத்துவம் ஆகியவற்றுக்காக அது பொருள் மூலமே போராட முயல்கிறது. உற்பத்திச் சக்திகள், உற்பத்தி முறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சமூக வரலாற்றை ஆராயும் மார்க்சிய சித்தாந்தம் உற்பத்திப் பெருக்கம், தேவைக்கேற்ற பங்கீடு ஆகியவை நிலவும் பொருளாதாரப் பொதுவுடைமை அமைப்பிலேயே ஒவ்வொரு தனிமனிதனும் உண்மையான அகவிடுதலையையும் சமத்துவத்தையும் அனுபவிப்பான் என்று கருதுகிறது.

அந்த வகையில் பார்க்கும்போது மார்க்சியப் பொருள் முதல்வாதம் பொருள்–உடல், உயிர், மனத்தளங்களுக்குள்ளேயே நின்றுகொண்டு அவற்றுக்குள்ளேயே ஒரு சமய ஞானத்தையும் பொதுவுடைமைக்குரிய ஆன்மீக விடுதலையையும் உருவாக்கி விட முயல்கிறது. அது நடைமுறையில் வெல்லக்கூடிய ஒன்றல்ல என்பது ஆத்மமரபின் அனுபவமாகும். இருப்பினும் பொருளை அழுத்துவதாகத் தெரியினும் அடிப்படையில் அக விடுதலையை நாடுவதாகவே மார்க்சியப் பொருள்முதல்வாதம் செயல்படுகிறது என்பதை மறுக்க முடியாது.

அதனால் ஆத்மமரபை வெளிப்படையாக மறுக்க முடியாத கருத்து முதல்வாதத்தைப்போல் பொருள்முதல்வாதமும் ஆத்ம மரபுடன் அடிப்படையில் கலக்கக்கூடியதாகவே இருக்கிறது.

அத்துடன் அக விடுதலைக்காக ஏங்கும் பொருள் முதல்வாத மார்க்சிய சித்தாந்தமும் 1956க்குப் பின் சர்வதேச அரங்கில் நெருக்கடிக்குள்ளாகி ஸ்தம்பிதமடைந்து சீர்குலைந்து வருகிறது. அதன் காரணமாக அதைவிட வேகமாக விடுதலைக்கு உதவக்கூடிய வகையில் வேறோர் போக்கு வளருமானால், அதனுள் அது விழுங்கப்படக் கூடியதாகவும் இருக்கிறது.

கருத்து முதல்வாத முதலாளித்துவமும் இன்று தேங்கிச் சீர்குலையத் தொடங்கியுள்ளது. பொருள்முதல்வாத மார்க்சியமும் இன்று தேங்கிச் சீர்குலையத் தொடங்கியுள்ளது. இரு பெரும் போக்குகளும் மெய்முதல்வாதம் என்ற மூன்றாம் போக்கால் விழுங்கப்பட்டுப் பூரணப் போக்காக வளரும் சூழலே இன்று சர்வதேசமெங்கும் வலுப்பெற்று வருகிறது.

சமயஞானம் இதுகாலவரை எந்தப் பக்குவத்தைப் பரவலாக எல்லாரிடமும் எதிர்பார்த்துக் காத்திருந்ததோ அந்தப் பக்குவத்தை மனிதகுலத்தின் கூட்டு மனம் தனது சகல தளங்களிலும் வெளிப்படுத்தும் கலப்புக் கட்டம் இன்று எழுச்சியடைந்து வருகிறது. பொருள் – உடல், உயிர், மனம் ஆகியவற்றோடு அவற்றுக்கு அப்பாற்பட்ட பேறறிவும் அதற்குரிய விடுதலையும் சகலருக்குரிய சகஜ நிலையாக வளரும் பூரண சர்வோதய மலர்ச்சிக்குரிய பொதுவுடைமை – பாரதி பாடிய கிருதயுகம் – இன்று பிறந்துகொண்டிருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KABIS

KABIS & ASSOCIATES INC.

*A Solution Company*

## PROTECT



YOURSELF, FAMILY, ESTATE

## Reasons for joining our Winning Team

- Over 200 Advisors in Ontario
- More than $50 Million assets under management (Segregated Funds)
- Two locations to serve in Ontario
- More than 20 languages speaking advisors
- Over 10,000 clients

**We are hiring new and experience advisors**

## Insurance

- **Life Insurance** (Term, Whole Life, Universal Life)
- **Critical Illness**
- **Disability**
- **Travel Insurance** (Super Visa)

## Investment

- **RESP**
- **RRSP**
- **Tax Free Saving Account**
- **Annuity**

YOUR FINANCIAL FREEDOM IS OUR BUSINESS

**KABIS & ASSOCIATES INC.**

PHONE: 905-566-8700 FAX: 905-566-8707

SUITE #210, 3033 PALSTAN ROAD, MISSISSUAGA, ON L4Y 4E7


EMAIL: SOLUTIONS@KABISASSOCIATES.COM WWW.KABISASSOCIATES.COM

MARKHAM OFFICE PHONE: 416-613-2785 201-315 STEELCASE ROAD EAST, MARKHAM, ON, L3R 2R5

iA Financial Group | LaCapitale Financial Group | UCT | Canada Life | Assumption Life | Canada Protection Plan — Simply Peace of Mind



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


حلال
100% HALAL
SINCE 1985
யாழ் கேக் ஹவுஸ்
YAARL CAKE HOUSE
SUN CITY PLAZA
2761 Markham Road,
Unit #24
Scarborough, ON, M1X 0A4
chandra6604@gmail.com | brotherking@gmail.com
www.yaarlcakehouse.com
416-431-6604 | 416-431-6874
Happy Birthday
Finch & McNicoll [ON MARKHAM ROAD, NORTH OF FINCH]
EGGLESS CAKES AVAILABLE
CAKE FOR ALL OCCASIONS
ABIRAMI PRINT
அபிராமி அச்சகம்
திருமண, பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்களின் தாயகம்
SUN CITY PLAZA - 2761 MARKHAM ROAD,
UNIT #24, SCARBOROUGH, ON, M1X 0A4
brotherking@gmail.com
416-431-6604 | 416-431-6874 Cell: 416-846-7062

# சூழல் மூன்று தளம்: உலகம்

இந்த விளக்கங்களை ஆதாரங்களோடு நிரூபிப்பதும் அவசியம். அதன்பின்பே ஈழத்தமிழர்களின் விடுதலை இலக்கியத்தையும் இயக்கத்தையும் சரியாகப் புரிந்துகொள்ள வும் அவற்றின் சர்வதேச முக்கியத்துவத்தை உணரவும் முடியும்.

1950-க்குப் பிறகு சர்வதேச முதலாளித்துவமும் சர்வதேச மார்க்சிய சோஸலிஸமும் சரி நெருக்கடிக்குள்ளாகி ஸ்தம்பித மடைந்து வருகின்றன என்பது உண்மைதானா? அதற்குரிய ஆதாரங்கள் எவை?

வியட்நாம் யுத்தம் அதைச் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கிறது. வருடக்கணக்காக நடைபெற்றுவரும் அந்த யுத்தமே சர்வதேச முதலாளித்துவத்தினதும் சர்வதேச மார்க்சிய சோஸலிஸத்தினதும் பலப்பரீட்சைக்குரிய தளமாக இருந்து வருகிறது. இரு சாராரிலும் எவரும் பூரணமான வெற்றியைக் காணமுடியாமல் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் சமாதானம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது. இன்றைய சர்வதேச சூழலில் முதலாளித்துவமும் சரி சோஸலிஸமும் சரி நேரடிப் போராட்டத்தில் ஈடுபட முடியாது என்பதையும், அப்படி ஈடுபட்டால் எந்த ஒரு பக்கமும் பூரணமாகத் தனித்து வெல்ல முடியாது என்பதையும் அது நிரூபிக்கிறது.

இந்த யுத்தத்தில் அமெரிக்கா நேரடியாக ஈடுபட்டுங்கூட அதனால் வெல்ல முடியவில்லை என்பது எவ்வளவு முக்கிய மானதோ அவ்வளவு தூரம் கொரியா யுத்தத்தில் போல் சீனா அதில் நேரடியாக ஈடுபடவில்லை என்பதும் முக்கியமானதாகும். சீனாவும் ரஷ்யாவும் அதில் நேரடியாகத் தம் படைகளை இறக்கி ஈடுபட்டால் தமக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதின என்பது அதன்மூலம் புலனாகிறது. இது ஒரு ஸ்தம்பித நிலையாகும்.

இந்த ஸ்தம்பித நிலையையே உடனிருந்து வாழும் நிலையாகக் கூறிக்கொண்டு அமெரிக்காவும், சோஸலிஸ நாடுகளும் இன்று சமாதான ஒப்பந்தம் செய்துகொள் கின்றன. சீனாவுக்கு நிக்ஸன் பயணம் செய்தபின் சீனாவும் இந்த உடனிருந்து வாழும் நிலைக்காகவே உண்மையில் இதுகாலவரை ஏங்கிக் கொண்டிருந்தது என்பது தெரிய வருகிறது. உண்மையில் 1949-க்குப்பின் சீனா அதைத்தான் விரும்பி வந்திருக்கிறது. ஆனால், அமெரிக்கா அதற்கு விட்டுக்கொடுக்காமல் வெருட்ட முயன்றதால் சீனாவும் தன் பங்குக்கு-கடுதாசிப்புலி" என்று புருடா விட்டு வந்தது. அது வெறும் புருடாதான் என்பது கொரியா யுத்தத்தில் நேரடியாக இறங்கியதுபோல் வியட்நாமில் அது இறங்கத் தயாராக இருக்கவில்லை என்பதாலும், போமோசாவைக் கைப்பற்ற முயலாமல் இருந்ததாலும், ஹாங்காங்கைத் தொடர்ந்து விட்டு வைப்பதாலும் தெரிய வருகிறது.

எனவே, ரஷ்யாவும் சரி, சீனாவும் சரி முதலாளித்துவ நாடுகளுடன் உடனிருந்து வாழும் சமாதானத்தை இன்றைய தேவைக்குரிய தந்திரமாக ஏற்றுக்கொள்கின்றன. அதன் மூலம் அதற்குரிய ஸ்தம்பிதத்தையும், நேரடியாகப் போர் தொடுக்க முடியாத தமது பலவீனத்தையும் ஒப்புக்கொள் கின்றன.

ஆனால், சமாதான ஸ்தம்பிதம் என்பது மார்க்சீய சோஸ லிஸ வியாக்கியானப்படி அடுத்த கட்டத்துக்குரிய தயாரிப்பா கவே இருக்க முடியும். அந்தத் தயாரிப்பு எப்படிப்பட்டதாக இருக்கும் என்று அவை எதிர்பார்க்கின்றன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உற்பத்திப் பெருக்கம் சோஸலிஸ நாடுகளில் வளர்ச்சியடைந்து தொழில்நுட்ப நாடுகளின் தரத்துக்குச் சமமாகவும், மேலாகவும் வந்து பொதுவுடைமைக் கட்டம் மலரும் வாய்ப்பு அதிகரிக்கும்.

2. அந்தப் பொதுவுடைமைக் கட்டத்தின் மலர்ச்சிக்குரிய உற்பத்திப் பெருக்கத்தாலும் அது அளிக்கும் வசதிகளாலும் உள்நாட்டு அடக்குமுறை தளர்த்தப் படுவதுடன் வெளியுலக மக்களுக்கும் வழிகாட்டப் படும். முதலாளித்துவ நாட்டுத் தொழிலாளிகளும் மூன்றாம் உலக நாடுகளும் சோஸலிஸ வழியிலும் சோஸலிஸ நாடுகளின் தலைமையிலும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு போராடத் தலைப்படுவர்.

3. சமாதானம் ஏற்படுவதால் முதலாளித்துவ நாடுகளில் உட்சண்டைகளுக்கு இடமளிக்கப்படும். அதன் காரணமாக முதலாளித்துவத்தின் சீரழிவு வலுவடையும். அப்போது அது தோற்கடிக்கப்படக் கூடியதாக பலவீனப்படும்,

4. மூன்றாம் உலக நாடுகள் வரவர அதிகமாக சோஸலிஸ நாடுகள் பக்கம் கூட்டுச் சேரும். அதன்மூலம் உலகில் சோஸலிஸ முற்போக்குச் சக்திகள் பலமடையும்.

இவைதான் மார்க்சிய வியாக்கியானத்தின் எதிர்பார்ப்பாகும். ஆனால் இவை நடைபெறும் என்று நிச்சயமில்லை. நிச்சயமில்லை என்பதற்கு ஆதாரங்களும் இருக்கின்றன. உண்மையில் இந்தச் சமாதானம் ஸ்தம்பித நிலை என்பது மார்க்சியப் பொருள்முதல் வாதத்தினதும் சமய ஆசார முதலாளித்துவத்தினதும் ஸ்தம்பித நிலையேதான். இனிமேல் வரும் நிகழ்ச்சிகள் அவை நினைப்பதுபோல் நடக்கப் போவதில்லை. மாறாக அவற்றை அழிப்பவையா கவே அமையும். அதன்மூலம் முதலாளித்துவ நாடுகளும் சோஸலிஸ நாடுகளும் புதிய முறையில், பூரண வழியில் உருமாற்றப்படும்.

முதலாவதாகச் சமாதான கரலத்தில் உற்பத்திப் பெருக்கம் அதிகரித்து சோஸ்லிஸ நாடுகளில் பொதுவுடைமை விடுதலை மலர்ந்து மற்ற நாடுகளுக்கு வழிகாட்டவும், தலைமை தாங்கவும் கூடிய தொழில்நுட்பப் பொதுவுடைமைக் கலாச்சாரச் சூழல் மலரும் என்பது ஏற்கனவே இன்றைய சரித்திர வளர்ச்சியால் நிராகரிக்கப்பட்டு வருகிறது.

முதலாளித்துவத் தொழில்நுட்ப நாடுகளைச் சோஸலிஸ நாடுகள் உற்பத்திப் பெருக்கத்தில் வென்று விடுதலைக்கு வழிகாட்டுமுன், முதலாளித்துவத் தொழில் நுட்ப நாடுகளின் உற்பத்திப் பெருக்கத்தின் காரணமாகப் புதுயுக விடுதலைக் குரிய போராட்டமும், அதற்குரிய புதுப் பரம்பரையும் ஏற்கனவே அதே முதலாளித்துவத் தொழில்நுட்ப நாடுகளிலேயே தோன்றிவிட்டன. அவற்றையே சோஸ்லிஸ நாடுகளும் பின்பற்ற வேண்டிய நிலை வர வர வளர்ந்து வருகிறது. காரணம், சீரழிய வேண்டிய முதலாளித்துவ நாடுகளில் வளர்ந்துவரும் புதிய ஆன்மீக விடுதலை நாட்டம் சோஸலிஸ நாடுகளைப் பின்பற்றுவதாக அமையாமல், சோஸலிஸ நாடுகளையும் சீர்படுத்தும் நாட்டமாகவே இருக்கிறது.

தொழில்நுட்ப முதலாளித்துவ நாடுகளில் வெறும் சமய ஆசாரப்பூச்சுக்களாகவும் ஜனநாயகச் சுலோகங்களாகவும் மட்டும் நிற்கும் "அன்பு", "சுதந்திரம்", "விடுதலை", "சமத்துவம்", "சகோதரத்துவம்" என்பவை உண்மையில் நடைமுறைக்குரிய அனுபவ உண்மைகளாகவும் இருக்க வேண்டுமென்று புதுப் பரம்பரை போராடத் தொடங்கியிருப்பது போலவே சோஸலிஸ நாடுகளிலும், புது விழிப்பு அரும்பத் தொடங்கியுள்ளது. 1956–ல் ஏற்பட்ட ஹங்கேரிய, போலிஷ் புரட்சிகளின் அர்த்தங்கள் அவைதான். ரஷ்யாவின் இன்றைய தலைசிறந்த நாவலாசிரியன் சொல்லொன் ஸ்டைன் அதற்குத்தான் குரல் கொடுக்கிறார்.

சோஸலிஸம் என்பது, குற்றஞ் செய்யாமலே வீட்டில் ஒருநாள் போலீஸ்காரனை எதிர்பார்த்துப் பயந்திருப்பதல்ல, நோயாளியைப் பராமரிக்கும் தாதிகளைவிட உளவாளிகள் அதிகமாகவுள்ள இடமல்ல, ஆஸ்பத்திரிகளை விடச் சிறைச்சாலைகளில் அதிக மானோர் காணப்படுவதில்லை, பொய் சொல்லவும், களவு செய்யவும் கற்பிக்கப்படுவதல்ல, சுயமாகச் சிந்திக்காமல் இருப்பதே சுகமாக வாழ்வதற் குரிய வழியாக இருப்பதல்ல,சகல துறைகளிலும் சகலருக்கும் ஒரே அபிப்பிராயமே உரியதாக இருப்பதல்ல என்று பேயின் தத்துவாசிரியன் Lezek Kalakowski கூறும்போது மார்க்சிய சித்தாந்தத்தின் முக்கிய அம்சமான "தொழிலாளர் சர்வாதிகாரம்" என்பது உண்மையில் பொதுவுடைமையின் "விடுதலை" என்ற இலட்சியத்துக்கு வழிவகுக்காது என்பது புலப்படுகிறது.

விடுதலை என்ற இலட்சியத்துக்குரிய வழிமுறைகளும் விடுதலை பயப்பதாக இருக்க வேண்டுமென்ற மெய்முதல் வாதத்துக்குரிய புதுப்பரம்பரையின் குரலாகவே இது கேட்கிறது.

எனவே, இவை உடனிருந்து வாழும் சமாதானத்தால் மார்க்சிய சோஸலிஸமே, முதலாளித்துவ நாடுகளால் (அங்குள்ள புதுப்பரம்பரையால்) ஆற்றுப்படுத்தப்படவி ருக்கிறது என்பதையே காட்டுகிறது.

அதேபோல் உடனிருந்து வாழும் சமாதானம் முதலாளித் துவத் தொழில்நுட்ப நாடுகளின் உள்வட்டச் சீரழிவைக் கொண்டு வருமென்பது உண்மையானால், அதைவிட ஆபத்து சீன – சோவியத் நாடுகளின் எல்லைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது என்பதும் உண்மையேதான். சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் உள்ள உள்வட்டப் போட்டியே ஓர் உலக மகாயுத்தமாக மாறிவிடுமோ என்ற பயமும் இன்று காணப்படுகிறது. சகல சோஸலிஸ நாடுகளும் தமக்குரிய ஒரு பொதுச் சஷ்டியை உருவாக்க வேண்டிய நேரத்தில், ஒவ்வொன்றும் தத்தம் எல்லைகளில் படைகளைக் குவித்துப் பயமுறுத்தி வருவது அவற்றுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்கும் அடிப்படையில் வித்தியாச மில்லை என்பதைக் குறிக்கவில்லையா? புதிய மெய்முதல் வாதத்தின் அவசியத்தை உணர்த்தவில்லையா?

அந்த அவசியத்தைத்தான் மூன்றாம் உலக நாடுகள் இன்று உணர்ந்து வருகின்றன. மூன்றாம் உலக நாடுகள் படிப்படியாக மார்க்சிய சோஸலிஸத்தை நாடும் என்று எதிர் பார்ப்பதும் பிழையான கணிப்பாகவே இருக்கிறது என்பது அதன்மூலம் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

இதை வலியுறுத்தும் வேறு சில ஆதாரங்களும் உண்டு. மூன்றாம் உலகத்தின் "நடுநிலை வழி என்பதன் உண்மையான அர்த்தம் நேருகால இந்தியாவுக்குரிய காந்திய மரபிலிருந்தே வருகிறது. அதாவது, காந்தி காட்டிய ஆத்ம மரபு. அந்த மரபு இந்தியாவுக்குரிய ஒரு விசேட மரபாகும். அசோகனின் ஆட்சியிலும், அக்பரின் ஆட்சியிலும் நின்ற அதே ஆத்ம மரபு. அந்த மரபுதான் இன்றைய "நடுநிலை"க்குப் பின்னாலும் நிற்கிறது.

மூன்றாம் உலகம் என இன்று அழைக்கப்படும் அபிவிருத்தியடையும் ஆசிய, ஆப்பிரிக்க, தென்னமெரிக்க நாடுகள் மார்க்சிய சோஸலிஸ் வழியையும் விட்டு முதலாளித்துவ ஜனநாயக வழியையும் விட்டு ஜனநாயக சோஸலிஸ வழியிலான நடுநிலைக் கலப்பு வழியில் முன்னேற முயல்வதும் குறிப்பிடத் தக்கது.

மார்க்சிய வியாக்கியானப்படி இந்தப் பாராளுமன்ற வழி இங்கிலாந்து போன்ற வளர்ச்சியடைந்த முதலாளித்துவ கைத்தொழில் நாடுகளுக்கே பொருத்தமாயிருக்கும். அப்படி அவரே ஒப்புக்கொண்டும் இருக்கிறார். ஆனால் இன்றோ அதே பாராளுமன்ற வழியை முதலாளித்துவ நாடுகளையும், சோஸலிஸ நாடுகளையும்விட வளர்ச்சியடையாத மூன்றாம் உலகத்துப் பின்தங்கிய நாடுகளான இலங்கை, இந்தியா, சிலி போன்றவையே இங்கிலாந்து போன்ற வளர்ச்சிய டைந்த நாடுகளைவிட) தீவிரமாகக் கடைப்பிடித்து வருகின்றன. இது மார்க்சிய வியாக்கியானங்களிலிருந்து அதிக தூரம் விலகிச் செல்வதையே காட்டுகிறது.

மார்க்ஸின் கருத்துப்படி வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் வரவேண்டிய பொதுவுடைமைப் புரட்சி முதலாளித்துவம் வளர்ச்சியடையாத ரக்ஷ்யாவிலும், சீனாவிலுமே நிறுவப்பட்டது.

லெனின் உருவாக்கிய கட்சியும், அதன் தலைமைத் தகுதிக்காக அவர் காட்டும் காரணங்களும் சிந்தனையையே அதிகமாக அழுத்துகின்றன.

அபிவிருத்தியடைந்த முதலாளித்துவ நாடுகளைவிட அபிவிருத்தியடையாத மூன்றாம் உலகத்து நில மானிய அமைப்பு நாடுகளே சோஸலிஸ நாடுகள் உருவாகிய பின்பும் உலகப் பொதுவுடைமைப் புரட்சிக்குரிய புதுப் பிராந்தியங்களாக சோஸலிஸவாதிகளால் இன்று நம்பப்படுகின்றன. இவை எல்லாம் பொருளாதாரக் காரணிகளைப் பெரிதாக அழுத்திய மார்க்சியத்துக்கு முரண்படுவதாகத் தெரிந்தாலும் மார்க்சிய வாதத்தைத் திருத்துவதாகவே இருக்கிறது.

ஆனால், இந்த மூன்றாம் உலகம் பொருள்முதல்வாதத் தைக் கருத்து முதல்வாதமாக மாற்றுவதாக நின்றுவிடாமல் இரண்டையும் அடித்தள ஆத்ம மரபுக்குரிய மெய்முதல் வாதத்தோடு இணைத்து ஆழமாக்கி முழுமைப்படுத்தவும் முயல்கிறது. அதாவது, மூன்றாம் உலக நாடுகள் முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகத்தையும், மார்க்சிய சோஸலிஸத்தையும் இணைப்பதோடு நின்றுவிடாமல் அவற்றைச் சமய ஞானத்தின் ஆத்ம மரபோடும் இணைக்க முயல்கின்றன.

மார்க்சியத்தின் கருத்துப்படி அபிவிருத்தி குன்றிய மூன்றாம் உலக நாடுகள், பொதுவுடைமை விடுதலையை அனுபவிப் பதற்கு நீண்ட கால தொழிலாளர் சர்வாதிகாரத்துக்குட்பட்ட அடக்குமுறை கைத்தொழில் வளர்ச்சிக்குள்ளாக்கப்பட வேண்டும். அந்த அடக்குமுறைக்குப் பின்பே விடுதலை வரலாம். ஆனால் அதை விரும்பாத இந்தியா, இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் அடக்குமுறையில் லாமலே விடுதலையையும், பொதுவுடைமையையும் பொருளாதார அபிவிருத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் காணப்பட முடியும் என்றும் அதற்கு அந்த நாடுகளின் சமய கலாச்சாரத்துக்குரிய அடித்தள ஆத்ம மரபு உதவுமென்றும் இப்போ புதிய தத்துவம் போடப்பட்டு வருகிறது. சர்வோதயம் என்பது அதுவேதான்.

அப்படியானால் இங்கிலாந்தின் முதலாளித்துவ பாராளு மன்ற வளர்ச்சியின் காரணமாகப் பாராளுமன்ற முறைப்படி சோஸலிஸம் அங்கு வரலாம் என்று மார்க்ஸால் ஏற்றுக் கொள்ளப்பட்டது போல் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் ஆத்ம மரபு காரணமாக அந்த மரபுக்குரிய வகையில் விடுதலையும் பொதுவுடைமையும் அபிவிருத்தி யோடு இரண்டறக் கலந்து, அடக்குமுறை ஏதுமில்லாது புதிய முறையில், சர்வோதய வழியில் வரலாம் என்று ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது? ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதை ஏற்றுக் கொள்ளும்போது பொருளாதாரக் காரணிகளும் சிந்தனையும் ஒருங்கே அடித்தள மெய்யிடம் ஒப்படைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்முதல்வாதமும், கருத்துமுதல்வாதமும் மெய்முதல் வாதமாகப் பூரணமடைகின்றன.

அந்தப் பூரணப் போக்கின்படி மார்க்சிய வியாக்கியானங்களும் மாற்றப்படுகின்றன.

முதலாளித்துவ நாடுகளும், சோஸலிஸ நாடுகளும் இன்றைய இருபெரும் வர்க்கங்களாகும். ஆனால், வர்க்கங்கள் என்பவை குணங்களையே பிரதிபலிப்பவை. அந்தக் குணங்களின் வெளிப்பாடுதான் கருத்துமுதல் வாதமும், பொருள்முதல்வாதமும், அந்தக் குணங்களுக் குரிய சர்வதேசப் போராட்டம் இன்று இரண்டும் ஒன்றாகிய உடனிருந்து வாழும் சமாதானக் கலப்பு நிலையில் ஸ்தம்பித்து நிற்கிறது.

அந்த ஸ்தம்பித்த கலப்பிலிருந்து பொதுவுடைமை விடுதலையை எழுப்புதற்குரிய சாதனமாகத் தொழிலாளர் வர்க்கத்தை எதிர்பார்க்கக்கூடாது. முதலாளித்துவத்துடன் உடனிருந்து வாழ முயலும் தொழிலாளர் குணக் கலப்புக்குள் ளாகியவர்களேயொழிய குணங்களைத் தாண்டுவதாய் இல்லை, பொதுவுடைமை விடுதலை என்பதோ குணங்களைக் கடந்த பேரறிவு, ஆத்ம விடுதலையாகவே இருக்கும். அதனால் குணங்களைக் கடந்த பூரணர்களின் கூட்டமே புதிய ஸ்தம்பித்த கலப்பு நிலையை விளக்கவும் அடுத்த எழுச்சிக்கு வழிவகுக்கவும் ஆற்றலுள்ளவர்களாக இருப்பர்.

அத்தகைய கூட்டத்தின் ஓரளவு புத்திபூர்வமான வளர்ச்சி அரும்பலை ஜெயப்பிரகாஷ் நாராயணனின் இந்திய சர்வோதய இயக்கம் ஓரளவு காட்டி வருகிறது. ஆனால், அதில்கூட அதன் பூரண வலு இல்லை. அதன் பூரண வலுவையும் உருவ உள்ளடக்க முழுமையையும் இன்று இலங்கையிலுள்ள சர்வமத சங்கமும் அதன் அங்கத்தவர் களான ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் சிலருமே காட்டி வருகின்றனர்.

அவர்களின் பூரணப் போக்கின் வலுவைத்தான் இன்றைய மூன்றாம் உலகு என்ற பிரிவிலும் அதன் நடுநிலை என்ற கொள்கையிலும் நாம் காணவேண்டும்.

இந்தியாவின் ஆதரவுடன் நிறைவேறிய பங்களாதேசுஷ் சுதந்திரப்போரின் வெற்றியில் இதே போக்கின் வெற்றி யையே பார்க்கவேண்டும்.

முதலாளித்துவ நாடுகளிலும் சோஸலில நாடுகளிலும் ஒருங்கே தெரியும் இன்றைய புதுப் பரம்பரையின் விழிப்புப் போராட்டமுங்கூட இப்புதிய விடுதலை இயக்கத்தின் முதல் அலையேயாகும்.

மார்க்சிய சித்தாந்தச் சுயவுணர்வுள்ள தொழிலாள. வர்க்க த்தின் புரட்சிக்குரிய தலைமை இடத்தை இன்று மூன்றாம் உலகமும் புதுப்பரம்பரையும் அவற்றை புத்திபூர்வமாக விளங்கிக்கொண்ட பூரணர் கூட்டமும் எடுத்துக்கொள் கின்றனர் என்றால், அந்த மூன்று பண்புகளும் ஒருமித்துக்காணப்படும் இலங்கையின் பங்கு உலகில் மிக முக்கியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல்: நான்கு
# தளம்: தேசம்

மூன்றாம் உலகத்து முக்கிய நாடுகளில் இலங்கையும் ஒன்று.
புதுப்பரம்பரையின் புரட்சி ஒன்றும் இங்கு நடந்திருக்கிறது.
அடக்குமுறையில்லாத வகையில் ஆரம்பத்திலிருந்தே விடுதலையைக் காட்டலாம் என்ற தெம்பைத் தரும் ஆத்ம மரபு இலங்கையில் இருக்கிறது. பிறநாடுகளைவிட இங்கு நான்கு முக்கிய சமயங்களும் இணைந்து வளர்கின்றன.
அத்துடன் மூன்றாம் உலகத்தின் ஆத்மீக - அரசியல் பலமுள்ள நாடான இந்தியாவும் அதற்கருகிலேயே இருக்கிறது. அங்கிருந்து எழுந்த காந்தீய மரபும் அதன் தத்துவார்த்த இயக்கமான சர்வோதயமும் இலங்கையில் வேரூன்றத் தொடங்கியிருப்பதுடன் அதன் சிறு வட்டத்துறைக்குரிய இயக்க வேலை சர்வதேச ரீதியில் பாராட்டப்பட்டுப் பரிசைப் பெற்று வளர்வதாகவும் இருக்கிறது.

இலங்கை கருணையின் உருவமும், ஞானத்தின் ஒளியுமான புத்தர் பகவானின் புனித கொள்கைகளால் ஆரம்ப காலத்திலிருந்தே வளம்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இலங்கையிலேயே அதே புத்தரின் வழியில் வந்த இந்த இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் சத்திய அவதாரமான ஸ்ரீலஸ்ரீ நந்தகோபாலகிரி இலைமறை கனியாய் இருந்து அடுத்த யுகத்தின் எழுச்சிக்குரிய பேரியக்கமான சர்வமத சங்கத்தை நிறுவிவிட்டு மறைந்திருக்கிறது. அது இருக்கும்போது ஒலித்து விட்டுச் சென்ற சில மகா வாக்கியங்கள் கீழே தரப்படுகின்றன.

புத்தர் சமயத்தவர் சரண்புகும் போதிஞான நிலையும், கிறிஸ்தவர் வணங்கும் பரிசுத்த ஆவியும், இஸ்லாமியர் வணங்கும் அல்லாஹ்வும், இந்துக்கள் வணங்கும் பரப் பிரம்மமும் பெயரற்ற உருவமற்ற ஒரே நிலையைக் குறிக்கிறது.

அன்பும் அமைதியும் உன்னிடமிருந்தால், சுய நோக்கின்றிச் சமூக முன்னேற்றத்துக்காக நீ சேவை செய்தால் எந்தச் சமயத்தைச் சேர்ந்திருக்காவிட்டாலும் நீயும் ஓர் உண்மை யான சமயவாதியே.

ஒவ்வொரு பேரியக்கமும் ஆரம்பத்தில் சிறியதாகவே தெரிகிறது. சிந்திக்கத் தெரிந்த எவனும் இதை அறிவான். காலங்களும் நிலையும் இயற்கையும் மாறும்போது உண்மையாகவே நாமும் நம் கொள்கைகளும் மாறியாக வேண்டும். இல்லையெனில் நாம் அந்தச் சூழ்நிலையில் சீவிப்பது கஷ்டம். இதைத்தான் யுகமாற்றம் என்கிறோம்.

திருப்பணி என்ற பேரில் இன்னும் நாம் மூலைக்கு மூலை கோவில்களைக் கட்டி எழுப்புவது சரியா? அவற்றுக்குச் செலவிடும் பணத்தைக் கொண்டு ஆயிரம் ஏழைகள் வாழ வழி வகுப்பது இன்று நாம் செய்யும் அதி உன்னத திருப்பணி ஆகாதா? உண்மையான இறை வழிபாட்டுக்குக் காசு வேண்டுமா?

கிருதயுகத்தில் கோவில்களோ, திருவிழாக்களோ, காணிக்கைகளோ இருக்கப்போவதில்லை, எல்லோரும் சமவெளியில் ஒன்றி மானசீகமாக இறைவனைப் பிரார்த் திப்பார்கள். தமக்குரிய சத்திய நிலையை அவர்களே தரிசிப்பர்)

இந்தப் பிராமணரும், குருமாரும் மக்களைச் சுரண்டி வாழும் முதலாளிமார்கள் வளர்த்துவரும் பெருச்சாளிகள் தான். இத்தகைய பத்தாம்பசலிகளை நாம் தொந்தி கொழுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பது - அதுவும் கண்ணீர் விட்டு வேர்வை சிந்தித் தேடிய பணத்தைக் கொண்டுபோய்க் கொடுத்து - தொந்தி கொழுக்கவைப்பது நியாயமா ? இதைத் திருப்பணி என்று சொல்லலாமா?

சர்வ மதங்களை ஒன்றாக இணைத்தும், ஆசார மரபைக் கிழித்து ஆத்ம மரபை அழுத்தியும் கருத்து முதல்வாதத் தையும், பொருள்முதல்வாதத்தையும் பூரண மெய்முதல் வாதத்தின் சத்தியத்தில் முழுமைப்படுத்தியும், உண்மையான பொருள் முதல்வாதப் பொதுநலச் சேவைகளையும் சத்தியத்தின் ஒரே ஆன்மீக வெளிப்பாடு என்று நிரூபித்தும் வளர்ச்சி மாற்றத்தின் அவசியத்தை அழுத்தி புதுயுக மாற்றத்திற்கு வழிகாட்டியும் சென்றுள்ள அந்த மாபெரும் சத்திய அவதாரத்தின் பூரண சர்வோதயக் குரலை இன்று தான் ஸ்ரீலங்கா சர்வதேச நாடுகளிடமும் முன்வைக்கிறது.

அந்தப் புதுயுக தர்மத்துக்கேற்ப ஆரம்பத்திலிருந்தே அடக்கு முறையற்ற விடுதலையையும் பொதுவுடைமையையும் தம்மளவில் அனுபவிக்கவும் சமூகத்திடம் பரப்பவும் பயின்றுவரும் பூரண வீரர்களும் அதே ஸ்ரீலங்காவில்தான் இன்று காணப்படுகின்றனர். அதனால் சகல விதத்திலும் இன்று ஸ்ரீலங்காவே சர்வதேசங்களுக்குமுரிய சத்திய எழுச்சிக்குரிய மூலஸ்தானமாக விளங்குகிறது. அந்த முக்கியத்துவத்தை, இன்று ஸ்ரீலங்காவில் அதன் பிள்ளை களில் ஒரு பகுதியினரான தமிழ் மக்களில் ஒரு சிறு வட்டம் அதிகமாக உணர்ந்ததாகக் காணப்படுகிறது.அதை அவர்கள் இலக்கியப் போக்குகள் பிரதிபலிக்கின்றன. சரித்திர வளர்ச்சியின் சத்திய வெளிக்காட்டலுக்குரிய உண்மையான எதிர்காலத் திசை எந்தப்பக்கம் இருக்கிறது என்பதை 1956 முதல் 1972 வரையுள்ள ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி நிச்சயமாகக் காட்டவே செய்கிறது.

இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் மரபுப் போக்கை முதலில் ஆராயலாம்.
ஆறுமுக நாவலர் முதல் பண்டிதமணி கணபதிப் பிள்ளை யூடாக ஈழகேசரிப் பரம்பரைக்குரிய கனக செந்திநாதன் வரை வளர்த்த பொருள்வாதமாகவும் அதன் பலாத்கார ஆக்கிரமிப்பு சர்வாதிகாரமாகவும் வளரும் போக்கு இதுதான்.
அந்த நிலையில் உண்மையான அன்பையும் அதற்குரிய அகப்புறப் பண்பாட்டையும், சமூக சமத்துவத்தையும், சுதந் திரத்தையும் தேடும் அறிவுஜீவிகளும் ஆன்மஜீவிகளும் அதாவது சகல உண்மை விரும்பிகளும் இத்தகைய மரபுக்கும், சமயத்துக்கும், அதன் கடவுளுக்கும், கலாச் சாரத்துக்கும் எதிரானவர்களாகவே தம்மைப் பிரகடனப்படுத்த வேண்டிய நிர்ப் பந்தத்துக்குள்ளாகின்றனர். அவர்கள் தம்மைச் சத்தியத்துக்கெதிரான பொருள்முதல்வாதிகளாகப் பிரகடனப்படுத்திக் கொண்டாலும் உண்மையில் அவர்களது பொருள்முதல்வாதம், அன்பையும், சமத்துவத்தையும், விடுதலையையும் அவற்றை நோக்கிய அக - புற வளர்ச்சியை விரும்பும் விஞ்ஞான ரீதியான இலட்சிய வாதமாகவே இருக்கிறது. அந்த வகையில் அவர்களது பொருள் முதல்வாதமே அந்தச் சூழலுக்குரிய உண்மையான கருத்து முதல்வாதமாகவும், ஆன்மீகவாதமாகவும் அடிப்படையில் செயல்படுகிறது.

ஒருவகையில் இத்தகைய எதிர்மாற்றங்கள் வெளிப்படை யாகத் தெரியாத ஒரு கருத்துக் கலப்பையும் ஏற்படுத்துகிறது. சமயப் பொருள்முதல்வாதம் தனது வெளிப்பூச்சு இலட்சி யமாக எதைக் காட்டுகிறதோ அதையே தனது உள்ளடக்கமாகக் கொண்டு சமயத்தை எதிர்க்கும் சமதர்மப் பொருள்முதல்வாதம் வேறு வகையில் விஞ்ஞான ரீதியாக நடைமுறைப்படுத்த முயல்கிறது.

இரண்டும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாக இருப்பினும், ஒருவகையில் வேறு ஓர் ஆழக்கோணத்திலிருந்து இரண்டும் திருத்தப்பட்டு இணைக்கப்பட்டு பூரணப் படுத்தப்படக் கூடியவையாகவும் இருக்கின்றன. அந்தப் பண்புதான் மூன்றாம் பக்கத்துப் பார்வையை அவசியமாக் குகிறது.

இத்தகைய எதிர்மாற்றங்களும், அவற்றால் ஏற்படும் கலப்பும், கலப்புக்குரிய போராட்டங்களும், சமய கலாச் சாரத்தை ஏற்றுக்கொண்டுள்ள சகல சமூகங்களும் சந்தித்துத்தான் இருக்கின்றன.

அவையே 15-ம், 16-ம் நூற்றாண்டுகளுக்குப் பின்பு வந்த இருபெரும் சர்வதேசப் போக்குகளாகவும் மாறியுள்ளன. ஒன்று, சமயத்தை மறுக்காமல் சமயப் பூச்சுக்களையே தன் இலட்சியப் பூச்சுக்களாகக் கொண்டு பச்சையான பொருள் வாதமாகச் செயற்படும் மேற்கத்தைய முதலாளித்துவ ஏகா திபத்தியப் போக்கு. இரண்டு, சமயத்தை மறுத்துக்கொண்டே பழைய சமயங்களின் ஆன்மீக அடிப்படை இலட்சியங்களான அன்பு, சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றைத் தனது இலட்சியமாகக்கொண்டு செயல்படும் பொருள்முதல்வாத சர்வதேச் சோஸலிஸ ஏகாதிபத்தியப் போக்கு.

இந்த இருபெரும் சர்வதேசப் போக்குகளின் -தன்மைகளை அறியும்போது நமது இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் மரபுவாத - நற்போக்கு எப்படிச் சர்வதேச ஏகாதிபத்திய முதலாளித்துவப் போக்குடன் சம்பந்தப் பட்டிருக்கிறது என்பதை அறியலாம். ஆறுமுக நாவலர் காலந்தொட்டு இறுக்கமடைந்து வந்துள்ள நமது வெளிப் பூச்சு ஆசார மரபு இன்றைய மேற்கத்தைய முதலாளித்துவ ஏகாதிபத்திய மரபோடு முரண்பட்டதாக ஆரம்பத்திற் காட்டிக்கொண்டாலும் அடிப்படையில் இரண்டும் ஒரே பெரும் மேல்பூச்சு மரபின் இரு வண்ணங்களாகவே இருக் கின்றன.

ஆரம்பகால முரண்பாடுகள் - கிறிஸ்தவ கால முரண்பாடுகள் - மழுங்கிய பின் இன்று அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை ஒருமை தெரிகிறது. அதை ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின் அரசியற்போக்கு அப்பட்டமாகத் தெரிவிக்கிறது. அதாவது காந்தீயத்தை அரசியலில் புகுத்துவதாக நடிக்கும் போக்கு.

உண்மையான காந்தீயப் போக்கோ அடிநாத ஆன்மீக ஞானமரபைத் திரும்பவும் மேல்தளச் சமூக ஆசாரங் களோடும், இயக்கங்களோடும் தொடர்புகொள்ளச் செய்து அந்த மேல் தளச் சகல துறைகளையும் முற்றாகச் சத்தியவெளிப்பாட்டுக் கேற்ற வகையில் மாற்றியமைக்க முயன்ற போக்காகும். காந்தி மகானோ மூன்றாம் பக்கத்தின் எழுச்சியைப் பிரதிபலித்த இராமகிருஷ்ணரின் வழிவந்த முன்னோடிகளான விவேகானந்தர், ரமணர், அரவிந்தர், பாரதி ஆகியோரின் தொடர் வரிசைக்குரிய ஒருவர். அவரது அரசியல் போராட்டம் சமூக மேல்பூச்சு ஆசாரங்களையும், மூடக்கொள்கைகளையும் கிழித்துக்கொண்டு அடித்தளம் வரை செல்ல முயன்ற சர்வ தேசங்களுக்குமுரிய ஆன்மவிடுதலைப் போராட்டமாகும்.

அப்படிப்பட்ட மகானின் பெயரைச் சொல்லிக்கொண்டு சமூகத்தில் சாதிக்கொடுமைகளையும், வர்க்கச் சுரண்டலையும் மறைத்திருக்கும் மேல்பூச்சு ஆசாரங்களைக் கிழிக்காமலும், அவை எழுப்பும் கனவுகளைக் குலைக்காமலும் போராட்டம் நடத்தலாம் என்று நினைப்பது காந்தியின் பெயரால் உண்மையான காந்தியத்தையே சாகடிக்கும் அரசியல் ஆசாரப் பூச்சொன்றை வளர்ப்பதாகவே இருக்கும்.

அதைத்தான் தமிழர் கூட்டணியினர் செய்கின்றனர். அந்த வகையில் அவர்களது அரசியல் ஆசாரமும், ஆறுமுக நாவலர் காலந்தொட்டு வரும் ஆசார மரபும் நற்போக்கும் ஒன்றையொன்று தழுவியவையேதான். ஆன்மீகத்தின் பெயரில் பச்சையாக நடைபெறும் பொருள்வாதப் போக்கேதான், பொருள்வாதப் போக்கு சமூக மாற்றங்களை விரும்புவதில்லை. அப்படியென்றால், இன்று அந்த மேல்தளப் போக்கும் போராடத் தொடங்கியிருக்கிற தென்றால், அது தன் நிலையான அந்தஸ்தாகக் கருதிக்கொண்ட உத்தியோக – வியாபார உரிமைகளுக்குத் தனிச் சிங்கள மொழிச் சட்டத்தால் வந்த ஆபத்தேதான் காரணமாகும். உண்மையான சமூக மாற்றத்துக்காக அது போராடவில்லை, ஆசாரங்களுக்குப் பின்னாலுள்ள ஆக்கிரமிப்பு களையும், பலாத்காரங்களையும் எதிர்த்து அது போராடவில்லை.

காந்தியின் காந்தீயத்துக்கும் தமிழர் கூட்டணியினரின் காந்தீயத்துக்குமுள்ள வேறுபாடு அதுதான். வேதகாலம் முதல் பாரதியார் ஊடாக வளர்ந்து வரும் தமிழ்க் கலாச்சாரத்தின் ஞானமரபுக்கும், ஆறுமுக நாவலர் முதல் வளர்ந்து வரும் மேல்பூச்சு பண்டித ஆசார மரபுக்கும் உள்ள வேறுபாடும் அதுவேதான். உண்மையான சமயஞானக் கருத்து முதல்வாதத்துக்கும் சமயப்பூச்சுக்களோடு நடத்தப்படும் முதலாளித்துவ ஏகாதிபத்திய பொருள்வாதத்துக்குமுள்ள வேறுபாடும் அதுவே தான்.

அதுதான் அமெரிக்க முதலாளித்துவ ஏகாதிபத்திய ஜனநாயகம், சுதந்திரம் என்ற சொற்றொடர்களும், ஈழத்துத் தமிழ் இலக்கிய மரபுவாதத்தின் நற்போக்கு, தேசிய இலக்கியம்" என்ற சொற்றொடர்களும், தமிழர் கூட்டணியினரின் – தி.மு.க. செல்வாக்குள்ள "கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு என்பவையும் உண்மையான, ஆழமான தத்துவப்பின்னணி சேராத அர்த்தமற்ற வெளிப்பூச்சுச் சுலோகங்களாக நிற்கின்றன.

காரணம், அவை மூன்றும் ஒன்றேதான்.

மேற்கத்தையே முதலாளித்துவப் போக்கும், ஈழத்து இலக் கியத்தின் மரபுவாத நற்போக்கும், ஈழத் தமிழர் கூட்டணியின் காந்தீய ஆசாரப் போராட்டமும் ஒரே மேல்பூச்சு "மரபு", "மத்தாப்பு" புஸ்வாணங்களேதான்.

1956–க்குப் பின் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் வலுவடையத் தொடங்கிய இப்போக்கு வெகுசீக்கிரமே அந்த வலுவை இழக்கவும் தொடங்கியது. அந்த வலுவிழப்பு 1956க்குப்பின் தெரியவரும் சர்வதேச முதலாளித்துவ ஏகாதிபத்தியப் போக்கின் நெருக்கடியோடும் தேய்வோடும் ஒத்திருப்பதைக் கவனிக்க வேண்டும்.

அந்த வலுவிழப்பினதும் தேய்வினதும் காரணங்களாக அடுத்த போக்குகள் உள்நுழைகின்றன. அதுதான், மார்க்சியப் போக்கும் மூன்றாம் பக்கப் பார்வையும்,

இந்த ஆசார மரபுவாதத்துக்கும் அதன் முதலாளித்துவப் போக்குக்கும் எதிராக 1956க்குப் பின் ஈழத்தில் மார்க்சிய முற்போக்கு இலக்கிய இயக்கம் வளர்ச்சியடையத் தொடங்கியது. வழிவழி ஆசார மரபுவாதம் சமூகத்தின் ஊழல்களையும் பிரச்சனைகளையும் தீர்க்க முடியாமல் அவற்றைப் பூசிமெழுகுவதையும், அவற்றுக்கு எதிரான போராட்டங்களைத் திசை திருப்புவதையும் கண்ட சீர்திருத்தவாதிகள் வேறு வழியின்றி மார்க்சிய நாஸ்திகப் பொருள்முதல்வாதப் பக்கம் திரும்பினார். அது தமிழ்க் கலாச்சாரத்தின் அடிநாத ஞானமரபுக்கு முரண்பட்டதாகத் தெரியினும், உண்மையில் அதுவே மேல்தளச் சமய ஆசாரப் பூச்சு மரபைவிட அதற்கு அண்மித்ததாக இருக்கிறது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பழைய சங்கப் பாடல் முதல் இராமலிங்க சுவாமிகளின் சர்வ சமய சன்மார்க்க சமரசத்தின் சர்வதேசப் போக்குக்கூடாக "இடிபட்ட சுவர் போலக் கலி விழுந்தான் கிருதயுகம் மாதோ" என்று ரஷ்யப்புரட்சியைப் பற்றிய பாரதி பாடல் வரை ஊடுருவி நிற்கும் தமிழன் கண்ட சர்வதேச சத்திய ஒருமைக்குப் புதிய உருவங்கொடுக்க விரும்பிய இன்றைய சீர்திருத்தவாதி களால் மேல்தள ஆசார மரபோடு திருப்திப்பட்டிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. அந்தளவுக்கு அவர்களுக்குப் பார்வையும் கலையுணர்வும் ஆத்ம உந்தலும் மழுங்கிக் கிடக்கவில்லை. அதேசமயம் அவர்களிற் பலர் அடித்தள ஞானமரபோடு மேல்தள ஆசார மரபையும் ஒன்றாக நினைத்து மாறாட்டம் செய்துகொண்டாலும், மாறாட்டம் செய்யாத வேளைகளிலுங் கூட அடித்தள ஞான மரபிலிருந்து புதுயுகச் சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் தத்துவ மொன்றைக் கண்டுபிடிக்க முடியாத தரிசனமின்மையாலும் அவர்களுக்குச் சோஸலிஸ சமதர்மத்தை இலட்சிய நோக்கமாகக்கொண்ட மார்க்சிய சித்தாந்தமே சரியான புது மார்க்கமாகத் தெரிந்தது. அத்துடன் சாதிக் கொடுமைகளி லிருந்து தப்ப முயன்ற பெரும்பாலான ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களுக்கு அந்தக் கொடுமைகளையும் அதையொத்த வேறு கொடுமைகளையும் நியாயப்படுத்துவதா கத் தெரிந்த சமயங்களிடமிருந்து எந்தவித சமூக தர்மத்தையும் எதிர்பார்க்க முடியாது என்ற எண்ணம் எழுந்ததிலும் தப்பொன்றுமில்லை. சாதிப்பிரிவுகள், வர்க்கப்பிரிவுகள் என்ற பாகுபாடுகளும் அவற்றுக்குரிய மறைக்கும் பலாத்கார ஆக்கிரமிப்பும் சுரண்டலும் அவற்றை மறைக்கும் ஆசார அவளிப்பூச்சுகளும் இல்லாது உண்மையான அன்பும், சகோதரத்துவமும், சமத்துவமும், சமதர்மமும் மரபுப்போக்கும் 1956க்குப் பின் வந்த மொழியுணர்ச்சி சிறந்த அரசியல் சூழலில் புதிய வலுப்பெற்ற தோடு பல புதுப் பண்டிதர்களையும் ஆற்றல் இலக்கிய மெழுத்தாளர்களையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டது.

"மரபு" "மத்தாப்பு"க்குரிய வண்ணங்கள் பலவகைப்பட்டவை. பண்டிதமணி கணபதிப்பிள்ளை, இலங்கையர்கோன் சம்பந்தன், வைத்திலிங்கம், கனக செந்திநாதன், மகாகவி, நீலவாணன், ரகுமான், எஸ்.பொன்னுத்துரை, F.X.C நடராஜா,சிற்பி, யாழ் இலக்கியவட்ட எழுத்தாளர் போன்றவர்கள் எல்லோரும் இந்த மரபு மத்தாப்பின் பல்வகைப்பட்ட வர்ணங்கள்தான்.

"கலைச்செல்வி", "இளம்பிறை" போன்ற சஞ்சிகைகளும், அரச பதிப்பகம் போன்ற ஸ்தாபனங்களும், யாழ் இலக்கிய வட்டம் போன்ற சங்கங்களும், "நற்போக்கு இலக்கியம்", "தேசீய இலக்கியம்" என்ற சித்தாந்தமற்ற சுலோகங்களும் இந்த மரபை நியாயப்படுத்த எழுந்த சித்தாந்தமற்ற சஞ்சிகைகளும், ஸ்தாபனங்களும் சுலோகங்களுந்தான்.

இந்த மரபின் சாதனைகள் பலவுண்டு. ஆறுமுக நாவலர் தொட்டு எஸ். பொன்னுத்துரை வரையுள்ள அந்த இலக்கியச் சாதனைகளைப் பலரும் அறிவர். அதைப் பலரும் அறிவதில்லை.

இந்த மரபின் ஆரம்பமே பலவந்தமாகக் குறுக்கப்பட்ட ஒரு கட்டுப்பெட்டிப் பார்வையோடுதான் தொடங்கியது. சங்க காலம் முதல் திருவள்ளுவர், திருமூலர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், சேக்கிழார், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள், பாரதியார் ஊடாக இன்றுவரை வளர்ந்துவரும் தமிழ் இலக்கியத்தினதும் கலாச்சாரத்தினதும் அடிநாத வேதப் பெரும் மரபைப் பலவந்தமாகவும், கட்டுப்பெட்டித்தன மாகவும் குறுக்கிப் பிதுக்கியெடுத்த ஞானமற்ற பண்டிதப்போக்குத் தான் இது.

அதன் வித்துக்கள் சைவசித்தாந்தம் என்ற சித்தாந்தம் வகுக்கப்பட்ட காலத்திலேயே தூவப்பட்டுவிட்டனவென்றாலும் அப்போது அவை அடிநாத ஞான அனுபவத்தை விளக்க எழுந்த சித்தாந்த முயற்சிகளாகவே இருந்தன.அடிநாத ஞான அனுபவத்தை அனுபவத்தையே புறக்கணித்து, அதற்குப் பதிலாக ஞான அனுபவமற்ற சித்தாந்தப் பண்டிதத்தனத்தை அதன்மேல்திணிக்கும் மேல்தள கட்டுப்பெட்டித்தனமாகக் குறுகிவிட வில்லை. அடித்தள ஞான மரபுக்கும் மேல்தள ஆசார மரபுக்கும் அதுவரை தொடர்பு இருக்கவே செய்தது. அந்தத் தொடர்பு இருக்கும் வரை அடிநாத ஞான அனுபவ வளர்ச்சிக்கேற்ப மேல்தள சமூக ஆசாரங்களும் மாற்றி வளர்க்கப்படக் கூடியவையாய் இருந்தன. அப்பர், சம்பந்தர் ஆகிய அனுபூதிமான்கள் தமதுகால அரசியல் சித்தாந்த நிலைகளையே மாற்றிய மைக்க கூடியவர்களாய் இருந்தனர்.

அதுதான் உண்மையான கலாச்சாரத்தின் அடிநாத ஞான மரபு.

அது ஆறுமுக நாவலர் காலத்தில்தான் அறுபட்டது. அடிநாத ஞான மரபிற்கும் மேல்தள சமய, சமூக ஆசார மரபுக்கும் தொடர்பற்றுப் போனதுமல்லாமல் அந்தத் தொடர்பு தேவையில்லையென்ற விதத்தில் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டது. அடிநாத ஞான அருள் மரபை மருள் மரமாகத் திரிவுபடுத்திக்காட்டி, மேல்தள ஆசார மரபே தன்னை ஞானமரபாக நடித்துக்கொண்டது.

அந்த மரபு நடிப்பில் ஆறுமுக நாவலர் பெரும் பங்கெடுத்துக் கொண்டார். இராமலிங்க சுவாமிகளின் ஞானப்பாடல்கள் திருமூலர் முதல் தாயுமானவர் வரை வளர்ந்து வந்த அடிநாத வேதஞான மரபை வளர்ப்பவையாகவும் தமிழ் கலாச்சாரத் தையும், இலக்கியத்தையும் உலகப் பெருங்கலாச்சாரத்துக் குத் தலைமை தாங்கச் செய்பவையாகவும் இருந்தபோதுங் கூட அவை "மருட்பாக்களாக" மருட்போக்காக மாறாட்டம் செய்யப்பட்டன. அந்த மாறாட்டத்தின் மூலமே மேல்தள ஆசார மரபு தன்னை அடிநாத ஞான மரபாக, வெளிப் படையாக உத்தியோக ரீதியாக நிறுவிக்கொண்டது.

"அதுவே நீ"

:அகம் பிரம்மமே"

"சர்வமும் பிரம்மமே"

என்ற முப்பெரும் மகாவாக்கியங்கள் அடிநாத ஞான மரபின் அனுபவமாக இருக்கும்போது, அதில் தன்னைத் திணித்து "அது"வைத் தன் "நான்"னால் மறைத்த பண்டிதச் சித்தாந்தந்தான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பசு, பதி, பாசம்"
என்ற மூன்று சுருக்கங்களை அடிநாத ஞான அனுபவ மரபாக மாறாட்டம் செய்தது. ஆத்மாவும் பிரம்மமும் ஒன்றே என்ற மகா வாக்கியங்களின் ஞான அனுபவ அத்துவிதம் "பசு"வும், "பதி"யும் ஒன்றாக முடியாத சித்தாந்தப் பண்டித அத்துவிதமாக மாறாட்டம் செய்யப்பட்டது. அந்த மாறாட்டத்தில் "பசு"வுக்கும் "பதி"க்கும் உண்மையான வேதாந்த அத்துவிதக் கலப்பு இல்லாமல் போனதுபோல், அடிநாத ஞான மரபுக்கும் மேல்தளச் சமூக, சமய ஆசாரத்துக்கும் தொடர்பும் கலப்பும் இல்லாமல் போய்விட்டன.

திரும்பவும் அந்த மேல்தள ஆசார மரபு தன்னை வலுவாக நிறுவிக்கொண்டுவிட்டது. பாரதியாரை அது வாயளவில் மட்டும் ஏற்றுக்கொண்டது. அப்பர்,ஞானசம்பந்தர் ஆகியோரின் இருபதாம் நூற்றாண்டின் உருவமாக அவரை அந்தப் பண்டிதச் சித்தாந்தத்தால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அத்துவிதத்தின் முழு உருவமாகவும் வாழ்ந்துகாட்டிய ரமணரையோ அது முற்றாக இருட்டடிப்புச் செய்துவிட்டது.

இவைதான் இந்த மரபின் பெரும் பலவீனங்களாகும். எது பலத்தின் மூலகாரணமாகவும், அடித்தளமாகவும் இருக்கிறதோ அதையே புறக்கணித்தும் மறைத்தும் தன்னையே அதுவாகக் காட்டியும் நடிக்கும் ஒரு போக்குக்குரிய பலவீனங்கள் என்று சொல்வதைவிட, அந்தப் போக்கையே "பலவீனம்", "போலி" என்பவற்றின் முழு உருவங்களாகக் காண்பதே சரியாக இருக்கும்.

ஆறுமுக நாவலர் முதல் பண்டிதமணி கணபதிப் பிள்ளையூடாக கனக செந்திநாதன், எஸ். பொன்னுத்துரை, யாழ் இலக்கிய வட்ட எழுத்தாளர்கள் வரை வளர்ந்து காணப்படும் இன்றைய தமிழ் இலக்கியப் போக்கு தன்னைச் சைவ சித்தாந்த மரபாகவும், தமிழ் மரபாகவும், நற்போக்காகவும் நடித்துக் கொண்டாலும் உண்மையில் அது தமிழ் மரபுக்கு எதிரான நயவஞ்சகப் போக்குமேதான். வெறும் உள்ளீடற்ற மேல் பூச்சு ஆசார வளர்ச்சியேதான்.

இப்படி கூறுவது பலருக்குக் கோபத்தை மூட்டலாம். ஆனால், உண்மையான தமிழ்க் கலாச்சாரத்தினதும் தமிழ் இலக்கியத்தினதும் தமிழ் ஞானிகளினது அனுபவத்தினதும் அடிநாத வேத மரபையும் அதற்குரிய ஆத்ம சக்தியையும் தரிசித்தவர்களுக்கு இந்த மேல்தள பண்டிதக் கட்டுப் பெட்டித்தன ஆசார மரபு வெறும் மேல்பூச்சு மாயையாகவே தெரியும்.

விசித்திரமென்னவென்றால், மாயாவாதத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொள்ளும் நம் சித்தாந்தப் பண்டிதர்கள் உண்மையில் மாயையான மரபொன்றையே உருவாக்கியுள்ளனர். அடித்தளச் சக்தியத்தோடு தொடர்பற்ற ஆசார மாயை.

இந்த வேரறுந்த மேல்தள ஆசாரம் எழுப்பும் சித்தாந்தங்களெல்லாம் உண்மையான சித்தாந்தத்துக்கு எதிரான சித்தாந்தங்களாகவே இருக்கும். அது எழுப்பும் தத்துவமெல்லாம் உண்மையான அடிநாதத் தத்துவத்துக்கு எதிரானதாகவே இருக்கும். அப்படிக்கூடச் சித்தாந்தம் எழுப்பப்பட முடியாதபோது, அது வெறும் சுலோகங்களோடு மட்டும் திருப்திப்பட்டுக் கொள்ளும். "நற்போக்கு", கடமை– கண்ணியம்– கட்டுப்பாடு, "ஜனநாயகம்", "சுதந்திரம்", "சமத்துவம்", "அன்பு" என்பவை வெறும் சுலோகங்கள். ஆனால், எதனடிப்படையில் கடமையைச் செய்வது, எதன் அடிப்படையில் நற்போக்கைத் தீர்மானிப்பது என்ற ஆழமான விளக்கமும், அதன் விளக்கத்துக்குரிய தர்க்க ரீதியான தத்துவமும் அதன்படி வாழப்படும் ஆழமான வாழ்க்கை முறையும் இருக்கமாட்ட. அந்த நிலையில் "சுதந்திரம்", "ஜனநாயகம்", "அன்பு", "கடமை– கண்ணியம்", "நற்போக்கு" என்பவை வெறும் சுலோகப் பூச்சுக்களாக வெளியே திரைபோட, அகத்தேயும் சமூகத்துக்குள்ளேயும் கட்டுப்பாடற்ற ஆசைகளும் அவற்றின் பலாத்கார ஆக்கிரமிப்புமே அன்பும் இரக்கமுமற்ற ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும்.

உண்மையான சமய வளர்ச்சியும் பண்பாட்டு வளர்ச்சியும் இது காலவரை என்னென்ன அசுர சக்திகளை எதிர்த்து என்னென்ன ஒழுக்க இலட்சியங்களை முன்வைத்தனவோ அதே இலட்சியங்கள் அவற்றின் எதிரிகளான அதே அசுர சக்திகளின் முகமூடிகளாகவும் மேற்போர்வைகளாகவும் புகலிடங்களாகவும் மாற்றப்பட்டு விடுகின்றன.

முருகன் கோயில் அதே பெயரில் சூரனின் கோட்டையாகி விடுகிறது. அடிநாத மரபின் பெயர் அதே மரபை அழிக்கும் ஆசார நடிப்பு மரபாகிவிடுகிறது. சமயமும் பண்பாடும் சமயத்துக்கும் பண்பாட்டுக்கும் எதிரிகளாகிவிடுகின்றன. கருத்து முதல்வாதம் கருத்தின் பெயரிலும் கடவுளின் பெயரிலும் கருத்துக்கும் கடவுளுக்கும் எதிரான ஆசைகளினதும் ஆணவத்தினதும் பொருள்வாதமாகிவிடுகிறது.

இந்தப் பச்சைப் பொருளாசைக்காரர்களான போலிச்சமய– மரபுவாதிகள் சமூக மாற்றத்தை ஒருபோதும் விரும்புவதில்லை. அது அவரவர் வைத்திருக்கும் தேட்டத்தையும் அதற்குரிய அதிகாரத்தையும் முற்றாக அழித்துவிடும் என்ற பயத்தால் சமதர்மத்தை நோக்கிய எல்லாவகைச் சமூக மாற்றத்துக்கும் எதிராகவே இருப்பர். சகல வகையான பாகுபாடுகளையும் நிரந்தரமாக்கவே தர்க்க நியாயங்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருப்பார்.

சமதர்மத்தை நோக்கிய சகலரும் பெருமனிதப் பிரம்ம ஞானிகளாகும் இலட்சித்தை நோக்கியும் துரிதமாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மனதின் சிந்தனைக்குரிய குணத்தின் அடிப்படையில் வடிக்கப்பட்ட வேதகால வர்ணாசிரமமுறை பிறப்பையும் தொழிலையும் அடிப்படையாகக்கொண்ட நிரந்திரச் சாதிப் பாகுபாடுகளாக மாற்றப்படும். செயலுக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையையும், அதற்குரிய அர்த்தத்தையும் அழுத்திய "கர்மம்" என்ற கோட்பாடு சிந்தனையற்ற செயலாகவும், மாற்றத்துக் கெதிரான "விதி"யாகயும் மாற்றப்படும். அதே போல் மொழி, இனம், நிறம் போன்ற எல்லாவகையான புறப்பொருட்களும்,காட்சிகளும் அக்கருத்துக்கும் ஆத்மா வுக்கும் எதிரான ஆதாரங்களாக ஆக்கப்பட்டுவிடும்.

சமயக் கருத்து முதல்வாதமும் அதன் அடிநாத மரபும் வெறும் வெளிவேஷ ஆசார மரபாகிப் படிப்படியாகச் சீரழிய இதற்கெதிரானவர்கள் பச்சையாக உள்ள ஒரு சமூக அமைப்பை விரும்பி மார்க்சிய அரசியல் கட்சிகளில் சேர்ந்தனர் அல்லது அவற்றுக்கு அனுதாபிகளாக இருந்தனர். அவர்களுடைய இயக்கந்தான் ஈழத்தமிழர் இலக்கியத் துறையில்1956-க்குப் பின் வளர்ச்சியடைத் தொடங்கிய "முற்போக்கு" எழுத்தாளர் இயக்கமாகும்.அது ஏற்கனவே குறிப்பிட்டப்பட்ட இன்றைய மூன்று பெரும் சர்வதேசப் போக்குகளில் இரண்டாவது போக்குக்குரிய ஈழத்து இலக்கிய வெளிக்காட்டலாக இருக்கிறது.

அந்த வகையில் அது மேல்தள முதலாளித்துவப் பண்டித ஆசார மரபைவிட அடித்தள ஆன்மீக ஞான மரபுக்குக் கிட்டே இருக்கிறது. அடித்தள ஆன்மீக மரபுக்கும் மேல்தள ஆசார மரபுக்கும் இடைப்பட்டு நிற்கிறது.

ஈழத்தமிழ் இலக்கியத் துறையில் 1956-க்குப் பின் வலுவடையத் தொடங்கிய அப்போக்கு இந்த 72-க்குள் பழைய மேலோட்ட ஆசார மரபு வாதத்தைவிடக் குறிப்பிடப்படக் கூடிய பல சாதனைகளை ஆற்றியுள்ளது. ஜீவாவின் "தண்ணீரும் கண்ணீரும்" முதலாக செ. கணேசலிங் கனின் நாவல்கள், யோ.பெனடிக்ற் பாலனின் "சொந்தக் காரன்", நீர்வை பொன்னையனின் "உதயம்", க. கைலாசபதி யின் சில விமர்சனங்கள், காவலூர் ராசதுரையின் "வீடு யாருக்கு", டானியலின் "பஞ்சமர்" வரையுள்ள பல்வேறு ஆக்கங்களை படிப்போர் அந்த உண்மையை உணர்வர்.

ஆனால், இவர்களை ஆற்றலில்லாது வெறும் அர்த்தமற்ற சுலோகங்களை முன்வைத்தவர்கள் என்றும், இவர்களின் "சோஸலிஸ யதார்த்தம்" என்ற கோட்பாடு காலத்துக் கொவ்வாதது என்று கூறி அதற்குப் பதிலாக "தேசிய இலக்கியம்" என்ற கோட்பாட்டை முன்வைத்தவர்களும் இருக்கின்றனர். எஸ்.பொன்னுத்துரை அவர்களில் முக்கியமானவர். அதன் காரணமாக ஏற்பட்ட கருத்து முரண்பாடு எஸ்.பொ.வை முற்போக்கு அணியிலிருந்து வெளிவே அகற்றியது. அந்த விசயத்தில் இரு சாராரும் தவறிழைத்தவர்களாகவே இருக்கின்றனர். அவரையொத்த ஒருவரை ஆரம்பத்தில் முற்போக்கு இயக்கம் இழக்க முன்வந்திருக்கக்கூடாது. அந்தத் தீவிரம் கூடாது என்பதை 64-க்குப் பிறகுதான் அரசியல் துறையில் உணர்ந்து சமரசம் செய்ய முன்வந்த இடதுசாரிகள் பலர் அதை உணர்ந்தவர் களாய் இல்லை. அதேபோல் வெளியேற்றப்பட்ட பின்பு எஸ்.பொன்னுத்துரையும் தன்னளவிலாவது மார்க்சிய முற்போக்கு இலக்கியப் போக்குக்கு வளமளித்திருக்க வேண்டும். ஆனால், அவர் அதைச் செய்யாததோடு அதற்கு நேர்மாறான ஆசார மரபோடுதான் சமரசம் செய்துள்ளார். அதனால் அவரது "வீ" என்ற சிறுகதைத் தொகுதி அவரது "தேசிய இலக்கியம்" என்ற கோட்பாட்டை வெளிப்படுத்தும் சில தரமான சிறுகதைகளைக் கொண்டதாக அமைந்திருந்தாலும் அவர் காணும் தேசிய-நற்போக்காகவே இருக்கிறது. அதனால்தான் மேல்தள பண்டித ஆசார மரபு இன்று அவரைத் தன் எதிர்ப்புரட்சிக் குரிய முன்னணி வீரராகப் பயன்படுத்தி வருகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களின் கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்கும் நசுக்குவதற்கும் உயர்சாதிக்காரர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்தே உடல் ஆற்றலுள்ள சில கையாட்களைப் பயன்படுத்துவதுண்டு. எழுத்தாற்றல் உள்ள எஸ்.பொ. மேல்தள ஆசார மரபால் இன்று அப்படியே பயன்படுத்தப்பட்டு வருகிறார். தனது தத்துவப் பார்வையின்மையை மறைக்க மரபின் பெயரில் அவர் வார்த்தைகளால் சிலம்பாட்டமும், வாணவேடிக்கைகளும் காட்டுவதுண்டு. அருளற்ற இன்றைய கோயில் திருவிழாக்களின் ஆசார மரபுக்குரிய சிலம்பாட்டமும், வாணவேடிக்கைகளும் போலவே அவையும் இன்று தோற்று வருகின்றன.

மேல்தள வெளிவேட ஆசார மரபு ஈழத்து இலக்கியத் துறையில் எஸ்.பொன்னுத்துரை மூலம் வைத்த தடைக ளையும் உடைத்துக்கொண்டு (தனக்குள்ளே பீக்கிங், மாஸ்கோ என்று பிரிந்துள்ள போதும்) இன்று முற்போக்கு இயக்கம் வளரவே செய்துள்ளது.

முற்போக்குவாதிகளின் "சோஸலிஸ யதார்த்தம்" "பிரதேச இலக்கியம்" என்பன போன்ற சுலோகங்களை முன்வைத் தாலும் அவை ஆசார மரபுக்குரிய "நற்போக்கு", "தேசியம்", "கடமை- கண்ணியம்- கட்டுப்பாடு" போன்ற தத்துவ ஆழமும் அர்த்தமுமற்ற சுலோகங்களல்ல. அவற்றுக்குப் பின்னால் மார்க்சிய சித்தாந்தமும் அதற்குரிய வியாக்கியானங்களும் இயக்கமும் இருப்பதால் மெல்ல மெல்ல முற்போக்கு எழுத்தாளர்கள் சுலோகங்களின் தத்துவ அர்த்தங்களை விளக்கிக்கொண்டு, அவற்றுக்கேற்ற வகையில் சீராக எழுதுவதில் வெற்றிகொள்ளவும் செய்தனர்.

இவர்களது இலக்கியம் தரமுடையதாகக் கொள்ளப்படு வதற்குரிய மதிப்பீடு என்ன?

சுருங்கச்சொன்னால், மேல்பூச்சு ஆசார மரபு எப்படி, இருக்கிற பிரதேச, சர்வதேச சமூக அமைப்பையும், மனித வாழ்க்கை முறையையும் மாற்றியமைக்காமல் இருக்கிற அமைப்புக்குள்ளேயே கலை இலக்கிய இன்பத்தை அனுபவிக்க முயல்கிறதோ, அப்படிப்பட்ட போக்குக்கு எதிராக மனித சரித்திரத்தை முற்போக்காக வளர்க்கக்கூடியதாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது சிருஷ்டிகள் உள்ளன. அதாவது, இலக்கியம் ரசனைக்கு மட்டும் உரியதல்ல. அது விடுதலைக்கும் செயலுக்கும் உரியது. அந்த விடுதலை தனிமனித விடுதலையாக மட்டும் நின்று விடாமல் முழுச் சமூகத்தின் விடுதலைக்கும் வழிகாட்டுவதாக இருக்க வேண்டும். இவையே முற்போக்கு எழுத்தாளர்களின் அளவுகோல்கள் எனலாம்.

அதனால் அவர்களது படைப்புகள் இன்றைய ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின் ஆசார பூச்சுக்களுக்கிடையே உள்ள சாதிக்கொடுமைகளையும், வர்க்கச் சுரண்டலையும் பச்சையா கக் கிழித்துக் காட்டுவதோடு உலகமெங்கும் காணப்படும் அதே வகைப் பலாத்கார ஆக்கிரமிப்பையும் சுரண்டலையும் அவற்றோடு தொடர்புபடுத்தியும் காட்டுகின்றன. அவற்றைக் காட்டுவதன் மூலம் அவற்றிலிருந்து வெளிப்படுத்த முயல்கின்றன.

ஆனால், அவர்களின் முயற்சிக்கு ஏற்றவாறு அவர்களது விமர்சகர்கள் தீவிரமாக வழிகாட்டி விமர்சிக்க முடியாமல் இருக்கிறார்கள். அது பெரும் குறைபாடாகும். அத்தோடு முற்போக்கு விமர்சகர்களிலும் எழுத்தாளர்களிலும் சிலர் பழைய ஆசாரவாதிகளுக்குச் சமமான புதிய பண்டிதர் சாதிப் போக்கை வெளிக்காட்டுபவர்களாக இருப்பதும், பழைய முதலாளிகளையும்விட தீவிரமாக பணஞ் சம்பாதிக்கும் கறுப்புச் சந்தைக்காரர்களாக இருப்பதும் புதுப்பரம்பரையி னரைக் கவரமுடியாத அம்சங்களாக நிற்கின்றன. அது மார்க்சிய சோஸலிஸம் என்ற பெயரில் புதிய துரைத்தனச் சாதிக்காரரிடமும் புதிய முதலாளிச் சுரண்டல்காரரிடமும் அதிகாரத்தை ஒப்படைப்பதாக இருக்காதா என்ற சந்தேகங்களைப் புதுப் பரம்பரையினரிடம் எழுப்புவதாகத் தெரிகிறது.

சோஸலிஸ நாடுகளில் 1956–க்குப்பின் தீவிரமடைந்து வரும் புது விழிப்புக்கு இது சமமாக இருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது. தொழிலாளர்களின் சர்வாதிகாரம் என்ற பெயரில் உளவாளிகள், சிறைச்சாலைகள் ஆகியவற்றை அதிகமாகக் கொண்ட ஆட்சிக்குப் பதிலாகப் பொருளுற் பத்தியும் விடுதலையும் ஒருங்கே கிடைக்க வேண்டும் இல்லா விட்டால் தொழில் நுட்ப சோஸலிஸ நாடுகளின் துரைத்தனக்காரரின் கொடுமைகளுக்கும் முதலாளித்துவ நாடுகளில் காணப்படும் கொடுமைகளுக்கும் வித்தியாச மில்லை என்ற புதிய சிந்தனை விழிப்பை ஒத்திருக்கிறது. அதாவது முடிவு மட்டுமல்ல, வழியுங்கூடத் தூய்மையாக இருக்கவேண்டுமென்ற ஆன்மீக விசாரத்துக்குரிய சிந்தனை.

ஈழத்து இளம் எழுத்தாளர்களும் சர்வதேசப் புதுப் பரம்பரையினரைப் போல் ஆசார மரபில் அதிருப்திப் படுபவர்கள் போலவே இன்று மார்க்சிய முற்போக்கிலும் அதிருப்திப் படுபவர்களாக இருக்கின்றனர்.

அத்துடன் மார்க்சியத் தமிழ் எழுத்தாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தும், அவர்களது சிருஷ்டிகளின் தரம் அதிகரித்து வருவதாக இருந்தும் இன்னும் ஈழத்துத் தமிழ் மக்களின் பெரும்பான்மை யினரைத் தொட்டுத் திசை திருப்ப முடியாதவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர். காரணம், அவர்களது மார்க்சிய சித்தாந்தம் தமிழ்ப் பொதுமக்களிடம் ஊடுருவக் கூடிய அரசியல் பொருளாதாரச் சூழல் இன்னும் பிறக்கவில்லை என்பதல்ல அர்த்தம், மக்களோடு அவர்களால் பழக முடியாமல் இருக்கிறது என்பதும், தமிழ்க் கலாச்சார அடித்தளம், அவர்களது சித்தாந்தம் மக்களோடு கலக்கக் கூடிய வகையில் இடமளிக்கவில்லை என்பதுமே முக்கியக் காரணங்களாகும். அதனால் தாமாகவே தம் பகுதிகளிற் சரித்திரத்தை வளர்க்க உதவுவதைவிடத் தென்னிலங்கை யில் ஏற்படும் சரித்திர மாற்றங்களுக்காக அவர்கள் காத்திருப்பவர்களாகவே இருக்கின்றனர்.

அந்த வகையில் ஆசார மரபுவாதிகள் எவ்வாறு ஆத்ம மரபை வளர்க்க முடியாமல் ஸ்தம்பித்துக் கிடக்கிறார்களோ, அவ்வாறே புதிய புரட்சி மரபை ஓர் எல்லைக்கு அப்பால் வளர்க்க முடியாமல் முற்போக்கு எழுத்தாளர்களும் ஸ்தம்பித்துக் கிடக்கின்றனர். இரு சாராரினது ஸ்தம்பிதமும் சர்வதேச முதலாளித்துவ சோஸலிஸ சக்திகளின் ஸ்தம்பிதத்தையே ஒத்திருக்கிறது.

1956–க்குப் பின் ஈழத்து இலக்கியத்தில் முற்போக்கு எழுத்தாளர் இயக்கம் வலுவடையத் தொடங்கிய காலத்தில், அதன் சர்வதேசப் பெரும்போக்கான சோசலிஸ ஏகாதிபத்திய முற்போக்கு தனக்குள்ளேயே ஒரு நெருக்கடிக் கட்டத்தைச் சந்தித்துக்கொண்டிருந்தது. ஸ்டாலினிஸக் கொடுமைகள் அம்பலப்படுத்தப்பட்ட 22–ம் கட்சி மாநாட்டிலிருந்து ஹங்கேரி, போலிஷ் புரட்சி வரையுள்ள பல நிகழ்ச்சிகளை அதற்கு உதாரணமாகக் காட்டலாம்.

மேற்கத்தைய முதலாளித்துவப் போக்குக்குள்ளும், சோஸலிஸ ஏகாதிபத்தியப் போக்குக்குள்ளும் அடைபட்டு விடாத ஒரு மூன்றாம் பார்வை அவசியமென்பதை இவை சர்வதேச ரீதியில் அழுத்துபவையாக அமைந்தன. இரண்டுக்குள்ளும் அடங்காது வெளியே நின்ற மூன்றாம் உலகத்தின் நடுநிலைக் கொள்கையை சுயஸ், அல்ஜீரிய, வியட்னாம் நெருக்கடிகள் எவ்வாறு வலியுறுத்தினவோ, அவ்வாறே ஹங்கேரிய, போலிஷ் புரட்சிகள் வலியுறுத்தின.

மூன்றாம் நாடுகளின் நடுநிலைக் கொள்கை வெறும் பொருளாதார அரசியல் காரணங்களால் உருவாக்கப்பட்ட தாகவே முதலாளித்துவ நாடுகளும் சோஸலிஸ நாடுகளும் நினைத்துக்கொள்கின்றன. ஆனால், அது அடிப்படையில் அப்படிப்பட்டதல்ல. இந்த நடுநிலைக் கொள்கைக்கு நேரு கால இந்தியா தலைமை தாங்கியது. காந்தி காட்டிய இந்திய ஆத்ம மரபின் உந்துதலின் காரணமாக நேருவின் இந்தியா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேருவே புத்திபூர்வமாக உணராத அளவுக்கு உலக நாடுகளிடையே ஒரு புதுப்பாதையை முன் வைத்துக் கொண்டிருந்தது. அந்தப் புதுப்பாதையின் அவசியத்தை சுயஸ், அல்ஜீரியப் பிரச்சனைகள் மட்டுமல்ல, ஹங்கேரிய, போலிஷ் பிரச்சனைகள் கூட அழுத்துபவையாகவே இருந்தன. அவற்றின் காரணமாக மூன்றாம் உலகத்தால் முழுக்க முழுக்க முதலாளித்துவப் பக்கமும் சார முடியவில்லை முழுக்க முழுக்க சோஸலிஸப் பக்கமும் சாரமுடியவில்லை. ஒரு தனிப்பெரு வட்டமாகவே அது இயங்கி வருகிறது.

இந்த மூன்றாம் உலக நடுநிலைக் கொள்கைகளுக்குரிய தத்துவம் இன்னும் சர்வதேச ரீதியாக வெளிப்படுத்தப் படவில்லை. ஆனால், இதுவரையுள்ள இரண்டு 'பெரும் சர்வதேசப் போக்குகளுக்குரிய சித்தாந்தப் பார்வையால் இதை அடைந்து விட முடியாது என்பதை இன்று உலகமெங்கும் காணப்படும் இளம் பரம்பரையின் போராட்டங் கள் நிரூபித்து வருகின்றன. காந்தி கால இந்தியா காட்டிய சில உண்மைகளுக்கும், நேரு கால இந்தியா கடைப்பிடித்த நடுநிலைக் கொள்கைகளுக்கும், இந்திரா கால பங்களாதேஷ் போருக்கும், இன்றைய ஆசிய, ஆப்பிரிக்க, தென்னமெரிக்க மூன்றாம் உலக நாடுகளின் நடுநிலைக் கொள்கைகளுக்கும், அகில உலகமெங்கும் (குறிப்பாக அமெரிக்காவிலும்) காணப்படும் புதிய பரம்பரையின் புரட்சிகரப் போக்குகளுக்கும் மானசீகமான தொடர்புகள் பல இருக்கின் றன என்பதை உணர்பவர்கள், இன்றைய இளம் பரம்பரை யின் மூன்றாம் பக்கப் பார்வையை ஓரளவுக்காவது உணர்ந்துகொள்வதோடு எதிர்கால மெய்முதல்வாதமான பூரண சர்வோதயத்தின் முக்கியத்துவத்தையும் இவற்றோடு தொடர்புபடுத்திப் பார்க்கக் கூடியவர்களாய் இருப்பர். இன்றைய ஈழத்து எழுத்தாளர்களிற் சிலர் அப்படிப்பட்டவர்க ளாய் உள்ளனர். அப்படிப்பட்ட போக்கை ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் பார்க்கும்போது மு. தளையசிங்கத்தின் எழுத்துக்கள் பற்றிய ஆய்வும் சிறிது அவசியமாகிறது.

1956-ஐ ஒட்டிய காலத்திலேயே எழுத்துத் துறைக்குள் அவரும் பிரவேசித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 60இலிருந்து ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறையில் உக்கிரமடையத் தொடங்கிய முற்போக்கு- எதிர்-முற்போக்குவாதப் பிரதிவாதங்களில் அவரும் ஈடுபடத் தொடங்கியபோது ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறைக்குரிய மூன்றாம் பக்கப் பார்வை முன்வைக்கப்படலாயிற்று. அத்தகைய சர்ச்சைகள் "தினகரனில் இடம் பெற்றபோது, "மூன்றாம் பக்கம்" என்று மகுடமிட்டே அவர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. "கலைச்செல்வி"யில் வெளியான "முற்போக்கு இலக்கியம்" என்ற கட்டுரையில் முற்போக்கு இயக்கத்தின் குறைகளைச் சாடியபோதுங்கூட, எதிர்முற்போக்குக்கு எதிராகவும் அது இருந்தது. ஆனால், உண்மையான மூன்றாம் பக்கத்தின் தரமான கருத்துக்கள் 63-04-ல் எழுதப்பட்ட அவரது "ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி அவசரக் குறிப்புகள்" என்ற தொடரில்தான் வெளிவரத் தொடங்கின. மரபுவாத நற்போக்கையும், மார்க்சிய முற்போக்கையும் மூன்றாம் கோணத்திலிருந்து திருத்தி இணைத்துப் பூரணப்படுத்துவது என்ற இன்றைய கருத்தின் ஆரம்ப வித்துக்கள் அதில்தான் முதன் முதலாக முன்வைக்கப்பட்டன. அத்துடன் முற்போக்கு இளம் எழுத்தாளர்கள் எஸ்.பொன்னுத்துரையின் வார்த்தை மாயையில் சிக்கிக் கிடந்த கோலத்தையும் (குட்டி - யோ, பெனடிக்ற் பாலன்), வாழ்க்கையை மறுக்கும் போக்கில் உடல் நிலையாமை பற்றிய வார்த்தைகளைச் சோஸலிஸ யதார்த்த நடை என நம்பி ஏமாற்றிய விதத்தையும் புட்டுக்காட்டிய, புதுப் பரம்பரையினரை உண்மையான முற்போக்குப் பாதையில் போகத் தூண்டிய முதற் கட்டுரையாகவும் அது அமைந்தது.

மரபுவாதிகளின் இயலாத்தனத்தை வெளிப்படுத்தியதுபோல் முற்போக்கு விமர்சகர்களின் நழுவல், நிழல் விமர்சனங் களையும் மார்க்சியப் பார்வையைப் பூரணமாக அவர்கள் அறிந்திருக்காததையும் வெளிப்படுத்திய கட்டுரைத் தொடரும் அதுவாகவே அமைந்தது.

1965-ல் வெளிவந்த இவரது "புதுயுகம் பிறக்கிறது சிறுகதைத் தொகுதி இதை இன்னும் வேறு கோணங் களில் வளர்த்துக் காட்டியது. யந்திர நாகரிக வளர்ச்சியைக் காட்டும் உலக சமுதாயத்தின் வீழ்ச்சியிலிருந்து விடுதலை பெற மனிதன் எடுக்கும் பல்வேறுவகைப் புரட்சிகளை அது படம் பிடிக்கிறது. உண்மையான விடுதலை ஆத்மீகம் மூலமே கிட்டும் என்பதை வலியுறுத்தியபோதும் அது மேல்தள ஆசார மரபுக்கு எதிரானதாகவே இருக்கிறது என்பதை அவர் அக்கதைத் தொகுதியின் பிற்குறிப்பாக, "கதைத் தொகுதி முழுவதும் ஓர் Anti மரபு, Anti உருவம், Anti அமைப்புத்தொனி அடிநாதமாகப் பின்னால் நின்றால் ஆச்சரியப்படத் தேவையில்லை" என்று எழுதியதில் அறியலாம்.

1970-ல் இவரது "போர்ப்பறை" வெளிவந்ததோடு ஈழத்து இலக்கியத்தின் மூன்றாம் பக்கம், அடித்தள ஞான மரபுக்குரிய பூரண சர்வோதயப் பார்வையாகப் பரிணமித்தது. அத்தோடு இன்று ஒரு தனிவட்டமாக நிற்கும் மூன்றாம் உலக நாடுகளும் உலகமெங்குமுள்ள இளம் பரம்பரையும் தெளிவுபடுத்த முயலும் போக்கை இப்பார்வையே ஆற்றுப்படுத்தக் கூடியதாய் நிற்கிறது.

சர்வோதயம் என்றால் என்ன?
சகல மக்களினது எழுச்சியையும் சகல துறைகளினது வளர்ச்சியையுமே குறிக்கிறது.

சகலரினதும், சகலத்தினதும் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் சாதி, சமய, இன, வர்க்க, நிற, மொழி வேறுபாடுகள் தடைகளாக இருக்கின்றன. அதனால் அத்தகைய சகல தடைகளையும் கடந்த ஒரு சமதர்ம சமுதாய எழுச்சியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வோதயமும் குறிக்கிறது.
இத்தகைய தடைகளையும், குறைபாடுகளையும் கருத்து முதல்வாதம் எனப்படும் மேல்தள சமய ஆசாரமும் முதலாளித்துவப் போக்கும் பூசி மறைத்துக்கொண்டு "அன்பு" என்றும், 'சுதந்திரம்' என்றும், 'ஜனநாயகம்' என்றும் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்றும் போலிச் சுலோகங்களை எழுப்பி மனித சிந்தனையை அவற்றிலிருந்து வேறுபக்கம் திசை திருப்பி ஏமாற்றிப் பார்க்கிறது. அந்தச் சமூகக் குறைபாடுகளையும், பாகுபாடுகளையும் அடிப்படையாக வைத்தே அவை தம்மை வளர்க்க முயல்கின்றன.

இடைத்தள மார்க்சிய சோஸலிஸப் போக்கோ இச்சமூகப் பாகுபாடுகளையும், குறைபாடுகளையும் அவற்றை அடிப்படையாக வைத்து நடத்தப்படும் மறைமுகப் பலாத்கார ஆக்கிரமிப்பையும் சுரண்டலையும் நிலமானிய முதலாளித்துவ சமூக – பொருளாதார அமைப்புகளுக்குரிய பண்பாகவே காண்கிறது. அவற்றை நீக்குவதற்கு அந்த அமைப்புகளையே மாற்றி அமைக்க வேண்டும் என்று கருதுகிறது. அதாவது உற்பத்திச் சக்திகள், அவற்றின் உறவு முறைகள், அவற்றின் அடிப்படையில் வளரும் வர்க்க வேறுபாடுகள் ஆகிய பொருளாதார அடிப்படைகளிலேயே இக்குறைபாடுகளும் பாகுபாடுகளும் தங்கியுள்ளன என்றும், அவற்றை அகற்றுவதற்கு அரசியல் போராட்டத்தையே ஒரே ஒரு வழியாக நம்பியும் அதற்கேற்பவே போராட்டங்களையும், புரட்சிகளையும் நடத்தி வருகிறது. இவற்றின் மூலம் ஒவ்வொருவனது தேவைகளுக்கும் ஏற்ற வகையில் சகல பொருள் வசதிகளையும் வர்க்கச் சுரண்டலற்று அளிக்கும் பொதுவுடைமைச் சமதர்ம அமைப்பு ஏற்படுமென்றும், அந்த அமைப்பில் பொருளாதாரத் தேவைகளிலிருந்தும் அவற்றால் ஏற்படும் கட்டாய உற்பத்தியிலிருந்தும் மனித சமூகம் விடுதலை அடைந்து தன் சுயத்தை அடைகிற தென்றும் அது நம்புகிறது.

இதுதான் மார்க்சியப் பார்வையின் முடிவென்றால், அந்த முடிவும் சர்வோதய முடிவாகத்தானே இருக்கிறது? எவ்வித பாகுபாடுமற்று சகலரும் விடுதலை எழுச்சியுற்று, சகல துறைகளும் சமமாக வளர்ச்சியடையும் முடிவு சர்வோதயந் தானே?

அப்படித்தான் தெரிந்தாலும் வித்தியாசம் இல்லாமல் இல்லை.

மார்க்சியவாதப் பொதுவுடைமையின் 'ஆன்மீக விடுதலை' பொருள் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது.

பொதுவுடைமைச் சமதர்ம அமைப்பில் பொருளாதாரத் தேவைகளிலிருந்தும் அவற்றால் ஏற்படும் கட்டாய உற்பத்தியிலிருந்தும் விடுதலை பெறும் மனிதன், சமயங்கள் கூறும் புண்ணிய உலகங்களின் சொர்க்க வாழ்க்கையை அனுபவிப்பவனாக மாறுகிறான். ஆனால், புண்ணிய லோக வாழ்க்கை போக வாழ்க்கையாக இருக்கலாமேயொழிய ஞான வாழ்க்கையாக இருக்க முடியாது என்றும் அதே சமயங்கள் அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்றன. பொருளாதார வசதிகள் அக விடுதலையை அல்லது ஆன்மீக முழுமையைத் தரவல்லன எனக் கூறுவது ஒருவித பொருளாதாரச் சமயத்தில் நம்பிக்கை வைக்கும்படி கூறுவதாக இல்லையா?

ஆனால், அந்த நம்பிக்கை நிறைவேறும் என்ற ஆதாரங்கள் தெரிவதாக இல்லை. ஏற்கனவே தேவைக் கதிகமாகப் பொருளாதார வசதிகளை அனுபவித்தாலும் வர்க்கங்கள், நிலமானிய – முதலாளித்துவ அமைப்புக்குரிய ஆளும் வர்க்கங்கள், அகவிடுதலையை, ஆன்மீக முழுமையைக் காட்டுபவையாக இருந்தனவா? சுரண்டலற்ற பொருளாதாரப் பொதுவுடைமைச் சொர்க்கம் எந்தக் காலத்தில் வரும்? வந்தாலும் அது முழுமையான ஆன்மீக விடுதலையைத் தரும் என்ற நிச்சயம் என்ன? நிச்சய மில்லாத ஒன்றில் நம்பிக்கை வைக்கவேண்டுமென்பது சமயங்களின் பக்தி மார்க்கத்தைவிட மோசமான பக்தி மார்க்கமல்லவா ?

அந்தக் கேள்விகள் எழும்போதுதான் அடிப்படை வித்தியாசங்களும் அடிப்படை உண்மைகளும் தெரியவரும்.

கருத்து முதல்வாத ஆசார மரபும் மார்க்சிய சோஸலிசப் போக்கும் ஒன்றுக்கொன்று எதிர்ப் போக்குடையவையாகத் தெரியினும், அடிப்படையில் அவை இரண்டுக்குமிடையே முரண்பாடுகள் இல்லை.

ஒன்று, ஆன்மீகத்தை வாயளவில் ஏற்றுக்கொண்டு பொருளை நாடுகிறது.
மற்றது, பொருள் மூலம் ஆன்மீகத்தை நாடுகிறது.

இந்த மறைமுக உண்மைகளை வெளிப்படுத்தி, அந்த உண்மைகளின் முழு அடி ஆழத்தைக் காட்டி, அந்த அடி ஆழத்தளத்தில் வைத்து அவை இரண்டையும் ஒருங்கே திருத்தி, இணைத்து முழுமைப்படுத்தும் போக்குத்தான் மூன்றாம் போக்காகும். அதுவே சர்வோதய மெய்முதல்வாதப் போக்காகும்.

மேல்தள சமய ஆசார கருத்துமுதல்வாத ஆன்மீகத்துக்கும், இடைத்தள மார்க்சிய பொருள் முதல்வாத ஆன்மீகத்துக்கும் பொதுவான அடித்தளமாக இருப்பது சர்வசமய அடித்தளமான சத்தியமாகும். அந்தச் சத்தியமே இரண்டு போக்குக்குமுரிய மெய்யாகும்,

அதனால் சர்வோதயம் என்பது சகலரிடத்திலும் சகல துறைகளிலும் ஏற்படும் எழுச்சியும் வளர்ச்சியும் என்றால், அந்த எழுச்சியும் வளர்ச்சியும் சத்திய வளர்ச்சியாகவும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




New Jaasmin Banquet Hall has a unique floor plan and refined décor that makes it the perfect venue for a party of 100 to 1000 guests.

**Office: 905 477 3350**
**905 477 3331**
**Dir: 416 827 6660**
90 NOLAN COURT
Markham, ON L3R 4L9
WWW.NEWJAASMIN.CA
info@newjaasmin.ca









# ஆதீன கர்த்தா இறைபணிச் செம்மல் இரத்தினசிங்கம் (காத்தான்) அவர்களின் அறநெறிச் செய்தி.

புங்குடுதீவு 9ம் வட்டாரத்தில் மாவுதிடலின் பகுதியின் மத்தியிலே பனை மரங்களால் சூழப்பட்டு அத்தி மரங்களும், அலரி மரங்களும் நிறைந்த ஆல விருட்சத்தின் கீழ் கோவில் கொண்டருளியிருக்கும் காத்தவராயர் சுவாமியை கடந்த 100 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த எனது பாட்டனார் அமரர் செல்லப்பா செல்லாச்சி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட காத்தவராயர் திருக்கோயில் அருளாட்சி நிறைந்த பூர்விகத் திருத்தலம் ஆகும்.

இவ் ஆலயம் எழுந்த ஆதி வரலாற்றைச் சிந்திக்கின்ற பொழுது இவ்வாலயப் பிரதேசம் பயன்தரு விருட்சங்களால் சூழப்பெற்ற மருத நிலமாக காட்சி அளித்தது. அவ் ஊர் மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்பட்டது. இவ் விவசாய தேவைக்கு உரிய நீரினை அவ்விடத்தில் காணப்பட்ட ஷபெரிய கிராய்; எனப்படும் குளத்தில் பெற்று வந்தார்கள். இக்கிராமத்தைச் சூழ நாற்புறமும் பரந்து விரிந்த கடல் தென்படுகின்றது. இவ் மாவுதிடல் என்னும் அழகிய கிராமத்தில் தான் காத்தவராய சுவாமி எழுந்தருளி, வேண்டுவார் வேண்டும் வரத்தை வழங்கி வருகின்றார்.

செல்லப்பா செல்லாச்சி அவர்களைத் தொடர்ந்து, அவர்களின் புத்திரன் நடராசாவும், அவர்தம் மனைவி இராசம்மாவும் பூர்வீகத் தவத்தினால், இவ் ஆலயத்தைச் செவ்வனே பராமரித்து வந்தார்கள். அவர்களின் வழியில் அவர்கள் நிறைவேற்றி வந்த அறப்பணிகளையும், திருப்பணிகளையும் நிறைவேற்றுவதற்கு அடியேனுக்கும் இந்த அரிய வாய்ப்புக் கிடைத்தமையை இட்டு நான் குலதெய்வமாக வழிபடும் காத்தவராய சுவாமிக்கு நன்றி தெரிவிப்பதோடு, அவருடைய திருவருளை வியந்து நிற்கின்றேன்.

அடியேன் பிறந்த, புழுதியளைந்து விளையாடித் திரிந்து வளர்ந்த திருநகர்தான் புங்குடுதீவு 9ம் வட்டாரம் மாவுதிடல் என்று சொல்லப்படுகின்ற அழகிய திருப்பதி. காத்தவராய சுவாமி மீது அளவுகடந்த பக்தியின் காரணமாக இரத்தினசிங்கம் ஆகிய என்னை என் உறவினர்களும், ஊரவர்களும், அன்பர்களும், நண்பர்களும் ஷஷகாத்தான்;; என்று அழைத்து வந்தார்கள்.

ஷநம்பினோர் கெடுவதில்லை. இது நான்கு மறைத்தீர்ப்பு; என்ற தாரக மந்திரத்திற்கு அமைவாக காத்தவராய சுவாமி மீது அன்பும், நம்பிக்கையும் கொண்ட மக்கள், காத்தவராய சுவாமியின் திருவருளால் காலம் தோறும் அறப்பணிகளை யும், திருப்பணிகளையும் நிறைவேற்றி வருகின்ற என்னை காத்தான் என்றே தொடர்ந்தும் என் உறவினர்களும், ஊரவர்களும் அழைத்து வருகின்றனர். நானும் எனது வாழ்நாளை சுவாமியினுடைய திருப்பணிக்கு அளித்து வருகிறேன். மாவுதிடல் 9ம் வட்டாரம், புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ காத்தவராயர் ஆலயம் அமைந்து அவ் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நடைபெற தோன்றாத் துணையாகி உழைத்த என் முன்னோர்களை எண்ணிப்பார்க்கின்றேன். அவர்க ளின் அடிச்சுவட்டில் நடப்பதற்கு எனக்கும் காத்தவராய சுவாமியின் நல்லருட் கடாட்சம் கிடைத்திருக்கிறது என்றே நினைக்கின்றேன். இவ் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கின்ற காத்தவராய சுவாமியின் திருவுருவத்தினை செல்லப்பர் செல்லாச்சி அவர்களே ஒரு தடவை புங்குடுதீவிலிருந்து தலயாத்திரைக்காக இந்தியாவுக்கு சென்றிருந்தனர். அவர்கள் தல யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பும் வேளை இந்தியாவிலிருந்தே இவ் அழகிய விக்கிரகத்தை எடுத்து வந்ததாக அறிகிறேன்.

நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் கடந்த 2004ஆம் ஆண்டு மங்களகரமான சுபானு வருடம் பங்குனித்திங்கள் 09ம் நாள் திங்கட்கிழமை (22.04.2004) காலை 9:11 மணிமுதல் 10:40 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும் துதியை திதியும், சித்தயோகமும் கூடிய இடப லக்கின சுபவேளையில் மகா கும்பாபிசேகத்தினை அமரர்களான சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் (புங்குடுதீவு சிவன்கோவில்) அவர்களுடன் அவரது புதல்வன் சிவஸ்ரீ நா.அருணோதயக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

காத்தவராய சுவாமியின் அற்புதச் செயல்கள் பல இவ்வூரில் நடைபெற்றிருக்கின்றது. கிட்டத்தட்ட 100 வருடங்களுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த இவ்வாலயம் தற்பொழுது 8 தூண்களுடன் கூடிய மணிமண்டபத்துடன் மணிக்கோபுரமும் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் புனரமைக்கப்பட்டு பரிவார மூர்த்திகளுக்கும், தனித்தனி சன்னிதிகள் அமைக்கப்பட்டுள்ளது. பரிவார மூர்த்திகளாக விநாயகர், முருகன், முத்துமாரி அம்மன், வைரவர், ஆஞ்சநேயர், சனீஸ்வரர், சண்டிகேஸ்வரர் மற்றும் நாகேஸ்வரர் முதலிய மூர்த்திகளை பிரதிஷ்டை செய்து கோவிலானது இயற்கை எழிலுடன் பிரமாண்டமாகக் காட்சி அளிக்கின்றது.

இவ் ஆலயத்தின் கட்டட நிர்மாணம் சிற்பவேலைகளை திறம்பட ஆற்றிய அராலியூர் நாகமுத்து கோபாலரட்ணம் குழுவினரையும், காண்பவரை கவரக்கூடிய வகையில் வர்ணவேலைகளைச் செய்து தந்த அராலியூர் ந.கிருபானந் தன் குழுவினரையும் மற்றும் இதர வடிவமைப்புக்களைத் திறம்பட ஆற்றிய அனைத்து கலைஞர்களையும் இத் தருணத்தில் பாராட்டி வாழ்த்துவதுடன் குறுகிய காலப்பகுதிக் குள் எமக்கு ஆலயத்தின் சகல வேலைப்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு துணைநின்ற எல்லாம் வல்ல காத்தவராயப் பெருமானின் திருவடிகளைப் பணிந்து கொண்டு எம்மை எல்லாம் வழிநடத்திக் கொண்டு எனக்குள் இருந்து தனது திருப்பணிகளை இடையூறு இன்றி நிறைவேற்றிக் கொண்ட எம்பெருமானுக்கு நிகழும் மங்கள கரமான ஏவிளம்பி வருடம் வைகாசித்திங்கள் 21ஆம் நாள் (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை தசமித்திதியும் அத்தநட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் சிங்கலக்கினமும் கூடிய பகல் 11:15 மணி முதல் 12:15 மணிவரையுள்ள சுபபுண்ணிய வேளையில் விநாயகப் பெருமானுக்கும், முருகப் பெருமானுக்கும், முத்துமாரி அம்பாளுக்கும், வைரவப் பெருமானுக்கும் ஆஞ்சநேயப் பெருமானுக்கும், சனீஸ்வரப் பெருமானுக்கும், நாகேஸ்வர பெருமானுக்கும், சண்டி கேஸ்வர பெருமானுக்கும், மூலவராக விளங்குகின்ற காத்தவராயப் பெருமானுக்கும் விமானங்களுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகமானது சிறப்பாக நடைபெறுகின்றது.

மகா கும்பாபிஷேக பெரும் சாந்தியானது பிரதிஸ்டா பிரதமகுரு கணேச உபாசகர். சிவானுபூதி சிவஸ்ரீ ச.ஸ்ரீ.மதுசூதனக் குருக்கள் (பிரதமகுரு சித்தங்கேணி பிள்ளையார் கோவில்) அவர்கள் தலைமையில் நடந்தேறியது. தொடர்ந்து காத்தவராயர் சுவாமி ஆலயத்தில் பல திருப்பணிகளையும் அறப்பணிகளையும் நிறைவேற்று வதற்கு என்றும் என்னுடன் எனது புதல்வர்களான அரவிந்தன், அகிலன், அனோஜன் அவர்களது ஒத்துழைப் புடனும் எனது உறவுகளும், ஊர்மக்களும் எனக்கு ஆதரவாக நிற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

“எண்ணித் துணிக கருமம்...” என்ற திருக்குறள் அடிக்கு இணங்க பெருமானின் இப்பணிகளை எக்காலத்திலும் நிறைவேற்றுவேன் என்பதனை உறுதி கூறுகின்றேன். ஆலய அர்ச்சகர்களுக்கும், எம்மூர் மக்களுக்கும் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன்.


தற்பொழுது காத்தவராய சுவாமியின் ஆலயத்தில் ஆலயம் சார்ந்த வரலாறுகளையும், புங்குடுதீவு ஊர்ப் பெருமைக ளையும் மற்றும் வழிபாட்டு மரபுகளையும் காத்தவராய சுவாமி அற்புதப் பெருமைகள் எல்லாவற்றையும் ஒரு நூல் வடிவில் வரலாற்று ஆவணமாக உருவாக்க வேண்டும் என்ற எனது நீண்டநாள் கனவு பலித்திருக்கின்றது என்றே சொல்ல வேண்டும். அந்தவகையில் இந்த நூலினை உருவாக்கு வதற்கு என்னுடன் உதவி புரிந்த நூலாசிரியர் தம்பி செந்தூரன் அவர்களின் நிறைவான ஒத்துழைப்புடன் இந்த மலர் வெளி வந்திருக்கிறது.

மாவுதிடலில் எழுந்தருளி அருள்பாலிக்கும் காத்தவராய சுவாமியின் பெருமைகளையும் சிறப்புக்களையும் இந்த நூல் உலகறிய வைக்கும் என்பது திண்ணம். எம் புங்குடுதீவு மக்கள் எங்கு வாழ்ந்தாலும், அவர்களுக்கு இந்நூல் வழங்கப்படும். அந்தப் பணியைச் செய்வதற்கு காத்தவராயர் சுவாமியின் திருவருளுக்காக பிரார்த்திக்கின்றேன். புங்குடுதீவு கிழக்கு மாவுதிடல் காத்தவராயர் ஆலய ஆதீன கர்த்தா என்ற வகையில் இம்மலருக்குரிய ஆசியினையும், வாழ்த்தினையும் ஆலய வரலாற்றுத் தகவல்களையும் வழங்கி பெருமானின் திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

இறைபணிச் செம்மல்
**திரு.நடராசா இரத்தினசிங்கம்** (காத்தான்)
ஆதீன தர்மகர்த்தா
காத்தவராயர் சுவாமி தேவஸ்தானம்
(மாவுதிடல், புங்குடுதீவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











## ஆலய புனர்நிர்மான பணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INCREASE THE VALUE OF YOUR HOME




## GTA'S #1 CHOICE FOR GRANITE AND QUARTZ COUNTER TOPS

Visit our showroom or give us a call today!


**416.826.2000**
**WWW.PREMIUMSTONE.CA**

PREMIUM STONE LTD., 705 PROGRESS AVENUE, UNIT 11 & 12,
SCARBOROUGH, ON M1H 2X1

PREMIUM STONE LTD.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Western
## Jewellerys

Finest Quality 22k Gold
**SPEICIAILIZED IN SIGAPORE AND DUBAI**

**T: 416 335 9500**
**C: 416 627 5434**
Email: western.j@hotmail.com

அசல் 24/22 கரட் தங்க வைர நகைகளை
அதி நவீன டிசைன்பளில்
உங்கள் எண்ணம்போல் பெற்றுக்கொள்ளலாம்
பழைய நகைகள் மிகக் கூடிய விலையில் பெற்றுக்கொள்ளப்படும்

**துரித பணமாற்றுச் சேவையும் செய்ப்படும்**

**D106 - 3331 MARKHAM RD, SCARBOROUGH, ON M1X 1S8**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



416 266 5372

Abbirami

அபிராமி

CATERING & TAKE OUT

2619 EGLINTON AVE. E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 85 வயதுவரை ஆயுட்காப்புறுதி...

எண்பது வயதைத் தாண்டி விட்டோம் இனி நமக்கு Insurance எடுக்கமுடியாமல்
போய்விட்டதே என எண்ணி ஏங்குபவர்கள் அந்த மனக்கவலையை விடுங்கள்.
வைத்திய பரிசோதனை அற்ற காப்புறுதி 85 வயதுவரைக்கும் எடுக்கலாம்.

## அதுவும் மிகக் குறைந்த விலையில்.




**Life**
Universal Life
Whole Life
Term Life

**RESP**
+
20% Government Grant
15% Company Bonus

**RRSP**
Loan Approved
Even SIN Number 9

**Critical Illness**
Upto 25 Illness



**Insurance Broker**

## Guna Selliah

**416.371.7776**

La Capitale  Assumption Life  iA Financial Group

3033 Palstan Road, # 210, Mississauga, ON L4Y 4E7
guna@kabisassociates.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர்
திபாகரன்
யோகசூரியன்

தோற்றம் 12.08.1987
மறைவு 16.07.2017



அமரர்
அருணாசலம்
பத்தினிப்பிள்ளை

மண்ணில் 25.05.1917
விண்ணில் 13.08.2017



அமரர்
ஆறுமுகம்
வல்லிபுரம்

தோற்றம் 10.10.1928
மறைவு 17.08.2017



அமரர்
இராமலிங்கம்
கந்தப்பு

மண்ணில் 16.09.1928
விண்ணில் 25.08.2017




அமரர்
சின்னையா
இராஜநாயகம்

தோற்றம் 03.09.1924
மறைவு 25.08.2017



அமரர்
சரவணமுத்து
கணேசமூர்த்தி

மண்ணில் 06.09.1950
விண்ணில் 12.09.2017



அமரர்
ஏகாம்பரம்
நடராஜா

மண்ணில் 22.02.1941
விண்ணில் 30.09.2017



அமரர்
சிவகாமசுந்தரி முருகேசு
[நாகம்மா]

தோற்றம் 01.02.1931
மறைவு 06.10.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அமரர்**
**சுப்பிரமணியம்**
**தனுக்கோடி**

மண்ணில் 17.12.1923 விண்ணில் 19.10.2017



**அமரர்**
**வைத்திலிங்கம்**
**திவ்வியநாதன்**

மண்ணில் 07.04.1955 விண்ணில் 16.10.2017



**அமரர்**
**சண்முகலிங்கம்**
**தனேசன்**

மண்ணில் 06.08.1979 விண்ணில் 21.10.2017



**அமரர்**
**ஞானம்மா**
**வரராஜசிங்கம்**

மண்ணில் 05.04.1937 விண்ணில் 31.10.2017



**அமரர்**
**லோகன்**
**கலைச்செல்வி**

மண்ணில் 12.07.1968 விண்ணில் 31.10.2017



**அமரர்**
**சுப்பிரமணியம்**
**கோபாலப்பிள்ளை**

மண்ணில் 19.03.1939 விண்ணில் 26.11.2017



**அமரர்**
**கந்தையா**
**தங்கம்மா**

மண்ணில் 30.10.1927 விண்ணில் 01.12.2017




**அமரர்**
**கணபதிப்பிள்ளை**
**தம்பையா**

தோற்றம் 12.07.1929 மறைவு 01.12.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சார்ந்த நன்றிகள்:

இன்றைய இனிய கலைமாலைபொழுதினிலே இனிய இருபத்திஇரண்டாவது ஆண்டு மலரும் பூவரசம் பொழுதினை கண்டு குதூகலித்துக் கொண்டிருக்கும் அனைத்து எம் உறவுகளை நன்றி நவிலலில் சந்திப்பதையிட்டு பேருவுவகை கொள்கிறோம்.

எமது அழைப்பை ஏற்று பிரதமவிருந்தினராக வருகை தந்து சிறப்பித்த எஸ். கருணைலிங்கம் அவர்களுக்கும்...

சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்த தேனுசா பரணி அவர்களுக்கும்

இம் மலர் அழகுற ஆசியுரை, வாழ்த்துரை, கட்டுரைகள் வழங்கிய அனைவருக்கும்...

இவ் விழாவுக்கான நிகழ்வுகளை வழங்கிய கலைஞர்களுக்கும்,..
நடன ஆசிரியைகளுக்கும்...

இவ்விழா சிறப்புற விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தக பெருமக்களுக்கும்...

"மு.தவின் மெய்யுளிதழ்" என்னும் பூவரசம் பொழுது மலர்தனை அழகுற பதிப்பித்த Graphic Land உரிமையாளர் திரு. கிருஷ்ணா மாஸ்ரர் அவர்கட்கும்...

நிகழ்வுகளை படமாக்கி கொண்டிருக்கும் VMP வீடியோ ஸ்தாபனத்தினருக்கும்.. ஊடகத் துறை சார்ந்த அனைத்து நண்பர்களுக்கும்...

ஒலி, ஒளி அமைப்பை செய்து கொண்டிருக்கும் STAR MAX அன்பர்களுக்கும்...

தங்களின் சிறப்புமிக்க நேரங்களை எல்லாம் சங்க வளர்ச்சி கருதி அர்ப்பணித்த நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது இதயம்கனிந்த நன்றிகள் என்று ஒற்றை வரியில் சொல்வதை தவிர்த்து இந் நிகழ்வின் வெற்றி இவர்களுக்கே உரியது.

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chapel Ridge

FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை
உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.




### *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

*• Vistation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை







**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
416-993-0826

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choiceõ*

**FINANCIAL BENEFITS**

òLock in the cost at todayís prices
?òConvenient time payments
?òInsured against early death


**EMOTIONAL BENEFITS**

?òLetting your family know your wishes
?òPeace of mind to you & your family
?òRelieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com ò Email: info@chapelridgefh.com

*A caring part of our community*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




GRAPHICLAND - 416 412 0900
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org